www.tamilarangam.net
தந்துதவியவர்: தேசம்நெற்


# தமிழோசை

THAMIZHOSAI

ஓசை :1
ஒலி :5
ஆங்கீரஸ ஹூ ஆவணி மீ 12ந் திகதி (28-8/11-9-1992) 253 Western Avenue London W3 0PP Tel: 44-(0)81-993 7652 Fax: 44-(0)81-993 8611


உள்ளே.....


* ஹிந்து ராம் செவ்வி
* சரிவுப் பாதையில்..
* யாழ்ப்பாணத் தமிழ்
* எழில் பெருகும் சீசெல்ஸ்
* நெறியும் நெருஞ்சிலும்
* உலக அரங்கில்..
* சிறுகதை


## யாழ்ப்பாணத்தில்
# இராணுவம் கைப்பற்றிய பகுதியில் புலிகள் தாக்குதல்

**(கொழும்பு)**

**யாழ்ப்பாணத்தில் அண்மையில் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட மாதகல் பகுதியில் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையே நேற்று முன்தினம் புதன்கிழமை காலை பலத்த யுத்தம் மூண்டது. இதில் 2 இராணுவத்தினரும் 20 புலிகளும் கொல்லப்பட்டதாக இராணுவ தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.**

யாழ்ப்பாணம் அராலித்துறையில் இம்மாதம் 8ஆம் தேதி வடபகுதிக்கான பாதுகாப்புப்படைத் தளபதி மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ உட்பட 10 இராணுவ உயர் அதிகாரிகள்கொல்லப்பட்டதையடுத்து 20ந்தேதி 'பூமி அதிர்ச்சி1' என்ற பேயரில் புதிய படைத்தளபதி மேஜர் ஜெனரல் ஜெரிக் சில்வா தலைமையில் இராணுவ தாக்குதல் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் பட்டன. 20ஆம் தேதி காலை ஆரம்பித்து காங்கேசன்துறை, தெல்லிப்பழை, சேந்தாங்குளம் ஊடாக மறுநாள் மாலை மாதகல் வரையான பகுதிகளை இந்நடவடிக்கைகளில் இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். மாதகல் 3 கடற்புலிகளின் முகாம்கள் தகர்க்கப்பட்டதாக இராணுவம் அறிவித்தது. ஆனால்இதில் உயிரிழந்தவர்கள் தெரியவில்லை.

விபரம் எதுவும் இருதரப்பிலும்

இப்பகுதிகளில் 'பங்கர்களை' அமைப்பதிலும் கண்ணி வெடிகளை அகற்றுவதிலும் கடந்த சில தினங்களாக இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை 'பூமி அதிர்ச்சி-2'க்கு இராணுவத்தினர் மும்முரமாக திட்டமிட்டனர். இது எப்போது ஆரம்பிக்கப்படுமென்பது தெரியாத போதும் பலாலியிலிருந்து தொண்டமானாறு ஊடாக வல்வெட்டித்துறை வரை இது தொடரலாமென்று ஊகிக்கப்பட்டது. தரைமார்க்கமாக கட்டுப்பாடுகளை விஸ்தரிப்பது இதன் நோக்கம்.

அதன் பின்னர் 3வது நடவடிக்கை யாழ். நகரை நோக்கியதாகலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த மாதகலில் சுமார் 30 விடுதலைப்புலி வீரர்கள் இராணுவத்தினர் மீது தாக்குதல்களை மேற்கொண்டதாக சொல்லப்படுகிறது. புலிகளின் இத்தாக்குதலில் இராணுவ தரப்பில் 2 கொல்லப்பட்டதாகவும் 4 பேர் காயமடைந்ததாகவும் தெரிவித்த கூட்டுப்படை பேச்சாளர் சரத் முனசிங்க, இராணுவத்தினரின் எதிர்த் தாக்குதலில் பல புலிகள் கொல்லப்பட்டதாகவும் எனினும் 12சடலங்களையே தாம் கைப்பற்றியதாகவும் தெரிவித்தார். மேலும், 8 புலிப்படையினரின் சடலங்ளைத் தாம் பார்த்ததாகவும் ஆனால் அவற்றைக் கைப்பற்ற முடியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த தாக்குதலின் போது பொது மக்களில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் 2 பேர் காயமடைந்ததாகவும் அவர்கள் பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதாகவும் தெரிவித்த திரு முனசிங்க, காயமடைந்தவர்களில் ஒருவர் தாம் புலிகளின் குண்டினாலேயே காயப்பட்டதாக சொன்னதாவும் தெரிவித்தார். புலிகளிடமிருந்து துப்பாக்கிகள், வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இப்பகுதிகளில் இன்னமும் இராணுவ மோதல்கள் தொடர்வதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன. கும்புறுப்பிட்டியவில் 3 எரிபொருள் வண்டிகளை விடுதலைப்புலிகள் கடத்திச் சென்றபோது விமானப் படையினர் அந்த வண்டிகளை நாசமாக்கினர்.

# பத்மநாபா கொலை வழக்கு: குற்றப்பத்திரங்கள் கையளிப்பு

(சென்னை)

**பத்மநாபா கொலை வழக்கில் எதிரிகளாக சேர்க்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி ஜகதீசன், முன்னாள் உள்துறைச் செயலர் நாகராஜன் உள்ளிட்ட 18 பேருக்கு வியாழனன்று குற்றப்பத்திரிகை நகல் தரப்பட்டது.**

பிரிவினைவாத அமைப்பான தமிழ் தேசிய மீட்புப்படை புலிகளுக்கு எதிராகத் தமிழகத்தில் செயல்படுபவர்களைத் தீர்த்துக் கட்டத் திட்டமிட்டிருக்கிறது என இந்தப் படையினருக்கு எதிராக போலீசார் தாக்கல் செய்துள்ள குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது மட்டுமன்றி அரசியல் தலைவர்களைக் கொலை செய்து தமிழ்நாட்டில் குழப்பம் ஏற்படுத்தி தனித் தமிழ்நாட்டை உருவாக்கப் படையினர் திட்டமிட்டிருந்தனர் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

இந்தப் படையின் தளபதியான ரவி என்ற ரவிச்சந்திரன் தனது வாக்குமூலத்தில் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார். மீட்புப்படையினர் புலி ஆதரவு நடவடிக்கைகளில் மட்டுமே ஈடுபட்டனர். அவர்களுக்குத் தனித் தமிழ்நாடு அடையும் நோக்கம் இல்லை. க்யூ பிரிவு தீவிரவாதிகள் தடுப்புப் போலீசாரின் கற்பனையில் உதித்ததுதான் அவர்களின் தனித்தமிழ் நாடு திட்டம் என்று துவக்கத்தில் எழுந்த விமர்சனத்தை அப்பிரிவு அதிகாரிகள் மறுத்தனர்.

மீட்புப்படையினர் ஆயுதப் பயிற்சி பெற்றது. தங்கள் வசம் ஆயுதம் வெடி மருந்துப் பொருள்களை வைத்திருந்தது மற்றும் கோவை ராமகிருஷ்ணன் தலைமையிலான திராவிடர் கழகத்தினர் இந்தப் படையில் உறுப்பினராக இருந்தது ஆகியவை மூலம் இந்தப் படையினரின் பிரிவினைவாத நோக்கத்தை அறிந்து கொள்ளலாம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

பத்மநாபா கொலை வழக்கில் எதிரிகளாக சேர்க்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி ஜகதீசன், முன்னாள் உள்துறைச் செயலர் நாகராஜன் உள்ளிட்ட 18 பேருக்கு வியாழனன்று குற்றப்பத்திரிகை நகல் தரப்பட்டது.

பத்மநாபா கொலை வழக்கில் 12-ம் தேதி குற்றப்பத்திரிகை சிறப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டது. இதில் 26 பேர் எதிரிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். சிவராசன், குண்டு சாந்தன் ஆகியோர் இதில் இறந்து விட்டனர். பொட்டு அம்மான், டேவிட், திலீபன், டேனியல், ரவி,நாகராஜா ஆகியோர் தலைமறைவாக உள்ளவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கில் முன்னாள் உள்துறைச் செயலர் நாகராஜன், வழக்கறிஞர்கள் வீரசே கரன், மருதநாயகம் ஆகியோர் ஏற்கனவே நிபந்தனை ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டனர். முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி அவரது கணவர் ஜகதீசன், வை.ரவிச்சந்திரன் ஆகிய மூவரும் வழக்கில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட பின்னர் உச்சநீதிமன்ற தீர்ப்பையடுத்து நிபந்தனை ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.


பத்மநாபா கொலை வழக்கில்

(14ம் பக்கம் பார்க்க)

# சபாஷ் சங்கர்!

(நமது நிருபர்)

**கேம்பிரிட்ஜ் ஹில்ஸ் றோட் கல்லூரி மாணவர் செல்வன் சங்கர் மகாலிங்கம் கடந்த வாரம் வெளியான உயர்தர பரீட்சையில் நான்கு பாடங்களில் அதி திறமைச் சித்தி பெற்றதுடன் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக உயர்கணித தேர்விலும் முதன்மைச் சித்தி பெற்றுள்ளார்.**



கணிதம், உயர்கணிதம், இரசாயனம், உயிரியல் ஆகிய பாடங்களில் சங்கர் இந்த சித்திகளைப் பெற்றுள்ளார். இவரது கல்லூரியிலிருந்து 300 பேர் இப்பரீட்சைக்குத் தோற்றி 6 பேர் 4 பாடங்களில் அதிதிறமைச் சித்தி பெற்றிருந்தாலும் பல்கலைக் கழகத் தேர்விலும் பெற்ற சித்தியினால் இவர் 'அங்கிலியன்' தொலைக்காட்சி செய்தியிலும் இடம்பெற்றார். ஹில்ஸ் றோட் கல்லூரி கடந்த ஆண்டில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற நாடுமுழுவதினதும் அதி சிறந்த 10 கல்லூரிகளில் ஒன்றாகும். சங்கர் அக்கல்லூரியின் மாணவர் சபையின் தலைவருமாவார்.

கணிதத்திலேயே தன்னுடைய உயர்படிப்பைத் தொடர்வதில் நாட்டங்கொண்டிருந்த சங்கருக்கு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக புலமைப்பரிசில் கிடைத்திருக்கிறது. பெறுபேறுகளையிட்டு தாம் மிகுந்த மகிழ்ச்சி கொண்டிருப்பதாகத் தெரிவித்த சங்கர் உயர்தர பரீட்சையின் பெறுபேற்றில் தமக்கு மிகுந்த நம்பிக்கையிருந்ததாகவும் ஆனால் பல்கலைக்கழகத் தேர்வின் முடிவுதான் சற்று யோசனையையூட்டியதாகவும்சொன்னார்.

சிறுவயதிலிருந்தே கணிதத்தில் ஈடுபாடு கொண்டிருந்த இவர், இதற்கு முன்னர் மற்றொரு பிரசித்திபெற்ற பாடசாலையான கிங்ஸ்ரன் ரிவ்பின் ஆண்கள் பாடசாலையில் றோயல் இன்ஸ்ரிரியூட் நடத்தும் மாஸ்டர் வகுப்புகளிலும் கணிதத்தில் பங்குபற்றி சித்திபெற்றிருக்கிறார்.

ஏராளமான மாணவர்கள் இம்முறை உயர்தரப்பரீட்சையில் சித்திபெற்றி ருப்பதால் அதனைச் சமாளித்து கூடுதலான மாணவர்களுக்கு அநுமதியளிக்கும் விதத்தில் பல்கலைக்கழகங்களும் தொழில் நுட்பக் கல்லூரிகளும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.


சங்கர் கேம்பிரிட்ஜைச் சேர்ந்த பொறியியலாளர் திரு மகாலிங்கம் திருமதி சிவா மகாலிங்கம் தம்பதிகளின் புதல்வர். கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி இன்னும் பல தமிழ் மாணவ மாணவியர் 3 பாடங்களில் அதிதிறமைச் சித்தியைப் பெற்றிருக்கிறார்கள். இவர்களில் சிலர் இலங்கையில் தமிழ்மொழிமூலம் பயின்ற பின்னர் லண்டன் வந்த ஓரிரு ஆண்டுகளில் இப்பரீட்சைக்குத் தோற்றியவர்கள்.

லண்டனிலிருந்து வெளியாகும் அனைத்துலக தமிழர் பத்திரிகை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மரண அறிவித்தல்



## செல்வி லக்ஷினி விவேகானந்தா (லக்ஷி)

**தோற்றம்: 18.9.77. மறைவு: 20.8.92.**

South Woodford விவேகானந்தா(விவே) ஜெயகுமாரி(ஜெயா) தம்பதிகளின் அன்புச்செல்வமும் சிரேஷ்ட புத்திரியுமான லக்ஷினி காலமாகிவிட்டார்.

இவர் ஜனனியின் அன்புச் சகோதரியும் காலம்சென்ற திரு,திருமதி குமாரசாமி, காலம் சென்ற திரு கனககுலசிங்கம், திருமதி கனககுலசிங்கம் அவர்களின் பேத்தியும் சிவதாசன்-ஜெகதாம்பிகை (Colombo), லிங்கதாசன்(Toronto), ஜெயராணி(Colombo), ஈஸ்வரதாசன்-ரூபராணி(Hatton), குகதாசன்(Texas), ஜெயக்குமார்-பிறேமா(London), ஜெயபாலசிங்கம்-சாரதா(Toronto), ரட்நேசன்-வனிதா(Montreal) ஆகியோரின் மருமகளும் குமாரதேவன்-சிவலோஜனி(Aberdeen), செந்தில்நாதன்-மீனலோஜனி (வட்டுக்கோட்டை),பூலோகசுந்தரன்-பத்மலோஜனி(Texas), சுத்தானந்தா-கோகிலவதி(Winchester), விபுலானந்தா அமுதா (Toronto), பிரம்மானந்தா-சகுந்தலா(New Jersey), சிவானந்தா-பிலோமினா(Loughton) ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

இவரது ஈமக்கிரியைகள் 25.8.92 செவ்வாய்க்கிழமை City of London Crematorium- Manor Park ல் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

மரணச்சடங்கில் கலந்து ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது இதய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

87 South View Drive
South Woodford
London E18
Tel: 081-530 2862


தமிழோசை

சந்தா படிவம்

தமிழோசை பத்திரிகையை அஞ்சலில் பெற கீழ்க்காணும் விண்ணப்பப் பத்திரத்தை பூர்த்தி செய்து அதற்கான பணத்தையும் காசோலையாகவோ அல்லது தபால் கட்டளையாகவோ அனுப்பி வைக்கவும்.
(Please mark Cheques or Postal Orders Payable to "THAMIZHOSAI")

Name: ______________________

Address: ______________________

______________________

______________________

______________________

Postcode: ______________________


| | UK/Europe | Other Countrys |
|---|---|---|
| 12 Issues | £ 7.00 | Us $ 20.00 |
| 24 Issues | £ 12.00 | Us $ 40.00 |

PLEASE SEND THIS FORM TO
THAMIZHOSAI
253, WESTERN AVENUE
LONDON W3 0PP
UNITED KINGDOM


# பாராட்டும் வெளியீட்டு விழாவும்

(நமது நிருபர்)

கடந்த சில தினங்களாக் லண்டனில் பல இடங்களில் திருமுறைக் கச்சேரிகளை நிகழ்த்தி வந்த தமிழ் நாடு திருப்பானந்தாள் காசிமடத்



தின் ஓதுவார் கலைமாமணி, திருமுறைக் கலாநிதி கோ.முத்துக்கந்தசாமி தேசிகருக்கு பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கம் பாராட்டு வைபவம் ஒன்றை இம்மாதம் 29ஆம் தேதி சனிக்கிழமை பி.ப.2.30மணிக்கு லண்டன் ஸ்ரீ முருகன் கோவில் மண்டபத்தில் நடாத்துகின்றது. விம்பிள்டன் கணபதி கோவில், லண்டன் ஸ்ரீ முருகன் கோவில், உயர்வாசற் குன்று திருமுருகன் கோவில், லண்டன் மெய்கண்டார் ஆதீனம் ஆகியவற்றின் பிரமுகர்களும் இந்த வைபவத்தில் உரையாற்றுவார்கள்.

திருமதி மாதினி சிறிஸ்கந்தராசா பாடியுள்ள 'பண்ணிசைப் பாமாலை' ஒலிப்பதிவு நாடா வெளியீடும் அங்கு இடம்பெறும். இவற்றைத் தொடர்ந்து தேசிகரின் 'தமிழோடிசைபாடல்' கச்சேரி நடைபெறும்.


THE BRENT ASIAN ACADEMY

5 வயது முதல் ADVANCED LEVEL வரைக்குமான வகுப்புகள்

Science, Maths
Computing, English

வகுப்புகள் சனிக்கிழமை தோறும்
காலை 9.30 முதல் நடைபெறும்

Alperton High School
Ealing Road
Alperton

விளையாட்டு வசதிகளும் உண்டு

Trained Graduate Teachers

Phone:
NALA - 081- 866 3363
RUDRA - 081 423 1028



வேல்ஸ் ஸ்கந்த வேல் ஆலய
கருணை இல்ல நிதிக்காக

JUMBLE SALE

05-09-1992 சனிக்கிழமை
காலை 10 மணிக்கு

LITTLE HALL

DURNSFORD ROAD
WIMBLEDON SW 19

மாலை 3 மணிக்கு

SPONSORD WALK FOR 7 MILES
AT
RICHMOND PARK

குரு சுப்பிரமணிய சுவாமியும்
கலந்து கொள்வார்
அனைவரும் வருக
ஆதரவு தருக


# மரண அறிவித்தல்



## திரு சந்திரகாசன் சுப்பிரமணியம்

**தோற்றம்:11.11.1937 மறைவு:22.8.1992**

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட சந்திரகாசன் சுப்பிரமணியம்(அம்பியா) ஜெர்மனியில் காலமானார்.

இவர் இளைப்பாறிய தலைமை ஆசிரியர் செல்லையா சுப்பிரமணியம் காலம் சென்ற பரமேஸ்வரி சுப்பிரமணியம் ஆகியோரின் செல்வப்புதல்வரும், இராஜலக்ஷ்மியின் அன்புக்கணவரும், ரஜனி, துர்க்காதேவி, சிவகர்ணன் ஆகியோரின் அன்புத்தந்தையும், திருமதி சந்திராதேவி சீனிவாசகம்(கனடா), காலம் சென்ற திருமதி சாராதாதேவி கார்த்திகேசு, திருமதி சகுந்தலாதேவி சிவஞானம்(உடுவில்), திருமதி சரோஜினிதேவி நித்தியானந்தன்(லண்டன்), திருமதி சாவித்திரிதேவி ஸ்ரீஹரன்(லண்டன்), திருமதி சக்திதேவி கிருஷ்ணகுமார்(லண்டன்), டாக்டர் சந்திரராஜன்(லண்டன்), திருமதி சாந்திதேவி தர்மரட்ணம்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன்

179, Norval Road, North Wembley
Middlesex .HAO 3SX
தொலைபேசி: 081-904 3937
081-904 5939



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கருணாநிதி மீது விசாரணை கமிஷன்

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதியின் மீது விசாரணைக் கமிஷன் அமைப்பது என்று முடிவு செய்யபபட்டது. கருணாநிதி முதல்வராக இருந்தபோது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியது. லஞ்சம், ஊழல், வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டியது, போன்ற பல்வேறு குற்றச் சாட்டுகளின் மீது விசாரணை செயய் கமிஷன் ஒன்றை தமிழக அரசு நியமித்திருக்கிறது. ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி சிவசுப்பிரமணியம் இந்த விசாரணைக் கமிஷனின் தலைவராக நியமிக்கப்படடிருக்கிறார். முன்னாள் முதல்வர் மீதான புகார்களை விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க விசாரணைக் கமிஷனை தமிழக அரசு கேட்டுக கொணடிருக்கிறது.

கடந்த ஆண்டு ஜனவரி 2ம் தேதியன்று காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி அப்போதைய பிரதமர் சந்திர சேகரிடம் தி.மு.க. தலைவர் கருணாநிதி மீது புகார் பட்டியலையும், மனு ஒன்றையும் கொடுத்தார். அந்த மனுவை ஏப்ரல் மாதம் மத்திய அரச மாநில அரசுக்கு அனுப்பி குற்றச் சாட்டுகள் மீது தேவையான நடவடிக்கை எடுக்கவும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அறிக்கை அனுப்பவும் கேட்டுக் கொண்டது. இந்தப் புகார் மனுவை தமிழக அரச விசாரணைக்காக போலீஸ் டி.ஜி.பிக்கு புலனாய்வுத்துறை மூலம் அனுப்பி வைத்தது. விசாரணை முடிந்ததும் 'கருணாநிதி மற்றும் அவரது குடும்பத்தினர் மீது கூறப்பட்ட குற்றச் சாட்டுக்களில் சில புகார்களின் மீது அடிப்படை ஆதாரம் உள்ளதாகத் தெரிகிறது' என்று டி.ஜி.பி தன் அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

பின்னர் கடந்த ஆண்டு ஜுலை மாதம் பிரதமர் நரசிம்மராவ், முதல்வர் ஜெயலலிதாவுக்கு முன்பு வாழப்பாடி ராமமூர்த்தி அனுப்பிய பழைய புகார் மனுவின் பிரதியை மீண்டும் அனுப்பி விசாரிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையில் காங்கிரஸ் எம்.எல்.ஏ.சிங்காரம், குடியரசுக் கட்சி எம்.எல்.ஏ.தமிழரசன் ஆகியோர் கடந்த ஏப்ரல் 27ம் தேதியன்று கருணாநிதி மீதான புகார்ப்பட்டியலை முதல்வர் ஜெயலலிதாவிடம் கொடுத்தனர். இதுவும் டி.ஜி.பிக்கு அனுப்பப் பட்டது.

சில குற்றச்சாட்டுக்கள் உண்மை என்றும், குற்றச்சாட்டுகளை முழுமையாக விசாரிக்க விசாரணைக் கமிஷன் அமைக்லாம் என்றும் காவல்துறை தமிழக அரசுக்கு ஆலோசனை வழங்கியது. அந்த அடிப்படையில் விசாரனைக் கமிஷன் அமைப்பது என்ற முடிவை சில நாட்களுக்கு முன்பு செல்வி ஜெயலலிதா தலைமையிலான அமைச்சரவை எடுத்தது.

76ம் ஆண்டு அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தி கருணாநிதி மீது கூறிய ஊழல் புகார்கள் குறித்து உச்ச நீதி மன்ற நீதிபதியாக இருந்த ஆர்.எஸ் சர்க்காரியா தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைக்கப் பட்டது நினைவிருக்கலாம். கருணாநிதி சந்திக்கும் இரண்டாவது கமிஷன் இப்போது அமைக்கப்பட்டிருக்கிற விசாரணை கமிஷன். விசாரணைக் கமிஷன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள நீதிபதி சிவசுப்பிரமணியம் ஈரோடு அருகிலுள்ள அரச்சலூரைச் சேர்நதவர். உயர் நீதிமன்ற வழக்கறிஞராகவும், பின்னர் நீதிபதியாகயும் பணியாற்றி ஓய்வு பெற்ற பின் சுப்ரீம் கோட்டில் சீனியர் வழக்கறிஞராக பணியாற்றி வந்தார்.

# புலிகளுக்கெதிரானவர்களை தீர்த்து கட்ட திட்டம்

(சென்னை)

பிரிவினைவாத அமைப்பான தமிழ் தேசிய மீட்புப்படை புலிகளுக்கு எதிராகத் தமிழகத்தில் செயல்படுபவர்களைத் தீர்த்துக் கட்டத் திட்டமிட்டிருக்கிறது என இந்தப் படையினருக்கு எதிராக போலீசார் தாக்கல் செய்துள்ள குற்றப்பத்திரிகையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இது மட்டுமன்றி அரசியல் தலைவர்களைக் கொலை செய்து தமிழ்நாட்டில் குழப்பம் ஏற்படுத்தி தனித் தமிழ்நாட்டை உருவாக்கப் படையினர் திட்டமிட்டிருந்தனர் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

இந்தப் படையின் தளபதியான ரவி என்ற ரவிச்சந்திரன் தனது வாக்குமூலத்தில் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார். மீட்புப்படையினர் புலி ஆதரவு நடவடிக்கைகளில் மட்டுமே ஈடு பட்டனர். அவர்களுக்குத் தனித் தமிழ்நாடு அடையும் நோக்கம் இல்லை. க்யூ பிரிவு தீவிரவாதிகள் தடுப்புப் போலீசாரின் கற்பனையில் உதித்ததுதான் அவர்களின் தனித் தமிழ்நாடு திட்டம் என்று துவக்கத்தில் எழுந்த விமர்சனத்தை அப்பிரிவு அதிகாரிகள் மறுத்தனர்.

மீட்புப்படையினர் ஆயுதப் பயிற்சி பெற்றது. தங்கள் வசம் ஆயுதம் வெடி மருந்துப் பொருள்களை வைத்திருந்தது மற்றும் கோவை ராமகிருஷ்ணன் தலைமையிலான திராவிடர் கழகத்தினர் இந்தப் படையில் உறுப்பினராக இருந்தது ஆகியவை மூலம் இந்தப் படையினரின் பிரிவினைவாத நோக்கத்தை அறிந்து கொள்ளலாம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தஞ்சை சின்னங்கள் பாதுகாக்கப்படும்

(சென்னை)

தஞ்சை அரண்மனையில் கலைச் சின்னங்களை பாதுகாக்க தனிக்குழுதஞ்சாவூர் அரண்மனை வளாக வரலாற்று சிறப்புமிக்க கலைச் சின்னங்களை பாதுகாக்க ஒரு பிரத்தியேக ஆலோசனைக் குழு அமைக்கப்படும் என்று தஞ்சை மாவட்ட கலெக்டர் சண்முக ராஜேஸ்வரன் கூறியிருக்கிறார். தஞ்சையில் நடைபெற்ற 'மங்கள இசை மன்னர்கள்' 'நந்திராம்' (ஆயிரத்தாழி) ஆகிய தலைப்புகளில் ஆன இரண்டு நூல்களின் வெளிமீட்டு விழாவில் தலைமை தாங்கி கலெக்டர் உரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்ததாவது; 'தனிசிறப்பு வாய்ந்த உலகப்புகழ் பெற்ற பல கலைச் சின்னங்கள் தஞ்சைக்குப் பெரும் பொக்கிஷங்களாகக் கிடைத்திருக்கின்றன. தஞ்சை அரண்மனை வளாகத்திலுள்ள கலைக்கூடம், சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சை பெரிய ஆலையம் போன்றவை அவற்றில் அடங்கும்.

இந்த அரிய கலைச் சின்னங்களைப் போற்றி பாதுகாக்க ஆலோசனைக்குழு ஒன்று விரைவில் அமைக்கப் படவிருக்கிறது. கலைக்கூடத்தில் வைக்கப்பட்டுள்ள புராதன சிலைகளை அவற்றின் அழகும் மெருகும் குலையாமல் பாதுகாப்பதற்காக லக்னோ நகரில் உள்ள ஆய்வு மைய குழுவினர் தஞ்சாவூருக்கு வர இருக்கிறார்கள். அவர்கள் இங்கேயே தங்கி சிலைகளைப் பராமரித்து வருவார்கள். கலைக்கூடம் அருகே உள்ள ஏழு மாடி கட்டிடத்தை பராமரிக்கவும், பெரிய கோவிலின் மதில் சுவர், அகழி போன்றவற்றை புதுப்பிக்கவும், சரஸ்வதி மகால் நூல் நிலையத்தில் ஓலைவடிவில் இருக்கும் பயனுள்ள விபரங்களை நூல் வடிவில் கொண்டு வரவும் முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன". இவ்வாறு மாவட்டக் கலெக்டர் கூறினார்.

# கொழும்பில் குண்டு புரளி

கொழும்பில் குண்டுகளுடன் விடுதலைப்புலிகள் நுழைந்துள்ளனர் என மீண்டும் அரசு புரளியைக் கிளப்பி விட்டுள்ளது. கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும், குண்டு வெடிப்புச் சம்பவங்களை மேற்கொள்ள அம்புலன்ஸ் வண்டி ஒன்றில் விடுதலைப்புலிகள் வந்துள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், எத்தகைய நடவடிக்கைகளையும் எவ்விடத்திலும் முறியடிக்க படைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் அறிவித்துள்ளார்.

இது, கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் தொடர்ந்து வந்த தமிழ் இளைஞர்கள் கைது நடவடிக்கையை மேலும் உசார் படுத்தியுள்ளது.

# உயிரை விடுவேன் -ஜெயலலிதா

"தமிழ் நாட்டில் புலிகளின் முதுகெலும்பை உடைப்பதற்கு தான் எடுக்கும் முயற்சிகளை சிறிதளவேனும் தளர்த்தவில்லை என்றும், நாட்டில் இறமை, ஒருமைப்பாடு, ஜக்கியம் ஆகியவற்றைப் பாதுகாக்கவும், புலிகளின் தொல்லைகளை ஒழிப்பதற்கும் தனது உயிரைக் கூட தியாகம் செய்ய தயாராக இருப்பதாகவும் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் கொலைப் பட்டியலில் இருந்து தனது பெயரை நீக்க விடுதலைப் புலிகளுக்கு பணமும், பாதுகாப்பும் கொடுத்தார் என்ற முன்னாள் இரகசிய சட்டத் துறை அமைச்சரின் குற்றச்சாட்டுக்கு முதல்வர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

# இரண்டாமிடம்

இலங்கையில் நாள் ஒன்றறுக்கு சராசரி 20 தற்கொலைச் சம்பவங்கள் இடம் பெறுவதாக பொலீஸ் மா அதிபரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்திலேயே அதிகப்படியான தற்கொலை மரணங்கள் சம்பவிப்பதாகவும், கணக்கிடப்பட்டுள்ளது. 16 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட வயதினரே,-இவ்விதம் தம்மை மாய்த்துக் கொள்ளுபவர்கள். "தற்கொலைகளின்" விகிதம் 'ஒரு பெண்ணிற்கு மூன்று ஆண்கள்' என்றும் புள்ளி விபரங்கள் கோடிட்டுள்ளன.

ஆச்சரியமென்னவெனில், தற்கொலை எண்ணிக்கையில், உலகநாடுகள் வரிசையில் இலங்கை, இரண்டாவது இடத்தை வகிப்பதாக 'மார்க்கா' ஆய்வு சஞ்சிகை வெளிப் படுத்தியுள்ளது.

# செய்திச் சரம்

யாழ்-குடாநாட்டுப் பகுதிகளுக்கு கொண்டு செல்ல தடை விதிக்கப் பட்டிருந்த பொருட்களில் விவசாய உப பொருட்களுக்கான தடை தளர்த்தப்பட்டுள்ளன. நீரிறைக்கும் இயந்திரம், மருந்து தெளிக்கும் உபகரணங்கள், மண்வெட்டி போன்ற பொருட்ககளுக்கான தடை நீக்கப்பட்ட செய்தி குடாநாட்டு விவசாயிககளுக்கு சற்று ஆறுதல் தரும் செய்தியாகும்.

*****

யாழ் பலாலி இராணுவ முகாம் உட்பட சூழவுள்ள இராணுவ முகாம்களுக்கும், இராணுவ உயர் அதிகாரிகளுடன் விஜயம் செய்த விஞ்ஞான, கைத்தொழில் அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க நிலைமைகளைப் பார்வையிட்டதுடன் விடுதலைப்புலிகளை வெற்றி கொள்ளும் வரை புதிய தளபதிக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென இராணுவத்தினர் மத்தியில் பேசியுமுள்ளார்.

*****

அம்பாறையில் ரோந்து சென்ற பொலீசார் மீது விடுதலைப்புலிகள் மறைந்திருந்து மேற்கொண்ட தாக்குதலில் நான்கு பொலீசார் கொல்லப்பட்டார்கள்.

*****

அராலித்துறையில் கொல்லப் பட்ட இராணுவ தளபதிகளின் கொலைகளை விசாரிக்க நியமிக் கப்பட்ட முன்னாள் உயர் நீதி மன்ற நீதியரசர் ஐ.எம்.ஸ்மாயில் தலைமையிலான தனி நபர் ஆணைக்குழு சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டுள்ளது.

*****

யாழ் ஓட்டுமடம் பகுதியில் தொடர்ச்சியான ஷெல் வீச்சில் இளம் பெண் ஒருவர் பலியானதுடன் ஆண் ஒருவரும் காயமடைந் துள்ளார்.

*****

மட்டக்களப்பு மாவட்டத்தில் வரலாறு காணாத கடும் வரட்சி ஏற்பட்டுள்ளது. பலமான 'கச்சான்' காற்றுடன் பல மாத மழை கண்டிராத மட்டக்களப்பு பிரதேசம் வறண்ட பூமியாகி பொது மக்கள் மட்டுமல்ல, கால் நடைகளுமே குடிநீரிற்கு அலையும் அவலத்தை உண்டு பண்ணியுள்ளது.

*****

குடாநாட்டில் "பூமியதிர்ச்சி" இராணுவ நடவடிக்கை முழு நேர ஊரடங்கு பிரகடனப்படுத்தலுடன் ஆரம்பமானது. பலாலி முகாம் படைகள், தெல்லிப்பளை ஊடாக மாதகல் நோக்கி தரைமார்க்க நகர்வுகளை மேற்கொண்டது. அதிகாலை முதல் முன்னறிவித்தலேதுமின்றி தொடர்ச்சியான செல், கடற்பீரங்கி, விமானக் குண்டு வீச்சுக்களை நிகழ்த்தியபடி மாலை 4 மணியளவில் நகர்வுகளை ஆரம்பித்தன.

விடுதலைப் புலிகளின் அதிகளவு எதிர்ப்புகளின்றி அன்று மாலையே இரண்டரை கிலோ மீற்றர் தூரம் படைகள் சுலபமாக கிடந்ததாக கூட்டுப்படைத் தலைமையகம் கூறியது.

*****

விடுதலைப் புலிகளுக்கு அரசு ஆயுதங்களை வழங்கி மீண்டும் உயிர் கொடுத்து இன்றைய அழிவுகளிற்கு அரசே காரணமாயிருந்ததாக குற்றம் சாட்டி எதிர்க் கட்சிகள் பாராளுமன்றத்தில் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை 60 மேலதிக வாக்குகளால் தோல்வியடைந்தது.

*****

வவுனியா நொச்சிமோட்டை தடைமுகாமில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில், இரு புளொட் இயக்க உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

*****

மன்னார் மாவட்ட பிரதான இராணுவ முகாமான 'தள்ளாடி' முகாமின், விமான ஓடு பாதை பரந்த அளவில் நிர்மாணிக்கப் பட்டுள்ளது. நாட்டின் ஏனைய விமானத் தளங்களுடன் நேரடி விமானத் தொடர்புகளை இது இலகுவாக்க வழியமைத்துள்ளது.

*****

ஆறு பேரை கொலை செய்த பிரபல கொலைகாரன் ஆட்டோ சங்கர் செப்டம்பர் மாதம் 7ம் தேதி சேலம் சிறைச்சாலையில் தூக்கில் இடப்படுகிறான்.

*****

தமிழ் நாட்டில் இருந்து 132 இலங்கைத் தமிழ் அகதிகள் விமானமூலம் திருமலை சீனன் குடா விமானத்தளத்தில் வந்திறங்கினர். சுய விருப்பத்தின் பேரில் இலங்கை திரும்பும் அகதிகளை வவுனியா மாவட்ட தாண்டிக்குளம், நெடுங்குளம், மரக்காரம்பறை பகுதிகளில் தற்காலிகமாக தங்க வைத்து சுமூக நிலை திரும்பியதும் அவரவர் இடங்களுக்கு அனுப்பப் படவிருக்கின்றனர்.

நாடு திரும்ப சுயமாக விருப்பம் தெரிவித்த 33 தமிழர்களில் 23 பேர் இதுவரையில் நாடு திரும்பியுள்ளனர். 19 பேர் அடுத்தடுத்த கட்டங்களில் திருப்பி அனுப்பப் படவிருக்கின்றனர். இவர்களது பராமரிப்பு பொறுப்புக்களை ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலயம் பொறுப் பேற்றுள்ளது. ஏற்கனவே நாடு திரும்பியவர்கள் மன்னார், மடு, மட்டக்களப்பு, உப்புவெளி போன்ற இடங்களில் தங்கி உளளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலக அரங்கில்


## இவ்வார அரசியல் கள கண்ணோட்டம்

அவுஸ்திரேலியா; ஆசிய-குடும்பத்தின் புதிய சம்பந்தியா? ஐரோப்பிய குடும்பத்தின் தள்ளிவைக்கப்பட்ட உறவினரா?

இந்தக் கேள்வி இன்று நேற்றல்ல– ஒரு தலைமுறைக்காலமாக பல்வேறு விதங்களில் கேட்கப்படுகிறது. கடந்த 20 வருடங்களில் ஆசியக் குடும்ப நாடுகள் பற்றி அவுஸ்திரேலியா கொண்டிருந்த கொள்கை

## ஆசிய குடும்பத்தின் புதிய சம்பந்தி

படிப்படியாக மாறிவந்திருக்கிறது. வெள்ளை இன அவுஸ்திரேலியா நாட்டிற்குள் குடியேற வெள்ளையர்கள் மட்டுமே விரும்பி அனுமதிக்கப்படுவர் என்ற கெடுபிடியான




வந்தேறு குடியேற்றக் கொள்கையை அவுஸ்திரேலிய அரசு ரத்துச் செய்து சில வருடங்களாகிவிட்டது.

அவுஸ்திரேலியாவில் இன்று தொழிற்சாலைகளிலும் ஆபிஸ்களிலும் ஆசிய இனத்தவர்களைக் காணலாம்.

அவுஸ்திரேலியாவின் மொத்த ஜனத்தொகையில் 4 சதவிகிதமானவர் இன்று ஆசிய இனத்தவர்கள்! இவ்வாண்டு அவுஸ்திரேலியாவுக்குள் குடியேற அனுமதிக்கப்படவிருக்கும் 80ஆயிரம் வந்தேறு குடிமக்களில் பாதிக்கும் மேற்பட்டோர் வெள்ளையரல்லாத ஆசிய மக்கள் (இந்தியர், இலங்கையர், வியட்நாமியர் போன்றோர்)

இன்று அவுஸ்திரேலியாவில் வாழும் வெள்ளை இன மக்கள் இங்கிலாந்தை தமது தாய்நாடாக கருதுகிறார்கள். அமெரிக்காவை தமக்கு பாதுகாப்பு வழங்கும் ராணுவ காவலனாக கருதுகிறார்கள். தாய்நாட்டு உறவும் ராணுவப் பாதுகாப்பும் இருந்துவிட்டால் போதுமா? சோற்றுக்கு (மன்னிக்கவும்) கோதுமைக்கு- ரொட்டிக்கு- பொருளாதார அபிவிருத்திக்கு வழி என்ன? அவுஸ்திரேலியாவின் இன்றைய பொருளாதாரம்- நாளைய பொருளாதார சுபீட்சம்- ஆசிய நாடுகளில் தான் தங்கியிருக்கிறது. அவுஸ்திரேலியாவின் ஏற்றுமதிப் பொருட்களில் 27 சதவிகிதமானவற்றை இன்று ஜப்பான்தான் வாங்குகிறது. இங்கிலாந்தோ அமெரிக்காவோ அல்ல!

அவுஸ்திரேலியாவின் நிலக்கரி, இரும்பு, தங்கம் போன்றவை இந்தோனேசியா, தாய்வான், தென் கொரியா போன்ற ஆசிய நாடுகளுக்கு பெருமளவில் ஏற்றுமதியாகிறது. இப்படி ஆசியநாடுகளுடன் நெருங்கிய பொருளாதார உறவு கொண்டுள்ள அவுஸ்திரேலியா, ஐரோப்பிய உறவுகளை- இங்கிலாந்தின் நினைவுகளை கிள்ளி எறிய வேண்டும் என்று துணிச்சலாக வெளிப்படையாக பேசிவருகிறார் அவுஸ்திரேலிய நாட்டின் பிரதமர்

அவுஸ்திரேலியாவின் தேசிய கொடியில் ஒரு மூலையில் உள்ள பிரிட்டிஷ் "யூனியன் ஜாக்" கொடிச்சின்னத்தை பிய்த்து எறிவதற்கு காலம் கனிந்துவிட்டது. பிரதமர் கீட்டிங்கின் ஒளிவுமறைவற்ற கருத்துக்கள் அவரது அமைச்சரவை உறுப்பினர்களை திகைப்பில் ஆழ்த்தினாலும், தமது பிரதமர் நாட்டின் பொருளாதாரப்புரட்சியைத் திருத்த ஒத்துக் கொள்கிறார்கள்!

திரு கீட்டிங் பிரதமரான புதிதில் ஏற்படுத்திய சல சலப்பும் இங்கு குறிப்பிடத்தக்கது. அந்த நேரத்தில் பிரிட்டிஷ் பேரரசியார் எலிசபெத் மகாராணி அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்தார். புதிய பிரதமர் கீட்டிங் தமது சகாக்களை மகாராணிக்கு அறிமுகஞ் செய்யும்போது மகாராணியின் "தோளில் கையை வைத்தார்" என்றும் பிரதமரின் மனைவியான திருமதி கீட்டிங் மகாராணியை அரை முழந்தாளிட்டு குனிந்து மரியாதை செலுத்தவில்லை என்றும் பிரிட்டிஷ் பத்திரிகைகள், வானொலி, ரெலிவிஷன் போன்றவை எழுதிக் கிழித்தன. கூக்கிரலிட்டன.இதனால் வெகுண்டெழுந்த பிரதமர் கீட்டிங் நாடாளுமன்றத்தில் தமது கருத்தை முதற்தடவையாக வெளிப்படுத்தினார்.

இன்றும் அவற்றைச் செயற்படுத்தி வருகிறார்.அவரது பதவிக்காலத்திலேயே இந்த 'மாற்றங்கள்' ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

போல் கீட்டிங்! இவர் பதவிக்கு வந்து 8 மாதங்கள் கூட ஆகவில்லை. இந்த 8 மாதங்களில் இவர் ஏற்படுத்தியுள்ள பரபரப்பு- சலசலப்பு, அப்பப்பா! சில வாரங்களுக்கு முன் அவுஸ்திரேலிய நாட்டில் புதிய 5 டொலர் நோட்டு ஒன்று அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது. அந்த புதிய டாலர் நோட்டில் பிரிட்டிஷ் மகாராணியின் உருவம் பொறிக்கப்பட்டிருந்ததைத்கண்ட புதிய பிரதமர் கீட்டிங் தீயை மிதித்தவர் போல துள்ளினார்! "இது ஒரு தேசிய அவமானம்! வெட்கக்கேடு!" என்று கண்டனம் செய்தார்.

"மகாராணியாரை அவமரியாதை செய்யும் நோக்கத்துடன் நான் இதனைக் கூறவில்லை. ஆசியக் கண்டத்தில் புதிய உத்வேகத்துடன் செயற்படும் ஒரு நாடு இன்னும் ஐரோப்பிய முடியாட்சி சின்னங்களைப் பிரதிபலித்தல் அவசியம் தானா?" என்று கேட்டார் கீட்டிங். அவுஸ்திரேலியாவில் 11 சதவீதமானோர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். தாய்வான், ஹொங்கொங் போன்ற நாடுகள் கூட தமது உற்பத்தி வேலையை மலிவான ஊதியமுள்ள வேறு நாடுகளுக்கு அனுப்புகின்றன. இந்த நிலையில் அவுஸ்திரேலியாவில் உற்பத்திக்காக மூலதனம் முதலீடு செய்ய யார் வருவார்கள்?

"இங்கிலாந்து மோகத்தில் நாங்கள் பல வருடங்களை வீணடித்துவிட்டோம்! ஆசிய வட்டகையில், பசுபிக் வட்டகையில் ஒரு நாடு



கீட்டிங்

என்ற முறையில், எமது எதிர்காலம் ஆசிய நாடுகளுடன்தான்! பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் பழைய நினைவுகளில் அல்ல!! என்று அடித்துக் கூறினார் பிரதமர் கீட்டிங்.

## சிங்காரச் சீமை சிங்கப்பூர்

பூமத்திய ரேகைக்கு மிக அருகில் இருக்கும் ஒரு சின்னஞ்சிறு தீவு! அதன் பரப்பளவு இலங்கைத்தீவை விட மிகக்குறைவு. 14ம் நூற்றாண்டில் மீன்பிடித்தொழிலை (கடற்றொழிலை) நம்பியிருந்த இந்த சிறிய தீவின் அன்றைய பெயர் 'தெமா செக்!' இன்றைய பெயர் சிங்கப்பூர்! இடைப்பட்ட காலத்தில இரண்டாவது உலகப்போர்! ஜப்பானிய படைகளினால் ஆக்கிரமிப்பு. பின்னர் மீண்டும் பிரிட்டிஷ் கைகளுக்கு மாறி இறுதியில் சுதந்திரமடைந்த இந்த சிங்காரச்சீமையில் இன்று 26 லட்சம் மக்கள் சீனர்கள், மலாயர், இந்தியர் இன்புற்று வாழ்கிறார்கள். சீனமொழி, மலாய மொழி, ஆங்கில மொழி ஆகியவற்றோடு தேனினும் இனிய எங்கள் தமிழ் மொழியும் அரசு கட்டில் வீற்றி ருக்கும் நாடு சிங்கப்பூர்! இனப்பூசலில் ஈடுபட்டுள்ள பொஸ்னியா, லெபனான் ஆகியவற்றுக்கு மட்டுமல்ல எங்கள் சொந்த இந்திய, இலங்கை நாடுகளுக்கே ஒரு உதாரணமாகத் திகழ்வது சிங்கப்பூர்!

கடந்த 27 வருடங்களில் சிங்கப்பூர் அடைந்துள்ள பொருளாதார அபிவிருத்தியை மற்ற நாடுகள் கற்பனை செய்தும் பார்க்க முடியாது. இந்த வெற்றிக்கு- சுபீட்சத்துக்கு வித்திட்ட பிதாமகர் லீ குவான் யூ. தெருவில் குப்பை போட்டால் அபராதம்! நாட்டுக்குள் போதைப்பொருள் கொண்டு வந்தால் மரணதண்டனை! இது என்ன சர்வாதிகார ஆட்சியா என்று கூட சிலரைக் கேட்க வைக்கும் ஆட்சிப்போக்கு. 'லஞ்ச ஊழல்' இல்லாத ஆட்சி அமைச்சர்கள்! அதிகாரிகள்! கடின உழைப்பை நாட்டிற்கு வழங்கும் மக்கள்! எதற்கும் எல்லாவற்றுக்கும் அரசாங்கத்திடம் 'கையேந்தி' நிற்கும் மக்கள் இல்லாத நாடு சிங்கப்பூர்.

சிங்கப்பூர் நாடு அண்மையில் தனது தேசிய தினத்தை கொண்டாடியது. தலைவர் லீ குவானின் வாரிசான புதிய பிரதமர் கோ சொக் டொங்(GOH CHOK TONG) தேசிய தினக் கூட்டத்தில் 2 மணி நேரம் உரை நிகழ்த்தினார். "எமது அபிவிருத்தியைக் கண்டு திருப்திப்பட்டு நாம் ஓய்ந்துவிடக்கூடாது. முன்னிலையில் நின்ற நியூசீலந்து நாடு இன்று அதன் 'நலன்புரி' (WELFARE) கொள்கைகளினால் பின்தங்கிவிட்டது. பின்னால் தள்ளப்பட்டுவிட்டது! என்று எச்சரித்தார் பிரதமர் 'கோ'.

நாட்டின் அபிவிருத்தியின் ஆசான் முதுபெரும்தலைவர் லீ குவான் யூ முன்வரிசையில் அமர்ந்து புன் முறுவலுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

நலன்புரி கொள்கைகள் அதாவது இலவச மருத்துவம், இலவசக் கல்வி, இலவசப்பணம், இலவச 'எல்லாம்' வழங்கும் கொள்கைகளை எதிர்த்த மேனாட்டுத்தலைவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் மார்கிரட் தாச்சர் அவரது அமைச்சர் நோர்மன் ரெபிட். நாட்டின் சோம்பேறித்தனத்துக்கு- பொருளாதாரத் தேங்கு முகநிலைக்கு இந்தக் கொள்கைகள்தான் காரணம் என்று இந்தத்தலைவர்களுடன் பலர் நம்புகிறார்கள். ஆனால் நம்பி என்ன பயன்? கொள்கையை செயலில் இட துணிச்சல் எவருக்கும் கிடையாது! இலங்கையின் இனத்தகராறும் – இங்கிலாந்தின் பொருளாதாரப் பிரச்னைகளும் தீரவேண்டுமானால் இந்த நாடுகளில் ஒவ்வொரு 'லீ குவான் யூ' தோன்ற வேண்டும். எப்போது தோன்றுவார்?

## அரசியல்வாதியைப் பேட்டி கண்ட அழகி

தென்னாபிரிக்க ஞாயிறுப் பத்திரிகையில் 'கிசு கிசு' கட்டுரைகள் எழுதும் அழகி ஜானி அலன், பூதாகாரமான உடல்! தாடி! இனவெறிக்கும் கண்கள் கொண்ட 51 வயது அரசியல்வாதி றெறி பிளாஞ் பற்றி பிரிட்டிஷ் ரி.வி. நிறுவனமான 'சனல் 4' ஒரு நிகழ்ச்சி ஒன்றை தயாரித்து ஒளிபரப்பியிருந்தது. அதன் தலைப்பு "ஒரு தலைவன்; அவனது சாரதி; சாரதியின் மனைவி!"

1991- ஏப்ரல் மாதத்தில் காட்டப்பட்ட இந்த ரி.வி. படத்தில், தான் தலைவர் றெறி பிளாஞ்சுடன் உறவு கொண்டிருந்தததாக விபரிக்கப்பட்டது பொய் என்றும் தமக்கு மானநஷ்ட ஈடு தரப்பட வேண்டும் என்றும் கேட்டு ஜானி 'சனல் 4' நிறுவனத்தின் மீது தொடர்ந்தது இந்த வழக்கு!

13 நாட்கள் நடத்தப்பட்ட இந்த "கோகிலாம்பாள்" வழக்கில் சனல் 4 நிறுவனத்தின் சார்பில் ஜோர்ஜ் கார்மன் ஆஜராகி, நிகழ்ச்சியில்



ஜானி

கூறப்பட்டது முழுக்க முழுக்க உண்மை என்று நிருபிக்க வேண்டியிருந்தது. இதற்காக ஜானியின் தோழி வரவழைக்கப்பட்டாள். சாவித்துவாரத்தினூடாக கண்டதை விபரித்தாள்!

வரவழைக்கப்படாமல் ஒரு சாட்சி நீதிமன்றம் தேடி வந்தது! தபாலில், நீதிபதிக்கு அனுப்பப்பட்ட ஒரு பார்சலில் ஜானியின் டயறி (நாட்குறிப்பு) இருந்தது!

சாட்சியங்களை விசாரித்த ஜூரிகள்- அறம் கூறும் அவையத்தோர் சனல் 4 நிகழ்ச்சியில் கூறப்பட்டது உண்மை என்று தீர்ப்பளித்தார்கள். ஜானியின் வழக்கு தோற்றது மட்டுமல்ல, வழக்குச் செலவு 3 லட்சம் பவுணை அவர் சனல் 4க்கு செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது. பாவம் பணத்திற்கு ஜானி எங்கே போவார்?

"தமது கட்சியை நாசமாக்கும் ஒரு மாபெரும் சதி இது!" என்று முழங்கியுள்ளார் இனவெறியர் றெறி பிளாஞ். கறுப்பு இன மண்டேலாவுக்கு அதிபர் டி கிளாக் விட்டுக் கொடுப்பதை- அதிகாரத்தைப் பகிர முற்படுவதை- எதிர்க்கிறார் இந்த றெறி பிளாஞ். காலச்சக்கரத்தின் சுழற்சி யில் இனவெறி கக்கும் றெறி பிளாஞ்சுகள், இங்கிலாந்தின்

(8ம் பக்கம் பார்க்க)

யூஜின் றெறி பிளாஞ் (EUGENE TERRY BLANCH) இருவரும் சந்தித்தனர். அரசியல்வாதியைப் பேட்டி காணச் சென்றஅழகி ஜானி, அவனுக்கு அடிமையாகி திரும்பி வந்தாள். (இல்லை இல்லை- மன்னிக்கவும். அவளது உடல் மட்டும் திரும்பி வந்தது; உள்ளம் அவனிடமே தங்கிவிட்டது.)

இந்த முதல் சந்திப்பின் பின் இருவரும் பலமுறை ரகசியமாக சந்தித்தார்கள். படுக்கை அறையில் உடல்கள் சந்தித்ததை சாவித்துவாரத்தினூடாக கண்ட தோழி ஒருத்தி லண்டன் நீதிமன்றத்தில் சாட்சி சொன்னாள்! கண்டதை கூச்சமின்றி விபரித்தாள். சிவில் வழக்குகளில் பெயர்பெற்ற வழக்கறிஞர் ஜோர்ஜ் கார்மன் கியூ.ஸி. (அவரது கூலி 50ஆயிரம் பவுண்! நாளொன்றுக்கு 10ஆயிரம்!) அவனைக் குறுக்கு விசாரணை செய்து ரகசியங்களை வெளியே கொண்டு வந்தார். இது என்ன வழக்கு? இந்த இன வெறியன்

விமல் சொக்கநாதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சரிவுப் பாதையில் ஜெயலலிதா

பொறுப்பற்றவர்களுக்குப் பொறுப்பைக் கொடுத்த தவறைச் செய்த தமிழர்கள் இப்பொழுது அதற்கான தண்டனையை அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர். தெய்வங்களின் தெய்வமாகிய ஜெயலலிதா மகாசந்நிதானம் பதவி ஏற்ற இந்த ஒரு வருடத்தில் ஆடாத ஆட்டமெல்லாம் ஆடிவிட்டார். அதில் கடைசிக்காட்சி- இப்போதைக்கு- ராஜிநாமா மிரட்டல். அதாவது ஆகஸ்ட் தொடக்கத்தில் ஒரு நாள் ராஜ்பவன் சென்று கவர்னரிடம் தாம் ராஜிநாமா செய்ய இருப்பதாகச் சொல்ல, அவர் டெல்லியுடன் தொடர்பு கொள்ள, டெல்லி மமதைமாதாவை சமாதானப்படுத்தியிருக்கிறது. ஆனாலும் அத்துடன் நிறுத்திவிடாமல் டெல்லி சென்று பிரதமரிடமும் 'புரட்சி' மண்டியிட்டு வந்துள்ளது. ஏன் இப்படி?

விரல்விட்டு எண்ணக்கூடிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள்; முகஸ்துதியால் அஇஅதிமுக உறுப்பினர்களை வென்றுவிடும் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள். நல்லது எது கெட்டது எது என்று எடுத்துச் சொல்லும் துணிவு இல்லாத அதிகார வர்க்கம்; கோட்டையில் அமர்ந்து கோப்புகளைக் கவனிப்பதை விட அம்மா கலந்து கொள்ளும் பொது விழாக்களில் நெடுஞ்சாண்கிடையாக காலில் விழவும், கை தட்டுவதற்குமே பிறப்பெடுத்த அமைச்சர்கள் எனும் அடிமைப்பெருந்திருக்கூட்டம்; சுற்றி எந்நேரமுமே கறுப்புப் பூனைப் பாதுகாப்புப்படை. பேரரசி உலா வருகிறார் என்றால் வழிஎங்கும் மக்கள் துரத்தியடிக்கப்படும் அளவுக்குப் பாதுகாப்பு; மாதம் ஒரு ரூபாய் மட்டுமே சம்பளம் வாங்கிக் கொண்டு லட்சம் லட்சமாகப் பொதுமக்களுக்கு சொந்தப்பணத்திலிருந்து நன்கொடைதரும் வள்ளல்தன்மை; ஜால்ரா அடிக்கும் தோழமைக் கட்சிகள். அடாடா, பாரதியின் பாஞ்சாலி சபத வரிகள் தான் நினைவுக்கு வருகின்றன.

"எண்ணில்லாத
பொருளின் குவையும்
யாங்கணும் செலும் சக்கர
மாண்பும்
மண்ணில் யார்க்கும் பெறல்
அரிதாம்ஓர்
வார்கடற்பெருஞ்சேனையும்
விண்ணில் இந்திரன் துய்ப்பன
போன்று
வேண்டு பல இன்பம்
பெற்றவனேனும்"

அப்படிப்பட்ட நிலை புரட்சித் தலைவிக்கு- மன்னிக்கவும் புரட்சி தெய்வத்திற்கு. ஆயினும் ஏன் ராஜிநாமா மிரட்டல்?

எல்லாமே இருக்கிறது; அசுர மெஜாரிட்டி; அடுத்த தேர்தலிலும் வெற்றிபெறும் வாய்ப்பு. எதிர்க்கட்சிகள் தலையெடுத்து விடாதப்டி சுவரொட்டிகளுக்கும் தடை; மாடுகள் கூட சென்னையில் கட்சி வித்தியாசம் இல்லாமல் சுவரொட்டிகளைப் பிய்த்துச் சாப்பிடுகின்றன. ஆனால், போலீசார் வித்தியாசம் பார்த்து எதிர்க்கட்சி போஸ்டர்களை மட்டுமே கிழித்தெறிந்தனர். அவர்கள் போஸ்டர்கள் அடிப்பதில்லை. ஆனால் அம்மாவின் திருஉருவம் தாங்கிய பெரியபெரிய போஸ்டர்கள், கட்அவுட்கள் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளன. எங்கும் இரண்யன், எதிலும் இரண்யன் என்று தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ள முயன்று தோற்ற புராண கால மன்னன் இரண்யகசிபு இந்த அம்மையாரிடம் கற்றுக்கொள்ள வேண்டியது ஏராளம். அந்த அளவுக்கு சுயப்ரகாச விளம்பர சாதனை. கின்னஸ் புத்தகக்காரர்களே, எங்கே இருக்கிறீர்கள், வாருங்கள் இங்கே என்று உரக்கக் கத்தலாம் போலிருக்கிறது. ஆனாலும் அம்மையாருக்கு ஏன் ஏமாற்றம்? எதில் ஏமாற்றம்?

காரணம் தெரிய வந்தால் கைகொட்டிச் சிரிப்பீர்கள். ஒரு முன்னாள் அரசு அதிகாரி தன் மனைவியை ஜெயலலிதா அரசியலில் பாலபாடம் கற்றுக்கொண்டிருந்த காலத்தில்- 1983-ல் துணைக்கு, தோழமைக்கு அனுப்பி வைத்தார். தானும் தன்னால் முடிந்த அளவுக்கு உதவி செய்தார். இன்று, தாயே பராசக்தி, என் மனைவியை என்னிடம் அனுப்பிவிடு என்று கேட்கிறார். நியாயம்தானே. ஆனால் ஆட்சிக்கட்டிலில் அமர்பவர்கள் நியாயங்களுக்கு எப்போதுமே புது அர்த்தம் காண்கிறார்கள். இதில் ஆண்-பெண் பேதம் எதுவும் இல்லை. ஜெயலலிதா தன் தோழியான சசிகலாவை அவர் கணவர் நடராஜனிடம் ஒப்படைக்க மறுக்கிறார். "உன் பெண்டாட்டியைப் பார்க்க வேண்டும் என்றால் நீயும் என் வீட்டில் ஒரு பகுதியில் வசிக்கலாம்" என்கிறார். இந்தப் பெண் ராவணனிடம் எந்த அநுமனைத் தூது அனுப்பலாம்; எப்படிப் போரிடலாம் என்று யோசித்து வருகிறார் நடராஜன்- தன் மனைவியை மீட்டுக்கொள்ள.



உன்னை ஒன்று கேட்பேன்
உண்மை சொல்ல வேண்டும்

## சுவரொட்டி ஜாக்கிரதை

இதற்கிடையே ஜெயலிதாவுக்கு அரசியலில் பலவகையில் துணையாக இருந்து, உத்திகள் சொல்லிக் கொடுத்து, எதிரிகளை வீழ்த்தி, இ.காங்கிரஸ் கட்சியுடன் இணக்கம் கண்ட நடராஜன் கட்சியில், ஆட்சியில் பதவி ஏதும் பெற ஆசைப்பட்டிருந்தால் தவறு இல்லை; குறிப்பாக ஆட்சியில் ஜெ.க்கு அடுத்த இடம்



சுப்பிரமணியம் சுவாமி

பெற முழுமையாகத் தகுதி பெற்றவர். இன்று ஜெ. ஒரு பேட்டியில் நடராஜன் தன்னிடம் எம்.எல்.ஏ, எம்.பி பதவி கேட்டதாகவும், தான் அப்படிப்பட்ட பதவி தராத காரணத்தினால் தன்னைக் கவிழ்க்க அவர் சதி செய்ததாகவும் பத்திரிகையாளர்களிடம் குறைபட்டுக் கொண்டிருக்கிறார். தனக்கு உரிய இடம் கிடைக்கப்பெறாத நடராஜன், முதல்வரின் தோழியின் கணவன் என்றும், முன்னாள் அரசு அதிகாரி என்றும் அழைக்கப்பட விரும்பவில்லை. அனுமன் வாலினால் ஆசனம் போட்டுக் கொண்டு அமர்ந்ததைப் போல நடராஜன் 'தமிழ் அரசி' என்ற வார இதழை நடத்தி வருகிறார்; எடுத்த எடுப்பிலேயே மாவட்டங்களில் வாசகர் கூட்டங்களை நடத்தி வருகிறார். இத்தனைக்கும் அது ஜெ.ஆதரவு நிலை எடுத்திருக்கிறது. கருணாநிதியைச் சாடுகிறது. அப்படியும் நடராஜன் தனக்கென பத்திரிகை, சமுதாயத் துறையில் செல்வாக்கை வளர்த்துக் கொள்வதைப் பிடிக்காத ஜெ. அண்மையில் கும்பகோணத்தில் நடராஜன் ஏற்பாடு செய்திருந்த வாசகர் வட்ட விழாவை அதிகார பலம் கொண்டு தடுத்து நிறுத்தினார். அதற்குக் காரணம் யாரோ "வருங்கால முதல்வர், நடராஜனே, வருக" என்று சுவரொட்டி அச்சடித்து ஒட்டியிருந்தார்கள். 'லண்டன் தமிழோசை பத்திரிகை ஆசிரியர் 2050-ல்வருங்காலத் தமிழக முதல்வர்' என்று யாராவது விஷமத்திற்காக இங்கே சுவரொட்டி அச்சடித்து ஒட்டினாலும்- ஜாக்கிரதை- புரட்சித் தலைவியின் கை லண்டன் வரை நீளும். ஏதோ எஸ்டேட் வாங்குவதற்கு மட்டுமே லண்டன் வரை கை நீளும் என்று நினைத்துவிட வேண்டாம்.

"நடராஜன் தமிழக முதல்வராக ஆசைப்படுகிறார்; சுப்பிரமணியம் சுவாமி பிரதமராக ஆசைப்படுகிறார்; இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய ஜோக்" இது என்று பத்திரிகையாளர் கூட்டத்தில் ஜெ. எள்ளி நகையாடி இருக்கிறார். இருவரும் சேர்ந்து தன்னைக் கவிழ்க்க சதி செய்து வருவதாகவும் குற்றம் சாட்டி இருக்கிறார். இந்த இரண்டு விஷயங்களையும் எடுத்துக் கொள்வோம்.

நடராஜன் இல்லையென்றால் எதிர்ப்புகளுக்கு இடையே ஜெயலலிதாவின் வளர்ச்சி இல்லை. அந்த அளவுக்குத் திட்டமிட்டு, திரைக்குப் பின்னால் உத்திகளைக் கையாண்டு எம்ஜியாரின் மறைவுக்கு பின்னர் ஜெ.யையும் கட்சியையும் கட்டிக்காத்தவர். சுப்பிரமணியம்



நடராஜன்

சுவாமி இல்லையென்றால் இன்றும் முதல்வர் கருணாநிதிதான். மாநில ஆளுநரின் மறுப்பையும் மீறி மெஜாரிட்டியுடன் இருந்த திமுக அரசைக் கலைத்தவர் சுப்பிரமணியம் சுவாமி. இந்த இருவருக்கும் நன்றி பாராட்டாமல், உரிய இடம்தராமல், அவர்கள் மீது அமில வார்த்தைகளை வீசுகிறார் அகந்தையின் மொத்த உருவான ஜெ. அவருக்கு இப்பொழுது நாக்கும் தடித்து விட்டது. மூப்பனாரை சுண்டைக்காய் என்கிறார். சுவாமியை அண்டப்புளுகர், நடராஜன் சதிகாரர் என்கிறார்.

தாம் வகிக்கும் பதவிக்கேற்ற நாநயம், நாயணம் அவரிடம் இல்லை. அவரை நன்கு அறிந்தவர்கள் அவரிடம் இவற்றை எதிர்பார்க்கவும் இல்லை. ஆனாலும் பேச்சில் சிறிது கௌரவம் இருக்கலாம். சிந்தையில் இருந்தால் அல்லவா சொல்லில் நாகரிகம் வெளிப்படும்? தான் ஏதோ மகாத்மா காந்தி, மோதிலால்நேரு, பட்டேல் பரம்பரையில் வந்துதித்த சுதந்திரப் போராட்ட தியாகிபோல, தான் வகிக்கும் பதவி தனக்கே ஆயுட்கால சாசனமாக எழுதப்பட்டிருப்பது போல, நடராஜனும், சுப்பிரமணியம் சுவாமியும் முதல்வர், பிரதமர் பதவிகளுக்கு ஆசைப்படலாமா என்று கேட்கிறார். இவர் முதல்வராக வந்த அதே பாணியில் எம்ஜியாருடன் நடித்த வேறு சில நடிகைகளும் முதல்வர் பதவியைப் பெற ஆசைப்படலாம்; நடராஜனும் சுப்பிரமணியம் சுவாமியும் ஆசைப்பட்டால் தவறென்ன? இந்த இருவர் மூலம் காங்கிரஸ் அஇஅதிமுகவைப் பிரிக்கப்பார்க்கிறது என்ற சந்தேகத்துடன் டெல்லி சென்று நரசிம்மராவிடம் புலம்பித்தீர்த்த இந்தப் புரட்சி சிகாமணி டில்லியிருந்து திரும்பியவுடன் சிறிது தெம்பாகவே காணப்படுகிறது. ஆனாலும் நிலைமை அவருக்கு முற்றிலும் சாதகமாக இல்லை என்றே சொல்லவேண்டும்.

## சாணக்கிய சபதம்

சுப்பிரமணியம் சுவாமி அக்டோபர் இரண்டாம் தேதி முதல் சென்னையிலேயே தங்கி இருந்து ஜெயலலிதா சம்பந்தமான ஊழல் புகார்களுக்கு ஆதாரங்களைத் திரட்டப் போகிறார். அவரைக் கவிழ்க்காமல் விடுவதில்லை என்று சாணக்கிய சபதம் செய்திருக்கிறார். சுப்பிரமணியம் சுவாமியின் ஜனதா கட்சி எதுவுமே இல்லாத கட்சி.

ஆனால் அவர் கைதேர்ந்த அரசியல்வாதி. ஆனானப்பட்ட இந்திரா காந்தியே அவரை முழுமையாக ஒதுக்கி விட முடியவில்லை. ராஜீவ் காந்தி, சந்திரசேகருக்கு அவர் தேவைப்பட்டார். ஹெக்டே, வி.பி.சிங், கருணாநிதிக்கு அவர் சிம்ம சொப்பனம். பிரதமர் நரசிம்மராவுக்கு சுவாமி தோன்றாத் துணை. டெல்லி அரசியல் பொம்மலாட்டத்தின் சூட்சுமக் கயிறு சுப்பிரமணியம் சுவாமியிடமும் இருக்கிறது. சொப்பன வாழ்வில் மகிழும் சுந்தரி ஜெயலலிதா, சுப்பிரமணியம் சுவாமியை மறந்து விட்டார். அதன் பலனை அனுபவிக்கப்போகிறார்.


அடுத்து, கைதேர்ந்த அரசியல் உத்தியாளர் நடராஜன் காலம் கனியக் காத்திருக்கிறார். சரியான சமயத்தில் சரியான நடவடிக்கை எடுக்கக்கூடியவர். இன்றைய நிலையில் ஜெ.யைப்பற்றி அதிகம் தெரிந்தவர் நடராஜன். அவர் வாயைத் திறந்தால் புரட்சியின் பாடு திண்டாட்டமே. அவரே வாயை மூடிக்கொண்டிருந்தாலும் திறக்காமல் விடுவேனா பார் என்கிறார் ஜெ. தன் வாயால் ஆபத்தை வரவழைத்துக் கொண்ட ஜெ. நடராஜன் அமைதி காப்பது அவரது நெருங்கிய நண்பர்களை உசுப்பி விட்டிருக்கிறது. எம்எல்ஏக்கள், எம்பிக்கள், டெல்லி வட்டாரத்தில் செல்வாக்கு பெற்ற நடராஜன் கேட்டுக்கொண்டால் அதன்படி நடந்து கொள்ள பலர் தயாராக இருக்கிறார்கள். அதிகார வர்க்கத்தின் ஆதரவும் அவருக்கு இருக்கிறது.

ஒரு மாஜி சினிமா நடிகை எம்ஜியாருடன் நடித்த காரணத்தினாலேயே முதல்வராகலாம் என்றால் மாணவப் பருவத்திலிருந்தே அரசியல் ஈடுபாடு கொண்ட நடராஜன் முதல்வராவதற்குத் தகுதியானவர். அவர் ஐ.ஏ.எஸ்-க்குச் சமமான பதவியிலும் இருந்திருக்கிறார். சுப்பிரமணியம் சுவாமியின் வேகத்திற்குத் தகுந்தாற்போல நடராஜனும் காய்களை நகர்த்தினால் இந்தக் கட்டுரை அச்சேறுவதற்கு முன்பாகவே ஜெயலலிதா பதவி இழக்க நேரிடும்.

**அகராதி**

# தேவை ஒரு ஹனுமான்!

சுப்பிமணியம் சுவாமி, நடராஜன் என்ற இந்த இருவர் மட்டுமல்லாமல், அஇஅதிமுகவிலேயே இரண்டு புலிகள் பதுங்கி இருக்கின்றன. அவை எந்த நேரமும் ஜெ.மீது பாயலாம். ஜெ. அந்த அபாயத்தை



கருணாநிதி

உணர்ந்ததாகத் தெரியவில்லை. ஒருவர் [illegible] தலைவர் ராஜாராம்; மற்ற[illegible] கட்சியை ஒரு காலத்தில் கட்டிக்காக்க எம்ஜியாருக்கு உற்ற துணையாக இருந்த ஆர்.எம்.வீரப்பன். வீடுகளில் பாத்திரம் தேய்க்கும் பெண்மணியைக் கூட ஓரிரு நாட்கள் அவகாசம் கொடுத்தே வேலையிலிருந்து நீக்க முடியும். ஆனால் ஜெ. இந்த இருவரையும்

(16ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பழைய நினைவுகள்

சோ.சிவபாதசுந்தரம்

## யாழ்ப்பாணத் தமிழ்

சென்னை புரசைவாக்கத்தில் வேளாளத்தெரு என்ற பெயரில் ஒரு தெரு இருக்கிறது. சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் இந்தத் தெருவில் வசித்தவர்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணத் தமிழர்களாகவே காணப்பட்டார்கள். புகழ்பெற்ற தமிழறிஞர் தி.த.கனகசுந்தரம் பிள்ளையின் குடும்பம் இங்குதான் காணப்பட்டது. இப்பொழுது தியாகராயநகர் என்று வழங்கும் பகுதியில் "ஹென்ஸ்மன் தெரு" என்ற பெயரில் ஒரு தெரு இருக்கிறது. யாழ்ப்பாணத் தமிழராகிய பேராசிரியர் ஹென்ஸ்மன் குடியிருந்த தெரு இன்றும் அவர் பெயராலேயே வழங்குகிறது. உலகப் புகழ்பெற்ற "ரைட் ஒனரபிள்" சிறீனிவாச சாஸ்திரியார் தமது ஆசிரியர் என்ற முறையில் ஹென்ஸ்மன் மரணப் படுக்கையில் இருக்கும்போது, தியாகராயநகரில் அவரதுஇல்லத்துக்குச் சென்று மரியாதை செலுத்தியது சென்னையில் முக்கிய நிகழ்ச்சியாகப் பேசப்பட்டது சிலருக்குத் தெரிந்திருக்கலாம். திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் சென்ற நூற்றாண்டின் ஒரு சமயம் மூன்று உயர்தர அரசாங்க உத்தியோகத்தராக இருந்தவர்கள் யாழ்ப்பாணத் தமிழர்கள் என்பது வரலாறு. மாசிலாமணிப்பிள்ளை, பொன்னம்பலம்பிள்ளை, மற்றவர் பெயர் ஞாபகத்தில் வரவில்லை. இப்படிப் பார்க்கும்போது தென்னிந்தியாவில் ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தவர்கள் பல துறைகளில் ஈடுபட்டு, சிறப்பான மொழி பேசுபவர்கள் என்ற பெருமைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தார்கள் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். தேசப்பிரிவு, ஆட்சிப்பிரிவு காரணமாக தமிழ்நாட்டுப் பேச்சு மொழிக்கும் யாழ்ப்பாணப் பேச்சு மொழிக்கும் சில வேறுபாடுகளைக் கண்டாலும் யாழ்ப்பாணத் தமிழின் உருவம் பெரும்பாலும் சிதையாமல் இருக்கிறதுஎன்பதைப் பல அறிஞர்களும் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். ஆயிரத்துத் தொளாயிரத்து இருபதுக்களில் நாவலாசிரியர் அ.மாதவய்யா நடத்திய பஞ்சாமிர்தம் என்ற சஞ்சிகையில் பேராசிரியர் கிங்ஸ்பெரி தேசிகர் யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழைப்பற்றி அழகான கட்டுரை ஒன்று எழுதியிருந்தார். நாற்பதுக்களில் திருச்சி வானொலியில் விபுலானந்த அடிகள் ஒலிபரப்பிய உரையில் யாழ்ப்பாணத் தமிழின் தனித்தன்மையை விளக்கினார்.

*1939*ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒரு நாள் நான் சென்னைக்குப் போயிருந்த சமயம் சந்தித்த ஒரு நிகழ்ச்சி யாழ்ப்பாணத் தமிழின் உயர்வுக்கு ஒரு சாட்சியாகும். ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் வீட்டிலே ஒரு விருந்து. கல்கி கிருஷ்ணமூர்த்தி, சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், நான், என்னுடன் கூட வந்த நண்பர் அம்பிகைபாகன், வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் தலைமையாசிரியராக இருந்தவர். டி.கே.சியின் புதல்வர் காலஞ்சென்ற தீபன் என்ற தீத்தாரப்பனும் அம்பிகைபாகனும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் சமகால மாணாக்கராயிருந்தவர்கள். மத்தியான விருந்துக்கு முன்பு பல சமூக, இலக்கியக் கருத்துக்களில் சுவாரஸ்யமான சம்பாஷணையில், ரசிகமணியின் உவப்பான கவிதாரஸனையில், ஒவ்வொருவரும் ஏதோ பேசிக்கொண்டிருந்தோம். கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையின் கவிதைகளில் சிறப்பான சிறுவர் கவிதைகளைப்பற்றிப் பேச்சு வந்தபோது, நவாலியூர் சோமசுந் தரப்புலவரும், சங்க இலக்கியப் புலவராயிருந்தும், சிறார்களுக்கென்று மிக எளிமையான கவிதைகள் புனைந்திருக்கிறார் என்று அம்பிகைபாகன் எடுத்துக் காட்டினார். அந்த நாட்களில்தான் புலவருடைய கவிதைத் தொகுப்பும், அதற்கு பண்டிதமணி கணபதிப்பிள்ளை எழுதிய விமர்சனமும் வெளிவந்திருந்தன. அம்பிகைபாகன் உதாரணமாகத் தனது நினைவிலிருந்த "கத்தரித்தோட்டத்து வெருளி" என்ற பாடலை எடுத்துச் சொன்னார். அந்தப் பாட்டைப் கேட்ட ரசிகமணி தமது இயல்பான உவகைப் பெருக்கில் பாராட்டும்போது, "ஆகா, யாழ்ப்பாணத்தவர்கள் வெருளி என்ற அருமையான பழந்தமிழ்ச் சொல்லை எப்படிக் காத்து வைத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் அதை விரளி என்று திரித்துவிட்டார்கள். அதுவும் மக்கள் வழக்கிலில்லை. அதை இப்போது"சோளக்கொல்லை பொம்மை" என்றுதான் சொல்வார்கள். பழைய தமிழின் சொல் தூய்மையை யாழ்ப்பாணத்தவர் பேணிக்காத்து வருகிறார்கள்" என்று தமது வியப்பைத்தெரிவித்தார். அதே ரீதியில் பேச்சுக்கள் தொடர்ந்து கொண்டிருக்க டி.கே.சி.அபிமானத்தோடு, "யாழ்ப்பாணத் தமிழர் பேசுவதே அழகாயிருக்கும். சொற்களின் அசல் வடிவத்தைச் [illegible]க்காமல் பேசுவது எழுத்துப்போலவே முழுமையாயிருக்கும்" [illegible]ார். வெகு நேரம் எதுவும் பேசாமல், புதிதாக வெளிவந்த ஒ[illegible]ருவாசகப் பதிப்பிலே நாட்டம் கொண்டிருந்த ராஜகோபாலாச்ச[illegible]யார், தலையை நிமிர்த்தாமலே, "நீங்கள் சொல்வதில் ஒரு திருத்த[illegible] வேணும். எழுத்துப்போல் என்று சொல்வதைவிட, அச்சுப்போல் என்று சொல்வதுதான் பொருத்தமாயிருக்கும். எழுத்தானால், கையெழுத்திலே பல கோணல் மாணல் இருக்குமல்லவா?" என்று தமக்கேயுரிய பாணியில் விளக்கம் கொடுத்தார்.

# கர்நாடக இசைக்கலைஞருக்கு அமெரிக்க விருது



கர்நாடக சங்கீதமும் பரத நாட்டியமும் அமெரிக்காவில் பிரபல்யமானதுபோல் வேறெந்த நாட்டிலும் புகழுடன் வளரவில்லை என்று சொல்லவேண்டும். ஹிந்துஸ் தானி இசையில் ரவிசங்கரும் அலி அக்பர் கானும் அமெரிக்காவில் புகழ்நாட்டி அந்நாட்டு மக்களிடையே வட இந்திய இசைக்கலைக்கு ரசனை ஏற்படுத்தி நிரந்தரமாக்கியதுபோல, தென்னிந்திய சங்கீதத்துக்கும் நாட்டியத்துக்கும் ஒரு தமிழ்க் குடும்பமே காரணமாயிருந்ததைப் பாராட்ட வேண்டும். இது பிரசித்திபெற்ற கர்நாடக இசையரசி வீணை தனம்பாள் வாரிசுகள் என்றால் நாமெல்லாம் பெருமைப்படும் செய்தியாகும். வீணை தனம்பாளின் பேத்தி பாலசரஸ்வதி பல தடவை அமெரிக்கா சென்று பரதக்கலையை அந்த நாட்டில் வளரச் செய்தார். அவருடைய சகோதரர் மிருதங்க வித்வான் ரங்கநாதன் அந்த நாட்டிலேயே நிரந்தரமாகக் குடியேறி கர்நாடக இசையை வளர்த்ததோடு அமெரிக்க மனைவியையும் தேடிக்கொண்டார். அவர் காலமாகி விட்டார். இப்போது அவர் சகோதரர் விஸ்வநாதனின் புகழ் அங்கு உச்சத்தில் காணப்படுகிறது. கடந்த இருபத்தைந்து ஆண்டு காலமாக அமெரிக்காவிலேயே நிரந்தரமாகத் தங்கியிருக்கும் விஸ்வநாதன் இப்போது அமெரிக்காவின் மிக உன்னதமான "அமெரிக்க நாஷனல் ஹெரிடேஜ் பெலோஷிப்" என்ற விருதைப் பெற்றிருக்கிறார் என்ற நல்ல செய்தி கிடைத்திருக்கிறது.

தஞ்சாவூர் விஸ்வநாதன் என்று அழைக்கப்படும் இவர் இளம் வயதிலேயே இசை பயின்று, பிரபல புல்லாங்குழல் வித்வான் டி.என்.சுவாமிநாதபிள்ளையிடம் குருகுலவாசத்தில் புல்லாங்குழல் வாத்தியத்தில் முறையாகப் பயின்றார். சென்னைப் பல்கலைக்கழகப் பொருளாதாரப் பட்டத்தோடு அமெரிக்காவில் கலிபோனியா பல்கலைக்கழகத்திலும், கனெக்டிகட் வெஸ்லியன் பல்கலைக் கழகத்திலும் இசைக்கலையின் நுட்பங்களில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவர்.வெஸ்லியனிலேயே இப்போது தொடர்ந்து கர்நாடக இசை பயிற்றுவிப்பதோடு நாடெங்கும் புல்லாங்குழல் கச்சேரியும் செய்து வருகிறார்.

# கலாபவனம் வழங்கிய பண்ணிசைக் கச்சேரி

சைவக் கோவில்களில் பல்லாண்டு காலமாகத் தேவாரம் பாடுவதைக் கேட்ட நமக்கு சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை குரோய்டன் ஹீத் கிளாக் பாடசாலை மண்டபத்தில் கலைமாமணி முத்து கந்தசாமி ஓதுவார் வழங்கிய பண் இசைக் கச்சேரியைக் கேட்ட பின்னர், நமது தேவார நாயன்மார்கள் விட்டுச் சென்ற பூர்வீகத் தமிழ் இசையின் உண்மையான வடிவத்தையும் மரபையும் அனுபவிக்கக் கிடைத்தது. ஓதுவார் முத்து கந்தசாமி தேசிகர், முறையாக தர்மபுரம் ஆதீனத்தில் பாடம் கேட்டதுடன் கர்நாடக இசையிலும் தேர்ச்சி பெற்றவர். மற்றைய இசைப் பாடல்களைவிட, தேவாரப் பாடல்களின் அமைப்பின் இசை வடிவங்கள் தனிப்பட்ட பண் முறைகளைக் கொண்டுள்ளதால் அவற்றைப் பாடுவதில் தனிப்பயிற்சி வேண்டும். முக்கியமாக, திருஞான சம்பந்தர் தேவாரங்களின் சொல்லமைப்புக்கு இசைவடிவம் கொடுக்கத் தனிப்பட்ட பயிற்சி தேவை. அந்தப் பயிற்சி, மரபின் வழி வந்த ஓதுவார் குடும்பங்களில் காணப்படும். முத்து கந்தசாமி ஓதுவார் அன்று பாடிய "தொண்டர் அஞ்சு களிறும் அடக்கி" என்ற தேவாரத்திலும் "மாதர் மடப்பிடியும்" என்ற தேவாரத்திலும் புராதன பண் இசையின் பிரத்தியேகமான தாள வேறுபாடுகளை உணரக்கூடியதாக இருந்தது. தேசிகரின் கம்பீரமான இசைக்கு ஈடுகொடுப்பதில் வழக்கமாக லண்டன் மேடைகளில் பக்கவாத்தியம் வாசிக்கும் வயலின் கோதண்டபாணியும், மிருதங்கம் முத்து சிவராசாவும், கடம் அஞ்சலோ குமாரதாசனும், மோர்சிங் சிதம்பர நாதனும் ஒரு புதிய அனுபவத்தைப் பெற்றார்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

இந்தச் சிறப்பான பண் இசைக் கச்சேரியை ஏற்பாடு செய்த லண்டன் "கலாபவனம்" நுண் இசை நிறுவனத்தினர் முன்பு மனோரமா பிரசாத்தின் உயர்தர கர்நாடக இசைக் கச்சேரியை வழங்கியதுபோல, வித்தியாசமான மற்றொரு இசை நிகழ்ச்சியை வழங்கியது, அவர்களுடைய கலை உணர்வை வெளிப்படுத்துகிறது. நமது பாரம்பரிய இசை, நடனம், ஓவியம், கவிதை முதலிய கலை நிகழ்ச்சிகளைப் பார்த்து அனுபவிப்பதுடன், அவற்றில் மறைந்திருக்கும் நுட்பங்களைத் தெரிந்து ரசிப்பதற்கு ஆதாரமாக கலந்துரையாடல்கள், விளக்கக் காட்சிகள், கருத்தரங்குகளுடன், சாஸ்திரீய இசை நடன நிகழ்ச்சிகளையும் நடத்த இவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இதுவரைஅவர்கள் நடத்திய இரு இசை நிகழ்ச்சிகளிலும் "உயர்தரக் கலையுணர்வை" வெளிப்படுத்தியதை, அன்று விம்பிள்டன் கணபதி கோவில் இணைப்பாளர் திரு இரத்தினசிங்கம் நிகழ்த்திய சுருக்கமான பாராட்டுரையில் குறிப்பிட்டார். கலாபவனம் அமைப்பாளர்கள் மேலும் இத்தகைய புதிய படைப்புக்களை வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

–ரசிகப்பிரியா



கல்கி பொன்விழா நிகழ்ச்சிகளை ஆகஸ்ட் 1ம் திகதி திருமதி எம்.எஸ்.சுப்புலக்ஷ்மி குத்துவிளக்கு ஏற்றி தொடக்கி வைத்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழோசை

லண்டன் ஆகஸ்ட் 28 , 1992

# யார் மீது அக்கறை?

இலங்கையில், வடபகுதியின் பாதுகாப்புப்படை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவிருந்த இராணுவ உயர் அதிகாரி டென்ஸில் கொப்பேகடுவவும் மற்றும் அதிகாரிகளும் கண்ணிவெடியில் கொல்லப்பட்டார்கள் என்றதும் இரண்டு நிகழ்வுகள்– அவை அரசியல் ரீதியில் மிகுந்த சிந்தனைக்குரியனவாக இருந்தாலும்– மேலெழுந்தவாரியாக எதிர்பார்க்கப்பட்டன.

ஒன்று; தென்னிலங்கையில் தமிழர்களுக்கெதிராக மீண்டும் ஒரு கலவரம் தூண்டிவிடப்படலாம். மற்றையது; வடக்கில் கண்மூடித்தனமான இராணுவ தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்படலாம்.

இயல்பானதான பதட்டநிலை கொழும்பு, மற்றும் பகுதிகளில் காணப்பட்டாலும் தமிழருக்கெதிரான கலவரம் எதுவும் ஏற்படவில்லை. மாறாக, அரசுக்கு எதிரான குழப்ப நடவடிக்கைகள் இராணுவ வீரர்களின் இறுதிமரியாதையின் போது கனத்தை மயானத்தில் எழுந்தன. அமைச்சர்கள் சிலர் நேரடியாகவே தாக்கப்பட்டார்கள்.

இலங்கையினுடைய வரலாற்றில் ‘கறுப்பு ஜூலை’ என்று எழுதப்பட்டுவிட்ட 1983 ஜூலை 23 கலவரம் தமிழர்களுக்குகெதிராக இதே கனத்தை மயானத்தில்தான் ஆரம்பமானது. வடபகுதியில் கொல்லப்பட்ட 13 இராணுவ வீரர்களுக்கும் அரச மரியாதையோடு நிகழ்ந்த இறுதி அஞ்சலியில் கலந்துவிட்டு கலகக்காரர்கள் நேராக தமிழர் இல்லங்கள், வர்த்தக நிலையங்கள் நோக்கியே சென்றார்கள்.

இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரங்கள் எப்போதுமே எதிர்க்கட்சிகளாலோ அல்லது அரசாங்கத்தாலோ தூண்டப்பட்டனவாகவே இருந்திருக்கின்றன. ‘83 கலவரமும் அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டு– தூண்டப்பட்டு– அதன் ஆதரவுடனேயே நடந்ததென்பது இன்று பகிரங்கமாகிவிட்ட இரகசியம். இதற்கான ஓர் ஏற்பாடாகவே எதிர்க்கட்சித் தலைவராக விருந்த திரு அமிர்தலிங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை என்று ஒன்றைக் கொணர்ந்து பாராளுமன்றத்திலேயே இனவாதம் தூண்டப்பட்டதென்பதும் வெளிவந்த செய்திகள்.

ஆனால், அந்த 83 கலவரம் சில அச்சுறுத்தல்களையும் அரசு, எதிர்க்கட்சிகள், சிங்கள மக்கள் தொடர்பில் ஏற்படுத்தின. இதுதான் இன்னொரு இனக் கலவரத்துக்கு இவர்களைத் தயக்கமுறச் செய்கிறது. அரசாங்கத்தோடு எதிர்க்கட்சிகளும் இதனை உணர்ந்திருக்கின்றன.

தமிழர்களுக்கெதிரான கலவரம் ஏழாவிட்டாலும் அந்த இறுதிமரியாதை வைபவத்தில் இடம்பெற்ற குழப்பங்களுங்கூட கண்டிக்கப்பட வேண்டியவையே. அரசுக்கெதிரான இக்குழப்பங்கள் தூண்டுதல் எதுவுமின்றி, ஆத்திரமுற்ற பொதுமக்களால் மேற்கொள்ளப்பட்டதென்றாலுங்கூட எதிர்க்கட்சிகள் ஜனநாயக ரீதியில் இதனைக் கண்டித்திருக்க வேண்டும். அமைச்சர்களோடு இச் சம்பவத்தில் பத்திரிகையாளருங்கூட ஒருவர் தாக்குதலுக்குள்ளாகியிருக்கிறார். அரசியல் கட்சிகள் இத்தகைய வைபவங்களில் அரசியல் லாபத்துக்கு முயன்றால் நாடு மேலும் குழப்பத்தையே நாடிச் செல்லும்.

இறுதி மரியாதைகளில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டதும் உரிய மரியாதை அந்த படை வீரர்களுக்கு அளிக்கப்படவில்லை என்பதில் அவர்கள் அரசுமீது அதிருப்தி கொண்டிருந்தார்கள் என்பதும் உண்மையே. இது மாத்திரமன்றி, இராணுவ வீரர்களின் கொலை ‘உள்வேலையா’ என்ற ஐயங்கள் கூட எழுப்பப்பட்டன. ‘யார் இறந்தாலும் பழி என்மேல் சேர்கிறதே’ என்றுதன்னுடைய விசனத்தை ஜனாதிபதி பிரேமதாச பகிரங்கமாகவே வெளிப்படுத்தியிருந்தார். வழக்கம்போல நியமிக்கப்பட்டிருக்கின்ற விசாரணைக் கமிஷன் அறிக்கையைப் பொறுத்திருந்து பார்க்கலாம். ஆனால், தன்மீதான பழிக்கு பிராயச்சித்தம்தேட வடக்கில் இராணுவ தாக்குதல் என்ற இரண்டாவது எதிர்பார்ப்பை ஜனாதிபதி நிஜமாக்கினார்.

இந்த எதிர்பார்ப்பையும் அது விளைக்கக்கூடிய அனர்த்தங்களையும் ஏற்கனவே யாழ்ப்பாணத்து பிரஜைகள் குழு ஜனாதிபதியைச் சந்தித்து அதை தடுக்க கோரியிருந்தது. ஆனாலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நல்லூர் உற்சவமும், க.பொ.த.உயர்தரப் பரீட்சையும் முடிந்தபின்னரே அப்படியொரு தாக்குதல் எதிர்பார்க்கப்பட்டபோது, அந்த அளவுக்குகுகூட பொறுக்கமுடியாத நெருக்கடி அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஆக, ஏற்படும் அரசியல் நெருக்கடிகளைச் சமாளிக்க அப்பாவிப் பொதுமக்களின் உயிரும் உடமைகளும்தான் விலையா?

தங்களுடைய அரசியல் நலனுக்கேற்ப பேச்சுவார்த்தை–தாக்குதல் என்றில்லாமல், ‘இராணுவத் தீர்வு, இனப்பிரச்னைக்கு தீர்வு அல்ல’ என்ற, கொப்பேகடுவவின் மரணம் புகட்டும் தெளிவான– உறுதியான படிப்பினையைத் தெளிந்து, மக்கள் நலனில்அக்கறையிருந்தால் சம்பந்தப்பட்ட அனைவரும் அரசியல் ரீதியான– சமாதான தீர்வுக்கு அந்தரங்கசுத்தியோடு ஈடுபட வேண்டும்.

# அதிரடித் தாக்குதலா அரசியல் தீர்வா?

வ.ஐ.ச.ஜெயபாலன்

ஆகஸ்ட் 8, 1992 சனிக்கிழமை காலை ஊர்காவற்றுறை, அராலித் துறையருகே இடம்பெற்ற கண்ணிவெடியில் மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ, பிரிகேடியர் விஜய விமலரத்ன உட்பட இலங்கை அரச ஆயுதப் படையின் தலைமைப் பீடத்தின் பெரும்பகுதி அழிக்கப்பட்டுள்ளது.

அரசுக்கு மட்டுமன்றி, இன்று தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்னை வடக்கு கிழக்கு மாகாணங்களை இலங்கை அரசின் இராணுவம் இன்னமும் கைப்பற்றாததுதான் என்று கருதும் அரசு சார்பு தமிழ் அமைப்புகளுக்கும் கூட இச்செய்தி பேரிடியாக அமைந்துள்ளது.

மாற்று அரசியல்தீர்வு எதனையும் வழங்காமல் தமிழ்ப் பகுதிகளில் சிங்கள பௌத்த ஆதிக்கத்தின் வடிவமான ஒற்றையாட்சியை ஸ்தாபிக்கப் போராடிவந்த இலங்கை ஆயுதப் படைகளைப் பொறுத்தவரை ஏற்பட்டுள்ள இழப்புகள் குறுங்காலத்துக்குள் ஈடு செய்ய முடியாததாகும். நீண்ட காலத்துக்குத் தீவிரமான போரைத் தொடருவது பொருளாதார ரீதியாகச் சாத்தியமற்றிருக்கும் நிலையில் குறுங்காலத்துக்குள் வெற்றி காண முனைந்திருந்த அரசுக்கும் இந்த இழப்புகள் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

அரசின் நிர்ப்பந்தத்திற்கு விட்டுக் கொடுத்து மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ போதிய வளங்களின்றி குறுங்காலத்துக்குள் யாழ் குடாநாட்டைக் கைப்பற்ற முன்வைத்த அவதந்திரத்துக்கு தானே பலியாகியுள்ளார். யாழ் குடாநாடு 1987க்குப் பின் மீண்டும் ஓர் அனர்த்தத்தில் இருந்து மயிரிழையில் தப்பித்துள்ளது.

இலங்கையின் இராணுவ வரலாற்றில் 23.07.83இல் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலுக்குப் பின் இடம்பெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்ணிவெடித் தாக்குதல் இதுவாகும்.

## மதிநுட்பம் வாய்ந்த தளபதி

கடந்த ஐந்தாறு வருடங்களாக வடகிழக்கில் இடம்பெற்று வருகிற இராணுவத் தாக்குதல்களின் நோக்கத்துக்கும் விளைவுகளுக்கும் பொதுமக்களது உயிர் உடமை அழிவுகளுக்கும் பதில் சொல்ல வேண்டியவர்களில் ஒருவரான ஜெனரல் கொப்பேகடுவ தனிப்பட்ட முறையில் ‘ஜென்ரில்மென்’ என்று பெயரெடுத்திருப்பது ஆச்சரியம்தான். எது எப்படி இருப்பினும் இலங்கையின் நவீன ராணுவ வரலாற்றில் ஜெனரல் கொப்பேகடுவ மதிநுட்பம் வாய்ந்த தளபதி என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை.

வடகிழக்கு மாகாணத்தின் இராணுவ புவியியல் அமைப்பு பற்றிய அவரது அறிவும், விடுதலைப்புலிகள் அமைப்பின் பலம், பலவீனங்கள் பற்றிய அவரது அறிவும் முதன் முதலில் வடமராட்சித் தாக்குதலில் புலப்பட்டது. தரையிறங்கக்கூடிய கடலும் வெளிகளும் சார்ந்த பகுதிகள், தீவுகள் என்பன தொடர்பாக இராணுவத்துக்கும், ஏனைய பகுதிகள் தொடர்பாக விடுதலைப்புலிகளுக்கும் இருக்கிற வாய்ப்புகள் அடிப்படையிலே நெடுங்காலமாக கொப்பேகடுவவின் இராணுவ அணுகுமுறை அமைந்திருந்தது.

இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகள் அமைப்பையோ அல்லது தமிழர்களது விடுதலைப் போராட்டத்தையோ நிரந்தரமாக நசுக்கிவிட முடியும் என கொப்பேகடுவ கருதவில்லை. தமக்கு வாய்ப்பான பகுதிகளில் இராணுவத்தின் கையை ஓங்க வைப்பதும், அரசு அத்தகைய பலமான நிலையில் இருக்கும்போது விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைக்குச் செல்லுதலுமே சாத்தியமானது என்று கருத்துக் கூறியதற்காக 1990இல் இலங்கை அரசின் கோபத்திற்கும் இவர் ஆளாகியிருக்கிறார்.

எனினும் அண்மைக் காலத்தில், விடுதலைப் புலிகள்– இந்திய உறவில் ஏற்பட்டுள்ள இலகுவில் சரிசெய்ய முடியாத பிளவுகளையும், விடுதலைப்புலிகளின் அரசியல் ரீதியான பின்னடைவுகளையும் பயன்படுத்தி, இராணுவ சாதனங்களின் வரத்து பாதிக்கப்பட்டுள்ள நிலையில் விடுதலைப் புலிகளை சுற்றிவளைத்து தாக்குவதன் மூலம், விடுதலைப் புலிகளின் கையிருப்பில் உள்ள வெடிபொருள், எரிபொருள், இராணுவ சாதனங்களை செலவழிய வைத்து, ஈற்றில் அவர்களை முறியடித்துவிட முடியும் என்ற அடிப்படையில் செயற்பட்டவர்களில் கொப்பேகடுவவும் ஒருவர் என்றே தோன்றுகிறது.

## கணக்கில் ஏற்பட்ட தவறு

விடுதலைப்புலிகள் 1987 யூலையில் இருந்து ஆனையிறவு தோல்வி வரைக்கும் கைக்கொண்டிருந்த நேரடி யுத்தத்தை முதன்மைப்படுத்துகிற பிழையான மூல உபாயத்தை திடீரெனக் கைவிட்டு விட்டனர். தொடர்ந்து கெரிலா யுத்தத்தை முதன்மைப்படுத்தியதுடன் தமது நேரடி இராணுவ கடமைகளிலும் கெரிலாத் தன்மையை அதிகரித்தனர். இது கொப்பேகடுவ எதிர்பார்க்காத மாற்றம். அமைப்பு ரீதியாக தனது பிழைகளை இனங்கண்டு திருத்திக் கொள்கிற வல்லமை விடுதலைப்புலிகளுக்கு இல்லை என்று இலங்கை அரசு கருதியிருக்கிறது. விடுதலைப் புலிகளின் இராணுவ மூல உபாய மாற்றத்தினால் இலங்கை அரசு தரப்பு போட்ட கணக்கின் இராணுவ பக்கத்தில் தவறு ஏற்பட்டது.

இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகள் அமைப்பு உலகின் முதன்மையான கெரிலா அணி என அராலி சம்பவத்தில் கொல்லப்பட்ட யாழ் குடாநாட்டின் இராணுவத் தளபதி விஜய விமலரட்ண குறிப்பிட்டுள்ளார். கொல்லப்படுவதற்குச் சில வாரங்களுக்கு முன் ‘ஏசியா வீக்’க்கு அளித்த பேட்டியில் “முன்னரும் அவர்கள் கடுமையானவர்களாக இருந்தனர்” என 1987க்கு முன்னம் தனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் பற்றிக் குறிப்பிட்ட விஜய விமலரட்ண, ‘1987இன் பின்னர் அவர்கள் மிகமிகக் கடினமானவர்களாக மாறிவிட்டனர். இந்தியர்களோடு போராடியதில் அவர்கள் பெருமளவு தன்னம்பிக்கையைப் பெற்றுவிட்டனர். நாங்கள் இப்போது உலகிலேயே மிக நன்கு பயிற்றப்பட்ட, மிக நன்கு ஆயுதந்தரித்த சிறப்பான செயலூக்கம்பெற்ற கெரிலா அணியோடு மோதுகின்றோம்’ எனத் தெரிவித்துள்ளார்.

இந்திய ராணுவ வெளியேற்றத்தின் பின் விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்ட அதீத தன்னம்பிக்கை எதிரி பற்றிய குறைவான மதிப்பீடு என்பவற்றின் அடிப்படையில் நேரடி இராணுவத் தாக்குதலை முதன்மைப்படுத்த முனைந்தது போன்ற தவறுகள் இராணுவ ரீதியாக இழைக்கப்பட்ட போதும், ஆனையிறவுத் தோல்வியின் பின்னர் அதிசயிக்கத் தக்க வேகத்தில் அக்குறைபாடுகள் நிவர்த்தியாக்கப்பட்டது.

இன்றைய இராணுவ சமநிலை இலங்கை அரசு வடகிழக்கு மாகாணங்களின் பெரும்பகுதிகளையும், விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணக் கரையோரம், தீவுப் பகுதிகள், மன்னார்த்தீவு, பலாலி,ஆனையிறவு, வவுனியா என்பவற்றையும் இழந்த நிலையில் ஏற்பட்டுள்ளது. இச்சமநிலையைக் குறுங்கால இராணுவத் திட்டங்களின் ஊடாக மாற்ற முடியாது என்பதை கொப்பேகடுவ மரணம் புலப்படுத்துகிறது.

## வரலாற்றின் திருப்புமுனை

சரியான அரசியல் மூல உபாயமற்ற நிலையில் பெறப்படுகின்ற இராணுவ வெற்றிகள் குறிப்பிட்ட தாக்குதல்களின் வெற்றியாக அமையுமேயன்றி, விடுதலைப் போராட்டத்தின் வெற்றியாக மேம்படாது. நீண்டகால அரசியல் ஆதாயங்களையும் அவை ஈட்டித் தராது.

விடுதலைப் புலிகள் எதிர்நோக்குகின்ற அடிப்படைப் பிரச்னை இவ்வகையினதாகும். 1987இல் அவர்கள் அரசியல் பிரிவை அமைத்தார்களாயினும், அதுவும் கெரிலாப் பிரிவு ஒன்றுக்கு அரசியல் அமைப்பின் பெயரைச் சூடியதாகவே அமைந்தது. சரியான அரசியல்மூல உபாயத்தை முதன்மைப்படுத்தவும், அறிவுத்துறையினதும்மக்களதும் பங்குபற்றலை பெறவும் அவர்கள் தவறிவிட்டனர்.

இந்த நிலையில் அரசியல் பிரிவின் நடவடிக்கைகள், ரகசியமாக விடுதலைப் புலிகளின் இராணுவ செயற்பாடுகளுக்கு உதவிவந்த பல ஆயிரம் இளைஞர்களைப் பகிரங்கப்படுத்தியதாக மட்டுமே அமைந்தது. இதனால் கிழக்கு மாகாணம் போன்று இராணுவம் கைப்பற்றிய பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கு இரகசியமாக உதவிவந்த பொதுமக்கள் பகிரங்கப்பட்டதுடன் பெரும்பகுதியினர் அழிக்கவும் பட்டனர்.

மேலும் அரசியல் அமைப்பு, அரசியல் ரீதியாக முஸ்லிம் மக்களின் தலைமைகளுடன் இணக்கம் கண்டு, இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகள் தம்மை ஸ்தாபிக்க வழிகாண்பதற்குப் பதிலாக முஸ்லிம் மக்களது அரசியல் தலைமைகளை நிராகரித்து, அரசியல் ரீதியாகவும் முஸ்லிம் பகுதிகளில் தம்மை விஸ்தரிக்க முயன்றது.

இன்றைய தமிழர், முஸ்லிம்களது மோதல்களுக்கு வழிவகுத்த முக்கியமான தமிழர் தரப்புக் காரணங்களை இந்த அணுகுமுறையே தோற்றுவித்தது.தற்போது அரசியற் பிரிவு கலைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இது உள்கட்சி மோதல்களின் வெளிப்பாடு என்றும் இலங்கை தரப்பில் சொல்லப்படுகிறது.

அரசியற் பிரிவின் கலைப்பு சரியான அரசியல் மூல உபாயத்தை அமைக்கிற முயற்சியின் முன் நிகழ்வாக அமைந்தால் விடுதலைப் புலிகளுக்கும் அது நல்லது, தமிழர்களுக்கும் அது நல்லது.

சரியான அரசியல் மூல உபாயத்தையும் வழிகாட்டலையும் விடுதலைப் புலிகள் ஒத்துக் கொள்வார்களானால் மட்டுமே, அராலிக் கண்ணிவெடித் தாக்குதலின் வெற்

(8ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அதிரடித் தாக்குதலா

(7ம் பக்கத் தொடர்ச்சி)

றியை அவர்கள் வரலாற்றின் திருப்பு முனை வெற்றியாக மாற்றக்கூடும்.

தமது இளைஞர் சார்ந்த கெரில்லா அணியையும் ஆதரவாளர்களையும் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதற்குப் பதிலாக, மக்களைத் தமது இயக்கத்துக்குள் எடுத்துச் செல்கிற அமைப்பாக, அரசியல் அமைப்பு செயல்பட்டிருக்குமானால் விடுதலைப் புலிகளின் அரசியல் வேலைகள் வெற்றி பெற்றிருக்கக் கூடும். அத்தகைய ஒரு வெற்றி சரியான அரசியல் மூல உபாயத்துக்கான தேடலுக்கும், அபிவிருத்திக்கும் வழிவகுத்திருக்கும்.

அரசியல் ரீதியான செம்மைப் படுத்தல்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் பிரேமதாசவின் அரசியல் சாணக்கியத்தனத்தின் வெற்றிகளை எதிர்கொள்ளவும், தமது அரசியல் தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டியுள்ளது.

## பிரேமதாசாவின் அரசியல் வெற்றி

பிரேமதாசாவின் அரசியல் வெற்றி விடுதலைப் புலிகளுடனான தற்காலிக உறவைப் பயன்படுத்தி 1990இல் ஜேவிபியை அழித்ததுடனும் இந்தியப் படைகளை வெளியேற்றியதுடனும் ஆரம்பிக்கிறது. மிகக் குறுங்காலத்தில் ஜேவிபி தொடர்பாகத் தான் இழைத்த வரலாறு காணாத மனித உரிமை மீறல்களைச் சமாளித்த விதத்தில் இந்த வெற்றி முன்னேற்றமடைந்தது. வடகிழக்கு மாகாணம் தவிர்ந்த இலங்கையின் ஏனைய பகுதிகளில் தமிழருக்குப் பிரச்னை இல்லை என சர்வதேச சமூகம் கருதுகிற சூழலை உருவாக்கியதில் இது ஓரளவு ஸ்தாபிக்கப் பட்டுள்ளது.

1992இல் யுனிசெவ் நிறுவனமும் பிரேமதாசாவின் அரசியல் வெற்றிக்குச் சாட்சியாகியது. வடகிழக்கு தவிர்ந்த பகுதிகளில் தமிழருக்குப் பிரச்னை இல்லை என யுனிசெவ் தெரிவித்ததையும், பிரேமதாசா போரில் மனிதாபிமானத்தைக் கடைப்பிடிப்பதாக யுனிசெவ் அமைப்பின் நிர்வாக இயக்குனர் 'ஜேம்ஸ் கிறாண்ட்' கூறியதையும் இங்கு குறிப்பிடலாம்.

"இலங்கையில் அரசினர் வைத்தியசாலைகளில் பிரிவினைப் பேராட்டத்தில் ஈடுபடுகிற சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படுவதைக் கண்டு நான் வியப்படைந்தேன். உலகில் இலங்கை மட்டுமே இத்தகைய ஒரு நாடாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன். இந்த உதாரணம் யூகோஸ்லாவியாவிலும் பின்பற்றப்பட்டால் எமது பணி இலகுவாகி இருக்கும்" என ஜேம்ஸ் கிறாண்ட் தெரிவித்துள்ளார்.

இத்தகைய ஓர் அரசியல் தந்திரம் இல்லாமல், பிரேமதாசா அரசினால் இவ்வளவு காலமும் போரைத் தொடர்வதும் அதற்கு வேண்டிய சர்வதேச உதவிகளைப் பெறுவதும் சாத்தியப்பட்டிருக்காது. எனினும், வெறும் அரசியல் தந்திரங்கள் மட்டும் சரியான அரசியல் மூல உபாயமாக விடாது. இதுவே இலங்கை அரசின் பிரச்னை.

## புலிகளின் அரசியல் முயற்சிகள்

விடுதலைப் புலிகளைப் பொறுத்தமட்டில், குறைந்த பட்சம் சர்வதேசிய, இந்து சமுத்திர, தேசிய ரீதியில் தமக்கு ஏற்பட்டுள்ள தனிமைப்படலில் இருந்து விடுபடுகிறதற்கான அரசியல் முயற்சிகளையாவது, மேலும் காலங்கடத்தாது ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

இது மட்டுமே நீண்டகால அடிப்படையில் தோற்றுப் போகாமல் இருக்கவும், இத்தகைய தாக்குதல்களில் கிட்டும் வெற்றிகளுடாக அரசியல் வெற்றிகளையும் ஆதாயங்களையும் பெறவும் வழி வகுக்கும். இத்தகைய விடுபடுதல் தொடர்பாக விடுதலைப்புலிகள் அமைப்பு குறைந்த பட்சம் பின்வரும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

1. முஸ்லிம் மக்கள் தொடர்பான தமது தவறுகளைத் திருத்துதல்.

2. இந்திய இலங்கை நாடுகளுக்கு இடையிலான முரண்பாடுகளையும், தமக்கும் இந்தியாவுக்கும் இடையிலான முரண்பாட்டையும் கையாள்வதில் இதுகாறும் கடைப் பிடிக்கப் பட்ட மூல, தந்திர உபாயங்களை மீளாய்வு செய்தலும் தவறுகளைத் திருத்திக் கொள்ளவதும்.

3. சர்வதேச மனித உரிமை நிறுவனங்களின் ஆலோசனைகளுக்குச் செவிமடுத்து தளத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

4. பரந்துபட்ட ஐக்கிய முன்னணியின் அவசியத்தை உணர்தலும் அதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்தலும்.

விடுதலைப் புலிகள் கொள்கை ரீதியாகவும் அமைப்பு ரீதியாகவும் தம்மை அபிவிருத்தி செய்து கொள்ளாமல் மேற்படி நடவடிக்கைகளை மேற்கொள்வது சாத்தியமில்லை.

முஸ்லிம் மக்கள் தொடர்பாக விடுதலைப்புலிகள், அலிஞ்சப் பத்தனை தாக்குதல்களைப் போன்ற முஸ்லிம் பொதுமக்கள் மீதான சகல தாக்குதல்களையும் ஒருதலைப் பட்சமாக உடனடியாக நிறுத்துவது அவசியம். முஸ்லிம்களின் சுதந்திரமான போக்குவரத்துக்கு ஒத்துழைத்தல், முஸ்லிம் மக்களின் மீளக் குடியமர்வு, புனர்வாழ்வு என்பவற்றுக்கு ஒத்துழைத்தலும் அவசியம். இதே வழியை முஸ்லிம் தீவிரவாதிகளும் கடைக்கொண்டு தமிழர்கள் மீதான தாக்குதலை நிறுத்தவும், தமிழர்களின் சுதந்திரமான போக்குவரத்துக்கும் அகதிகள் புனர்வாழ்வுக்கும் குந்தகம் விளைவிக்காதிருக்கவும் தூண்டப்படுதல் வேண்டும்.

விடுதலைப் புலிகள் முஸ்லிம் மக்கள் தொடர்பாக அவர்கள் அங்கீகரிக்கும் தலைமைகளுடாக செயல்படுவதுடன், இணைந்த வடகிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்கள் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு தீர்வை முன்வைப்பதும் நடைமுறைப் படுத்துவதும் அவசியம்.

இன்றைய நிலையில் தமிழர் முஸ்லிம்கள் பிளவை தமிழ்ப் பொது மக்களுக்கு எதிராக பழிவாங்கல் என்ற பெயரில் முஸ்லிம் ஆயுத பாணிகளின் தரப்பு இராணுவ ஆதரவுடன் மேலும் சிக்கலாக்கி உள்ளது. இத்தவறுகள் முஸ்லிம் தரப்பு அமைப்புகளாலும் அறிஞர்களாலும் போதியளவு விமர்சிக்கப் படவில்லை. இது விரக்தி தருவதாகும். நாளை இலங்கை இராணுவமே முஸ்லிம் ஆயுதபாணிகளை நிராயுதபாணிகள் ஆக்கும். முஸ்லிம் மக்களுக்குரிய தம்மைத் தற்காத்துக் கொள்ளும் உரிமையை யாரும் கேள்விக்கு இடமாக்க இயலாது. ஆனால் முஸ்லிம் ஆயுதபாணிகளும், தீவிரவாதிகளும் இராணுவத்தின் கைப்பாவைகளாகி அப்பாவித் தமிழ்ப் பொதுமக்களைத் தாக்குகிற நிகழ்வுகள் அதிகரிப்பதையிட்டு, முஸ்லிம் மக்களது தலைமையும் அறிஞர்களும் மௌனம் சாதிப்பது பிழையானது.

4000க்கும் மேல் இராணுவத்தினர் விலகி ஓடிச் சென்றுள்ள நிலையில் மேஜர் ஜெனரல் கொப்பேகடுவவின் 'வடமராட்சி சூரயா' கீர்த்தியும் பிரிகேடியர் விஜய விமலரத்னவின் தனிப்பட்ட செல்வாக்கும் இதுகாறும் இராணுவத்தினருக்கு ஊக்கம் தந்து அவர்களைப் போர்க் களத்துக்கு எடுத்துச் செல்லப் பெரிதும் உதவியது.

இலங்கையில் அரசியல் தலைவர்கள் யாரும் இத்தகைய 'கரிஸ்மா'வை இராணுவத்தின் மத்தியில் கொண்டிருக்கவில்லை. அதனால் இது அரசைப் பொறுத்து நீண்ட காலத்துக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

## இராணுவத்தின் திட்டம்

நீண்ட காலமாக தமிழகத்தின் ஊடாகவும், கடல் மார்க்கமாகவும் இடம்பெற்ற இராணுவ சாதன வளங்கள் எரிபொருள் வரத்து பாதிக்கப்பட்ட நிலையில் தீவுப் பகுதி வடமராட்சி தென்மராட்சிப் பகுதிகளைக் கைப்பற்றி முற்றுகையை நீடிப்பது வெற்றிக்கு வழி வகுக்கும் என இராணுவ தரப்பு கருதுவதாகவும் தெரிகிறது. இடம் பெறும் இராணுவ தரப்பு தாக்குதல்கள் பெரும்பாலும் தமது தளங்களை முற்றுகையில் இருந்து காப்பாற்றவும், புலிகளை அங்கும் இங்கும் அலைத்து எரிபொருள் வெடிப்பொருள் இருப்பைச் செலவு செய்ய நிர்ப்பந்திக்கும் அடிப்படையிலுமே வகுக்கப்பட்டிருந்தது. எனினும் அண்மைக்கால நடவடிக்கைகள் அரசும் ஜெனரல் கொப்பேகடுவவும் குறுங்காலத்துள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றலாம் என்ற அடிப்படையிலேயே செயல்பட்டதாகத் தெரிகிறது. ஒருவேளை இவ்வருட இறுதியில் தலைமைத் தளபதியாக நியமிக்கப்படுகிற போது 'யாழ்ப்பாண சூரயா'வாக புகழ்பெற கொப்பேகடுவ மனப்பால் குடித்திருக்கலாம். அரசுக்கும் பொருளாதார ரீதியாக போரைக் குறுங்காலத்துக்குள் முடிக்க வேண்டியிருந்தது. அரசியல் தீர்வை நிராகரித்து போதிய சாதன வளமற்ற நிலையில் போரைத் துரிதப்படுத்த முன்வைத்த சாத்தியமற்ற இராணுவ மூல உபாயத்துக்கு இலங்கை இராணுவத்தின் தலைமைப்பீடமே பலியாகியுள்ளது.

போதிய வாகனங்கள் இல்லாமையால்தான் இராணுவ விதிமுறைகளுக்கு மாறாக உயர் அதிகாரிகள் பலர் ஒன்றாகப்பயணம் செய்ய நேர்ந்தது என்று கூறப்பட்டதையும் இங்கு நினைவுகூரவேண்டும்.

நீண்டகால அதிரடித் தாக்குதல்களா அல்லது அரசியல் தீர்வா என்ற கேள்வியை வரலாறு அரசின் முன்னரும் விடுதலைப்புலிகள் முன்னரும் மீண்டும் வைத்துள்ளது என்றே கருதுகின்றேன்.

விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல் செம்மைப்படுத்தல் ஏற்படாவிடின், இத்தகைய வெற்றிகரமான தாக்குதல்களின் அரசியல் ஆதாயம், முழுமையாக அவர்களுக்குக் கிட்டப் போவதில்லை. பெரிய வெற்றிகள் கூட தற்காலிக போர் நிறுத்தத்துக்கும், தற்காலிக பேச்சுவார்த்தைக்குமே வழிவகுக்கும். நீண்டகால அடிப்படையில் மீண்டும் போர் என்பதே யதார்த்தமாக அமையும்.

## உலக அரங்கில் இவ்வார அரசியல் கண்ணோட்டம்

(4ம் பக்க தொடர்ச்சி)

ஈனோக் பவல்கள், இலங்கையின் கே.எம்.பி. ராஜரத்தினாக்கள்- ஜெயசூரியாக்கள் ஊதித்தள்ளப்படுவார்கள்- தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று சரித்திரம் சான்று பகன்றிருக்கிறது.

## இராணுவமும் புலிப்படையும்

இலங்கையைப் பற்றி எழுதும் போது கடந்தவாரம் 'ஏஷியா வீக்' சஞ்சிகையில் கொழும்பு நிருபர் JOHN COLMEY எழுதிய 12 பக்கக் கட்டுரை பற்றிக் குறிப்பிடத் தான் வேண்டும்.

மே மாதம் 30ம் தேதி தொடக்கம் சுமார் 3 வாரங்கள் பலாலி ராணுவ முகாமில்- பிரிகேடியர் விஜய விமலரத்தினவின் தலைமையில் இயங்கிய படைகளுடன் ஜீப்புகளிலும், கவசவண்டிகளிலும் ஹெலிகொப்டர்களிலும் (நோட்டுப் புத்தகமும் கையுமாக) பயணம் செய்த துணிச்சல் நிருபர் ஜோன் கொல்மி சுவாரஸ்யமாக இக்கட்டுரையை எழுதியிருக்கிறார். பணிவும் மரியாதையும் மிக்க 'வீரர் விமலரத்னா'வின் கையில் மணிக்கட்டில் ஒரு பிரித் நூல் அவருக்கு பாதுகாப்பு வழங்குகிறது என்றும், அவரது 21 வயதான புதல்வி புதுடில்லியில் விஞ்ஞானப்பட்டப் படிப்பு படிக்கிறார் என்றும் விமலரத்னா படைகளை நடத்திச் செல்லும்பொது சிங்களப்படைகளுக்கு உணர்ச்சியுடன் சிங்கள தேசிய கீதங்களை கெசட்டில் ஒலிபரப்பியவாறு செல்வார் என்றும் எழுதியிருக்கிறார். 3 வாரங்கள் தங்கியிருந்த பின் ராணுவவீரர்களின் சடலங் களுடன் கொழும்புக்கு வந்ததாகவும் கட்டுரையில் கொல்மி எழுதியிருக்கிறார்.

அவரது கட்டுரை ஆகஸ்ட் 14ம்தேதி ஏஷியா வீக்கில் பல படங்களுடன் பிரசுரமாகும்போது பிரிகேடியர் விஜய விமலரத்னாவே போரில் பலியாகிவிடுவார் என்று கட்டுரையாளரோ, விமலரத்தினாவோ, ஏஷியா வீக்கோ எதிர்பார்த்திருக்கஇயலாது!

கட்டுரையாளர் கொல்மி தமிழ் ஈழ விடுதலைப்புலிகளுடனும் சில தினங்களைக் களிக்க, LTTE பாரிஸ் பணிமனை வழங்கிய 'விசா' நுழைவு அனுமதியுடன் தமிழ் ஈழத்திற்குள் பிரவேசித்ததாகவும் விடலைத்தீவில் தாம் இறங்கிய போது காலில் சப்பாத்து இல்லாமல் உடம்பில் ஷேர்ட் இல்லாமல் காற் சட்டையுடன் மட்டும் நுழைந்ததாகவும் தம்மை புன்முறுவலுடன் வரவேற்ற புலிப்படைக் காவலர்கள் "வாருங்கள்! தமிழ் ஈழம் உங்களை வரவேற்கிறது! உங்களை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்!" என்று அழைத்துச் சென்றதாகவும் எழுதியிருக்கிறார்.

மடுமாதா தேவாலயம், மற்றும் மடுவில் உள்ள புலிப்படைமுகாம் ஆகியவற்றுக்கு சென்று புலிகளுடன் அன்புடன் அளவளாவிய கட்டுரையாளர் கிழக்கு மாநில அலிச்சிப் பொத்தான் தாக்குதல் பற்றி, தெல்லிப்பழை கோவில் மீதுராணுவ குண்டுவீச்சு பற்றி முன்னர் தெரியவராத பல விபரங்களை எழுதியிருகிறார். போரில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு அணியும் தனித்தனியாக



ரெறி பிளாஞ்

விடுக்கும் அறிக்கைகளை விட ஒரு நடுநிலை பத்திரிகையாளர் நேரில் சென்று திரட்டும் செய்திகளில் எவ்வளவோ உண்மை அடங்கியிருக்கிறது.

கட்டுரையாளர் ஜோன் கொல்மியின் கட்டுரையில் எனக்குப் பிடித்த சில கருத்துக்கள் சொன்னவர்களின் பெயர்களோடு கீழே தரப்பட்டுள்ளன:

"...இந்தியப்படைகளுடன் மோதியதால் புலிப்படையினருக்கு இப்போது தன்னம்



கார்மன்

பிக்கை நிலை வந்து விட்டது. பயிற்சியில், ஆயுதங்களில், நோக்கங்களில் உலகிலேயே மிக உயர்ந்த போராளிப்படை புலிப்படைதான்! இப்படிப்பட்ட புலிப்படையுடன் நாங்கள் இப்போது போராடிக் கொண்டிருக்கிறோம்..." சொன்னவர்: இலங்கை ராணுவப்படைகளின் யாழ்ப்பாண கொமாண்டர் பிரிகேடியர் விஜய விமலரத்தின.

...."தனியான தமிழ் ஈழம் வேண்டும் என்ற கோரிக்கையை புலிப்படையினர் இப்போது கைவிட்டுவிட்டார்கள். தமிழர்களை ஒரு தேசிய இனமாக மதிக்கும்- அங்கீகரிக்கும் ஒரு சமஷ்டி அரசையே நாம் இப்போது விரும்புகிறோம். யாழ்ப்பாணத்தை அவர்கள் இலகுவில் கைப்பற்றமுடியாது. கைப்பற்றிவிட அவர்கள் வீரர்கள் அல்ல, நாங்கள் பலஹீனமானவர்களுமல்ல! ஆனால் யாழ்ப்பாணத்தை அவர்கள் கைப்பற்றிவிட்டால் நாங்கள் மீண்டும் காடுகளுக்குள் போய் விடுவோம். பதுங்குமுக தாக்குதல்களில் ஈடுபடுவோம். எமது இளைஞர்கள் சிலரை இங்கே பொதுமக்களுடன் கலந்து விட்டு விட்டுச் செல்வோம்! காட்டிலிருந்த படி அதிரடிப்பாய்ச்சல், தாக்குதல் ஆகியவற்றை நடத்துவோம்".

சொன்னவர்: புலிப்படைப் பிரமுகர் திரு அன்டன் பாலசிங்கம்.

(ஆதாரம்:- ஏஷியா வீக்)

## திட்டமிட்ட குடியேற்றம்

(கொழும்பு நிருபர்)

கிருந்தி ஓயா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் லுணுகம் வெகர குடியேற்றத்தின் தமிழ் பேசும் மக்கள் புறக்கணிக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட்டு பலாத்கார காணி சுவீகரிப்பு செய்து சிங்களக் குடிகள் திட்டமிட்டமுறையில் குடியமர்த்தப்படுகின்றனர்.

இங்கு அமைக்கப்பட்டுள்ள இருபத்தியொரு குடியேற்றத் திட்டங்களில் ஏற்கனவே பத்தொன்பது குடியேற்றங்களில் சிங்களவர்களே குடியமர்த்தப் பட்டுள்ளனர். மிகுதி இரண்டு திட்டங்களில் முஸ்லிம்கள் குடியமர்த்தப்பட்டிருந்தனர். இவர்களுடன் இரத்தினபுரியில் வதிவிடங்களை இழந்திருந்த பத்தொன்பது தமிழ் குடும்பங்களும் குடியிருக்க ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது.

பின்னர் இடம்பெற்ற திட்டமிட்ட நடவடிக்கைகளில் இத்தமிழ் குடும்பங்கள் பெரும்பான்மை இனத்தினரால் விரட்டி அடிக்கப் பட்டதோடு அங்கிருந்த முஸ்லீம்களும் துன்புறுத்தப்பட்டு வெளியேற்ற நிர்ப்பந்திக்கப்பட்டு அவர்களது காணிகள் பலாத்காரமாக சுவீகரிக்கப்பட்டும் வருகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

'தமிழோசை' சங்கரண்ணா

# மாதம் ஒரு மந்திரம்

## 3

மேலை நாட்டு ஒழுக்க சீலம் பற்றிக் கீழை நாடுகளில் எப்போதுமே நல்ல அபிப்பிராயம் இருந்ததில்லை! பெண்களின் உடை- நடை, ஒப்பனை, மணவாளன் தேர்வுமுறை, களவியல் சுதந்திரம், அறையில் நிகழ்த்த வேண்டியதை அம்பலத்தில் ஆட்டிக் காட்டும் அச்சமும் நாணமும் அற்ற போக்கு (ஐயா, மிகையில்லை, சென்றவாரம் பட்டப்பகலில் பலபேர் முன்னிலையில் ரயிலில் ஒரு ஜோடி இப்படி நடந்து, 'தரக்குறைவான நடத்தை' என்பதற்காகக் கைது செய்யப்பட்டு- நீதிபதியின் 'எச்சரிப்புடன்' விடுதலை செய்யப்பட்டார்கள்) -இன்னோரன்ன சங்கதிகளை வைத்துக்கொண்டு மேலை நாட்டுத் 'தாய்க் குலத்தைப்' பற்றி ஏனோ தானோவாக எண்ணி வருவதில் வியப்பு ஒன்றும் இல்லை! மேலை நாட்டின் கலாசாரப் பண்பு வேறு; கீழையுலகின் பண்பு வேறு!

'ஒருவனுக்கு ஒருத்தி', 'ஒருத்திக்கு ஒருவன்'- திருமண உறுதிமொழியின் படி "மரணம் பிரிக்கும் வரை கணவனும் மனைவியுமாக இருந்து இல்லறம் காப்போம்!" என்பதெல்லாம் செல்லாக் காசாகிவிட்டதுபோல்படுகிறது. ஃபேஷன் மாறுவது போல, கணவனும்- மனைவியும் மாறுவது சர்வ சாதாரணம்!

"உன்னுடைய குழந்தைகளும் என்னுடைய குழந்தைகளும் நம்முடைய குழந்தைகளுடன் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்!" என்று மேலையுலக 'இல்லற' தர்மத்தை நையாண்டி செய்வார்கள் அல்லவா; இவர்களைக் கேட்டால் "இதிலென்ன 'நையாண்டி' வேண்டிக்கிடக்கிறது, வாழ்க்கையின் 'கியாரண்டியை' விட வேறு என்ன வேண்டும்!" என்பார்கள்!


இப்போது, பத்திரிகைகளின் 'பத்தி' சிரிக்கும்- சிலிர்க்கும் 'டச்சஸ் ஆப் யார்க்' விவகாரத்தைப் பார்த்தாலே போதும்! 'பிற ஆடவன் ஒருவனுடன்' அரச குடும்பத்து மருமகள், அதுவும் இரண்டு பெண் குழந்தைகளுக்குத் தாய்- 'வரம்பு மீறிப் பழகப்போய்' பெரிய களேபேரம்!

குடிமக்களுக்கு 'உதாரணமாக'- பண்போடு நடந்து காட்டவேண்டிய, வழிகாட்ட வேண்டிய அரசகுடும்பம் இப்படிச் சீர்குலையலாமா என்ற கவலையும் கேள்விக்குறியும் எழுந்திருக்கின்றன. ஒரு விதத்தில் இந்தக் குழப்பத்திலிருந்து- பிரிட்டிஷ் பொதுமக்கள் சமுதாயத்துக்கு ஒரு நன்மை ஏற்படவும் வழியுண்டு!

"எப்படி நடக்கக் கூடாது!" என்புது மக்களில் பலருக்கு உறைக்க ஆரம்பித்திருக்கிறது. அந்தவகையில் அவர்களும் வழிகாட்டிகள்தாம்! நிற்க,

சென்ற ஆகஸ்ட் 21-ஆம் தேதி வாட்ஃபோர்டுக்கு அணித்தேயுள்ள 'லெச் மூர் ஹீத்' கிராமத்தில்- 'ஹரே கிருஷ்ணா' எனும் அனைத்துலக கிருஷ்ண மெய்யுணர்வு இயக்கத்தார் (ISKCON)சார்பில் கிருஷ்ண ஜென்மாஷ்டமி- கிருஷ்ண ஜயந்தி விழா பிரிட்டிஷ் வரலாறு காணாத அளவில் கோலாகலமாக நடந்தது! வெள்ளி, சனி, ஞாயிறு மூன்று நாட்களும், பல்லாயிரக் கணக்கான மக்கள்- ஆங்கில, அமெரிக்க, ஐரோப்பிய மற்றும் பிரிட்டன் வாழ் இந்து ஆசிய வம்சாவளி மக்கள் விழாவில் கலந்து கொண்டார்கள்! நானும் குடும்பத்தோடு சென்று வழிபடும் பாக்யம் கிடைத்தது.

இந்த ஹரே கிருஷ்ணா ஆலயம் பல ஏக்கர் பரப்புள்ள பண்ணைக் காட்டின் நடுவேயுள்ளது. பக்தி வேதாந்தப் பண்ணை (BHAKTHI VEDANTA MANOR) என்பது பெயர்! கண்ணன் நடமாடிப் புனிதம் விளைத்த பிருந்தாவனம் போல் இலங்குகிறது. வேதாந்த கலா சாலை, கோயில் வளாகம், பசு பராமரிப்புச் சாலை, நந்தவனம், துளசித்தோட்டம் (GREEN HOUSE எனும் கண்ணாடிக் கொட்டகைக்குள்), 'தியான மண்டபம், காய்-கனித் தோட்டம் எல்லாமே அந்த 17 ஏக்கர் 'பக்தி வேதாந்தப் பண்ணை'க்குள் இருக்கின்றன! அனுதினமும் காலை நாலரை மணியிலிருந்து இரவு ஒன்பதரை மணிவரை கோயில் வழிபாடு நடக்கிறது. ஆண்டுக்கு ஒருமுறை வரும் இந்த கிருஷ்ண ஜென்மாஷ்டமி விழா மட்டும் பெரிய அளவில் நடத்தப்படுகிறது. பண்ணை வளாகத்துள் ஓர் புதிய ஆன்மீக உலகம்; அன்பும் பக்தியும் சீலமும் பண்பும் அங்கே கொலுவீற்றிருக்கின்றன. கிருஷ்ணாஷ்டமியன்று நூற்றுக்கணக்கில் ஆங்கிலப் பெண்கள் வந்து கலந்து கொண்டார்கள். குழந்தைகளுடன் இல்லத்தரசிகள், இளம்பெண்கள், இளைஞர்கள் பலரும் வந்திருந்தார்கள். எல்லோர் நெற்றியிலும் சந்தன கோபி! 'ஹரே கிருஷ்ணா' இயக்கத்தில் பூரண உறுப்பினராக இணைந்த ஆங்கிலப் பெண்கள் பலர் சேலையணிந்த கோலத்துடன், கடல் அலையெனத் திரண்டு வந்த மக்கள் கூட்டத்தை வரிசைப்படுத்தி- ஒழுங்கு செய்வதில் கோயில் தொண்டர்களுக்குத் துணை செய்தார்கள்! எல்லோரையும் வரவேற்கும்போது, 'ஹலோ!'வுக்குப் பதில் கைகூப்பியவாறே 'ஹரே கிருஷ்ணா!' தான்.



25 ஆண்டுகளுக்கு முன்னம் 'ஹரே கிருஷ்ணா' இயக்கம் இங்கே லண்டனுக்கு அமெரிக்காவிலிருந்து வந்தது. 500 ஆண்டுகளுக்கு முன்பு வங்காளத்தில் வாழ்ந்த சைதன்ய மஹாப்பிரபுவின் 'ஆன்மீக வழித் தோன்றலான' பக்தி வேதாந்த ஸ்வாமி பிரபுபாதர் என்பவர் 1965-ல் அமெரிக்காவுக்குச் சென்று இந்த 'கிருஷ்ண பக்தி' இயக்கத்தைத் தோற்றுவித்தார். 1966-ல் கோஸ்வாமி, கோவிந்த் என்னும் இரண்டு அமெரிக்கர்கள் பி.பி.சி உலக சேவை இயங்கும் 'புஷ் ஹவுஸ்' கட்டடத்திற்கு அணித்தே உள்ள கவன்ட் கார்டன் பகுதியில் ஓர் இல்லத்தில் 'ராதா-கிருஷ்ணா கோயில்' என்று துவக்கினார்கள். நானும் அப்போது பி.பி.சி தமிழ் ஒலிபரப்பில் வந்து கலந்து கொள்ளும் பார்-அட்-லா படித்துக் கொண்டிருந்த நண்பர் கே.ஆர்.பி. பெருமாள்- மலேசிய அன்பரும்- போய்க் கலந்து கொண்டது இன்னும் மனத்தில் பசுமையாக நிற்கிறது.



# நெறியும் நெருஞ்சிலும்

பின்னர் 'பரி பிளேஸ்' என்னும் இடத்திற்குக் கோயில் மாறியது! இப்போது லண்டன் நகருக்குள் என்று எடுத்துக் கொண்டால் பத்தாம் எண்- சோஹோ வட்டாரக் கோயில், ஹரே கிருஷ்ணா இயக்கத்தின் முக்கிய கோயிலாகும். தினமும் வழிபாடும் பிரஸாதமும் உண்டு!


அரண்மனை விஷயத்திலிருந்து 'அரே கிருஷ்ணா'வுக்கு வந்ததற்குப் பொருள் உண்டு.

ஜென்மாஷ்டமிக் கூட்டத்தில் ஜேன் என்னும் பூர்வாசிரமப் பெயருடைய- தற்போது 'யசோதா' என்ற பெயர் கொண்ட ஆங்கிலக் குடும்பப் பெண் ஒருவரிடம் மனம் விட்டுப் பேசும் வாய்ப்புக் கிடைத்தது. ஒன்றரைவயது கைக் குழந்தை- ஆண்குழந்தையுடன் எனக்கு முன்னால் க்யூவில் நின்று கொண்டிருந்தாள். குழந்தை கிருஷ்ண விக்ரஹம் மாதிரி! எதிர் வரிசையில் பல குஜராத்திப் பெண்மணிகள்- தங்கள் தாய்மொழியில் 'சொந்தச் சங்கதிகளைப்' பேசிக் கொண்டிருந்தார்கள்! ஆனால்- இந்த 'இங்கிலீஷ் யசோதா' குழந்தையைத் தோளில் சாத்தியவாறே ஹரே ராமா, ஹரே ராமா, ராம ராம ஹரே ஹரே, 'ஹரே கிருஸ்னா, ஹரே கிருஸ்னா கிருஸ்ன கிருஸ்ன ஹரே ஹரே!' என்று கோயில் சந்நிதான ஹாலை எட்டும் வரைக்கும் மெதுவாக 'சுருதி'யுடன் நாம உச்சாடனம் செய்து கொண்டிருந்தாள்! எனக்குப் பின்னால் நின்ற என் சகதர்மிணி சரஸ்வதி 'அந்தப் புள்ளையைப் பாத்தியளா, கிருஷ்ணன் மாதிரியில்லே!' என்றாள்! 'தாயைப் போலப் பிள்ளை' என்றேன் நான்! தரிசனம் முடிந்து 'பிரஸாதத்தட்டுடன்' புல் வெளியில் அமர்ந்து உண்ண முற்பட்டபோது, "யசோதாவும்" எங்களுக்கு அருகில் வந்து சேர்ந்தாள்.

"எங்கிருந்து வருகிறீர்கள்?"

"அய்ல்ஸ்பரியிலிருந்து!...."

"குழந்தை மிகவும் லக்ஷணமாக இருக்கிறான்!.... நெற்றியில் சந்தனகோபி எவ்வளவு அழகாக இருக்கிறது!... உங்கள் முகச்சாயல்!"



"இல்லை, முழுக்க முழுக்க 'அப்பா' ஜாடை!"

"அப்பா என்ன செய்கிறார்?"

'சும்மாதான் இருக்கிறார்!" (Unemployed)

"நீங்கள்?"

"வங்கியில் பணிபுரிகிறேன்"

"எப்படி இந்தப் பக்தி மார்க்கத்திற்கு ஈர்க்கப்பட்டீர்கள்?"

ஒரு புன்னகை.... கொஞ்சம் தயக்கம்....

பின்னர் சொன்னாள்:

"என் கணவர் ஒரு 'நாத்திகர்'- ஈதியிஸ்ட்! அது ஒன்றே போதாதா நான் 'குடும்பச் சூழலைச்' சமனிலைப்படுத்த ஏதாவது ஒன்றில் முனைப்புடன் ஈடுபட!"

"அவரிடமிருந்து எதிர்ப்பு ஏதேனும்....?"

"ஏழு ஆண்டுகளாக 'ஹரே கிருஷ்ணா, வைப்பற்றித் தெரியும். திருமணமாகி நான்கு ஆண்டுகள்! இவன் பிறந்து ஒன்றரை வருஷமாகிறது. குழந்தை பிறந்தபோது எங்களுக்குள் 'கலாசாரச் சண்டை'



மெல்லக் கிளர்ந்தது. 'கிறிஸ்தபர்' என்ற பெயருக்கு நான் ஒத்துக் கொண்டாலும் "க்ருஸ்னா" என்றே அழைப்பேன்! அவர் 'க்ரிஸ்' என்பார்!

"நான் முழுக்க முழுக்க 'வெஜிடேரியன்'; அவர் சகலமும் சாப்பிடுவார்! அவருக்காக நான் மாமிச உணவுகள் 'சமைத்து மட்டும்' கொடுப்பேன்! மாமிசத்தைத் தொடும்போதெல்லாம் மனசு கஷ்டப்படும்! பகவத் கீதையை நினைத்துக்கொண்டு 'என் கர்ம யோகத்தை' கிருஷ்ணார்ப்பணமாகத் தொடர்ந்து நடத்தி வருகிறேன்! வேறு வழியில்லை! நல்ல வேளை, என் குழந்தையை என் வழியில் உணவூட்டி வளர்ப்பதற்குத் தடை சொல்லாமல் இருக்கிறாரே அதுவே பெரிய அதிர்ஷ்டமல்லவா?..."

"உங்களை அன்போடு நடத்துகிறார் அல்லவா?"

"அன்போடா, என்மேல் அவருக்குப் பெரிய பைத்தியம்!...

என்னைவிட்டு அவர் பிரியவே மாட்டார்! காரணம் என்ன தெரியுமோ?... அவரைத் தவிர வேறு எந்த ஆடவரையும் நான் 'மனத்தால்



கூட' காதல்கண் கொண்டு நோக்க மாட்டேன் என்பது அவருக்குத் தெரியும்! அந்த ஒரு 'ஆதாயத்துக்காக' என்னையும் -ஹரே க்ருஷ்ணாவையும் இப்போது சீண்டுவதில்லை!"

"அவரும் ஒருநாள் உங்கள் வழிக்கு வருவார் என்ற நம்பிக்கையுண்டா?"

"ஆன்மீக விஷயம், மத விஷயம் அவரவர் சொந்த விஷயம்! அவர் என்னைப்போல் ஹிந்துவாக- சனாதன தர்ம- வழிக்கு மாற வேண்டும் என்று நான் வற்புறுத்த மாட்டேன்; அவர் 'சர்ச்சுக்குப்' போய் வந்தாலே போதுமானது. ஸந்தோஷப்படுவேன். உலகம் போகிறபோக்கில்- தப்பிக் கடைத்தேற பக்தி ஒன்றே வழி! எனக்கு 'இஸ்கானின்'(ISKCON-International Society For Krishna Consciousness) ஒழுக்க சீலக் கட்டுப்பாடுகள், உணவுப்பழக்கம், கிருஷ்ணபக்தி எல்லாமே உள்ளத்தை ஈர்த்தபடியால் சேர்ந்து விட்டேன்!"

பேச்சு சுவாரஸ்யத்தில் நேரம் போனதே தெரியவில்லை! கடைசியில் "ஹரே க்ருஷ்ணா!" என்று பரஸ்பர கை கூப்பலுடன் விடைபெற்றுக் கொண்டோம்! ஒரு நாள் கழித்து, ஞாயிற்றுக்கிழமை காலையில், தூங்கி எழுந்ததும்- வழமை போல் SUNDAY TIMES பத்திரிகையைப் பிரிக்க மனம் ஓடவில்லை; ஊர்வம்பு- உலகவம்பு! முதற்பக்கத்திலேயே 'ஃபெர்கி' விவகார விமர்சனக் கட்டுரையும்- ஏனைய இதழ்களில் வந்த புகைப்படங்களின்- இல்லை 'பகைப்'படங்களின் 'குறு'வடிவப் பதிப்புக்களும் கண்களை உறுத்தின! பார்வையைத் திருப்பினேன். 'ஹரே க்ருஷ்ணா' ஜென்மாஷ்டமி வண்ண மலரின் முகப்பில் இருந்த நீலமேக ச்யாமள வண்ணன்- குழந்தைக் கண்ணன் என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்து கொண்டிருந்தான்!...


நெறியைப் படைத்தான் நெருஞ்
சில் படைத்தான்
நெறியில் வழுவின் நெருஞ்சில்
முட்பாயும்
நெறியில் வழுவா(து) இயங்கவல்
லார்க்கு
நெறியில் நெருஞ்சில்முட் பாயகி
லாவே.

—திருமந்திரம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## பிறந்தநாள் வாழ்த்து



சின்னக் கண்ணன் சிரிக்கிறான்!

செப்ரம்பர் 5ந் தேதி ஈஸ்ஹாமில்
முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடும்

**செல்வன் சான்றோன் திவாகரன்**

சான்றோன் நீடூழி வாழ
அம்மா, அப்பா, உறவினர்கள், நண்பர்கள்
எல்லோரினதும் வாழ்த்துக்கள்!

## பிறந்தநாள் வாழ்த்து



“சோலை மலரொளியோ உந்தன் சுந்தரப் புன்னகைதான்!...”

**குமாரி சௌஜனா நாகினி**

**லண்டன் SE 19**

28.08.92ல் பிறந்த நாளைக் கொண்டாடும்
சௌஜனாவை பெற்றோரும், உறவினரும், நண்பர்களும் அன்புடன்
வாழ்த்துகிறார்கள்.

## பிறந்தநாள் வாழ்த்து



முத்தான முத்தல்லவோ!

**டிலோசனா புலேந்திரன்**

யாழ்.நல்லூர் செம்மணி வீதி
புலேந்திரன் - கலாதேவி
தம்பதியரின் செல்வ மகள் டிலோசனா 06.09.92இல்
முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.
செல்வம் எல்லா நலமும் பெற்று இனிதே வாழ
பெற்றோருடன், உறவினர், நண்பர்கள்
வாழ்த்துகிறார்கள்.

# யாரோ இவர் யாரோ...

மனோதர்ம சங்கீதம் அவருடையது. ராக ஆலாபனைகள், ஸ்வரபிரஸ்தாரங்கள் நன்றாகவிருக்கும். நளினமான கல்பனாஸ்வரங்கள். சாகித்தியத்தில் நிறைய சங்கதிகள் இருக்கும்.

அபூர்வம்!

-அவருடைய பாடல்; அதைக் கேட்கமுடிகின்ற வாய்ப்பு; இரண்டுமே அப்படித்தான்.

பல ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்து 'ஈழநாடு' பத்திரிகையில் கலைநிகழ்ச்சிகளை விமர்சனம் செய்து கொண்டிருந்த வி.என். பாலசுப்பிரமணியம் (வி.என்.பி.) 'குடத்துள் விளக்கு' என்று அவரைக் குறிப்பிட்டார்.

'இசை வானில் ஒரு வால் நட்சத்திரம்' என்று அவரின் பிரகாசத்தையும் இந்த அபூர்வ தோற்றத்தையும் பின்னர் ஒருமுறை- 20 ஆண்டுகளுக்கு முன்னர்- நான் 'ஈழநாடு'இல் எழுதினேன்.

மனோதர்ம சங்கீதம் அவருடையது. ராக ஆலாபனைகள், ஸ்வர பிரஸ்தாரங்கள் நன்றாகவிருக்கும். நளினமான கல்பனாஸ்வரங்கள். சாகித்தியத்தில் நிறைய சங்கதிகள் இருக்கும்.

சுத்தமான- ஓரளவுக்கு முழுமையான- அடக்கமான கச்சேரி அவருடையது என்று ஏற்படுத்திவிட்டவர், எல்லா இடத்திலும் எப்போதும் பாடமாட்டார்.

இது மேலும் ஒரு தரத்தை- ஆவலை அவரின் இசைக்கு ஏற்படுத்தியது.

எடுத்த எடுப்பிலேயே இவர் நாகேஸ்வரி பிரம்மானந்தா என்பது ஈழத்தவர் பலருக்கு புலனாகியிருக்கும். அண்மையில் லண்டன் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் அவரின் கச்சேரியைக் கேட்க நேர்ந்தபோதும் இதே உணர்வுகளும் அநுபவமுந்தான்.

அவரின் இசைப்பாங்கு இன்னமும் அப்படியே இருக்கின்றது. பாபநாசன் சிவனின் “சிங்கார வேலவன் வந்தான்...”

-ஆனந்தபைரவியோடு எழிலாக அணைத்து வந்து பரவசமூட்டினார்.

அப்புறம் தோடி; “கார்த்திகேயா காங்கேயா...”; பிரதான உருப்படி. அவருக்கு 'அநுசரணை' சற்று குறைவாக இருந்தாலும் லாவகமாக சமாளித்தார்; அருமை!

நாகேஸ்வரி பிரம்மானந்தா, சரஸ்வதி பாக்கியராசா, சத்திய பாமா ராஜலிங்கம் என்ற இந்த யாழ்ப்பாணத்து 'இசை மும்மணிகள்'



மூவருமே கொழும்புத்துறையை யாழ்ப்பாணத்து காஞ்சியாக ஒளிர வைத்த தவமுனிவர் சிவயோக சுவாமிகளின் அருளாசி பெற்றவர்கள். இவர்களுடைய கச்சேரிகளிலே யோகசுவாமிகளின் நற்சிந்தனை பாடல்கள் சிறக்கும்.

இன்னுமொன்று, கொழும்புத்துறை காஞ்சி என்றால் இணுவில் பாபநாசம்! வீரமணி ஐயர் இணுவிலைச் சேர்ந்தவர். வீரமணி ஐயரின் சாகித்தியங்கள் சிலவற்றையும் இவர்கள் பாடுவார்கள்.

இந்த கச்சேரி முறை அநுபவமும் அன்று ஏற்பட்டது.

திருமதி நாகேஸ்வரி பிரம்மானந்தா சங்கீதத்தை குருகுலவாச முறைப்படி கற்றவர். நாகர்கோவில் ஹரிஹர ஐயர் இவருடைய குரு.

1971இல் நம்முடைய சிவசக்தி சிவநேசனின் பரதநாட்டிய அரங்கேற்றத்துக்கு திருமதி பிரம்மானந்தா பாடினார்.

வீணை மேதை எஸ்.பாலச்சந்தர் தலைமையில் அந்த அரங்கேற்றம் நடைபெற்றது.

பாலச்சந்தர் சும்மா சொல்லவில்லை. பல விஷயங்களையெல்லாம் சொல்லி, “இந்தியாவிலேயே அரிதான பாட்டை இன்று கேட்டேன். இதை நான் பெருமையோடு இந்தியாவிலேயே சொல்வேன்” என்று சொல்லிச் சென்றார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இவருக்காக ஒரு கச்சேரியை ஏற்பாடு செய்தபோது அந்த சொற்களை பிரம்மானந்தா அங்கேயே சொல்ல வைத்தார். அப்போது, தருமபூஷணம் இரத்தினசாமி செட்டியார் யோகசுவாமிகளின் பாடல்களை இவர்மூலம் பாடுவித்து 'கஸட்டு'களாகவும் வெளியிட்டார்.

இசையில் அலாதியான ஈடுபாடு லண்டனில் இப்போது ஏற்பட்டிருக்கையில் இத்தகைய கலைஞர்கள் அரு வாய்ப்பானவர்கள்.

-மாலி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஹிந்து ராம் செவ்வி



# இந்தியா ஓரிடத்திலிருந்து மட்டும் ஆளக்கூடிய தேசம் அல்ல

**இந்திய அரசியலைக் குலுக்கிய பல பூகம்பங்களில் ஒன்று போஃபோர்ஸ் பீரங்கி ஊழல். டெல்லியில் ஓர் ஆட்சி மாற்றத்தைக்கொண்டு வருமளவுக்கு வீரியம்மிக்கதாக இருந்தது, அந்த ஊழலைப் பற்றிய ஆவணங்கள். இந்த ஆவணங்களை வெளிக் கொண்டு வந்து ஊழல் மன்னர்களை உலகுக்கு அறிவித்த சாதனை 'ப்ரண்ட்லைன்' ஆசிரியரும் 'ஹிந்து' பத்திரிகையின் இணை ஆசிரியருமான திரு என்.ராமுக்கு உண்டு. தனது 22-வது வயதில் அமெரிக்கக்கொலம்பியா பல்கலைக்கழகத்தில் இதழியல் படித்து பட்டமும் தங்கப்பதக்கமும் பெற்றவர். இதழாசிரியராக மட்டுமின்றி பல சமூக அநீதிகளுக்கு எதிராக மேடையில் அவ்வப்போது குரல் கொடுப்பவர்; பத்திரிகைகளின் மீது ஏற்படுகின்ற ஒடுக்குமுறைகளையும், சட்டம் 356-ஐ பிரயோகித்து மோசடித்தனமாக மாநில அரசுகளை மத்திய அரசு கலைக்கும் போதும், கியூபாவின் குரல்வளையை ஏகாதிபத்தியங்கள் நசுக்கும் போதும் முன்வந்து ஓங்கிக் குரல் கொடுத்தவர்- பத்மபூஷன் விருதும் பி.டி.கோயங்கா விருதும் மற்றும் பல விருதுகளும் இதழியல் துறைக்காகப்பெற்றவர். கம்பம் பள்ளத் தாக்கில் ஆய்வு செய்ய வந்த சூசன் என்ற அமெரிக்கப் பெண்ணை மணந்து கொண்டு சென்னையில் வாழ்கிறார். இவர்களுக்கு வித்யா என்ற பெண் உண்டு. அரசியல் பத்திரிகைத்துறை, கலாச்சாரம், பொருளாதாரம் பற்றி பல விஷயங்களுக்கு என்.ராம் பதிலளிக்கிறார்.**

**நன்றி: சுபமங்களா.**

**தாங்கள் மரபு சார்ந்த பழக்கவழக்கங்களைப் பேணும் குடும்பத்திலிருந்து வந்திருக்கிறீர்கள். உங்கள் உள்ளத்தில் புரட்சிகரமான (Radical) எண்ணங்கள் விதைக்கப்படக் காரணமாக இருந்த நிகழ்ச்சிகள் என்ன?**

*1967-68ல் நான் அமெரிக்காவில் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் இதழியல் துறையில் சேர்ந்து படித்துக் கொண்டிருந்தேன். அந்தக் காலங்கள் அமெரிக்காவின் கொந்தளிப்பு நிறைந்த காலங்கள். வியட்நாம் போரில் அமெரிக்கா தலையிட்டதையும், அமெரிக்க இளைஞர்கள் காரணமின்றி வியட்நாமில் பலியிடப்பட்டதையும், வியட்நாமிய மக்கள், குழந்தைகள் மீது அமெரிக்க விமானங்கள் குண்டுமாரி பொழிந்ததையும் எதிர்த்து மக்களும் மாணவர்களும் போர்க்கொடி உயர்த்தி இருந்தனர். பல்கலைக்கழக வளாகங்களிலும், மாணவர்கள் மத்தியிலும் இந்தப் போராட்டங்கள் பரவின. பல்கலைக்கழகங்களை மாணவர்கள் ஆக்கிரமித்தனர். அமெரிக்கா முழுவதும் ஓர் ராணுவத் தளவாட தொழிற்சாலையாக மாறி வருவதை மாணவர்கள் எதிர்த்தனர். இன்னொரு கொதிக்கும் பிரச்னை இன வேற்றுமை. கறுப்பர்களின் உரிமைகளுக்காகவும் அதிகார பலத்திற்காகவும், ஒரு புறம் போராட்டம் நடந்து வந்தது. மார்ட்டின் லூதர் கிங், ராபர்ட் கென்னடி போன்றவர்கள் கொல்லப்பட்டனர். ராப் ப்ரௌன்,கார் மைக்கல் போன்றவர்கள் தீவிரமாகவே கறுப்பு இன மக்களுக்கு ஆதரவாகப் போராட்டங்கள் நடத்தி வந்தனர். அமெரிக்க ஏகாதிபத்தியம் எவ்வளவு கொடுமையானது என்று இந்த நிகழ்ச்சிகள் என் கண்களைத் திறந்து விட்டன. அப்போது இடதுசாரி அரசியலும் பல்கலைக் கழகங்களுக்குள் இடம்பெற்றன. இந்த அரசியலும் என்னைக் கவர்ந்தது.*

**அமெரிக்காவில் ஏற்பட்ட போராட்டங்கள் பற்றி சொன்னீர்கள். அவைகள் எல்லாம் உங்களை மார்க்சிய பாதைக்கு மட்டுமே திருப்பி இருக்க வேண்டிய அவசியமென்ன?**

*இந்தியா வந்தவுடன் 1967-ல் இந்த கொந்தளிப்பு நிலைகள் இருந்தன. இந்தியாவில் பல அடிப்படையான மாற்றங்கள் ஏற்படும் என நம்பினோம். காங்கிரஸ் அல்லாத கட்சிகளின் செல்வாக்கு அதிகரித்தது. மேற்கு வங்கத்தில்*



*ஏற்பட்ட கூட்டணி மந்திரிசபை, கேரளாவில் மார்க்சிஸ்டுகளின் வெற்றி இவையனைத்தும் மிகுந்த உற்சாகத்தை அளித்தன. மேற்கு வங்கத்தில் விவசாயத்துறை அமைச்சர் ஹரிகிருஷ்ண கோனார் கொண்டு வந்த நிலச்சீர்திருத்த சட்டங்கள் என்னைப் பெரிதும் கவர்ந்தன. அதற்கு முன்னதாக மார்க்சிஸ்ட் கட்சியிலுள்ள பெரும் தலைவர்களான ஏ.கே.கோபாலன், இ.எம்.எஸ், பி.டி.ரணதிவே, ஜோதிபாசு, சுர்ஜித், பசவ புன்னையா போன்றவர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. தமிழ்நாட்டில் வி.பி.சிந்தன். இது போன்ற தலைவர்களின் தொடர்பு எனது பார்வையை விசாலப் படுத்தியது.*

**அப்போது சி.பி.ஐ., நக்சலைட் குழுக்களும் இருந்தனவே?**

*சி.பி.ஐ.யில் ராஜேஸ்வரராவ் போன்ற தலைவர்கள் இருந்த போதிலும் காங்கிரசிற்கு ஆதரவான நிலையை அவர்கள் எடுத்தது எனக்குப் பிடிக்கவில்லை. நக்சலைட் வழி முற்றிலும் சரியில்லை என தீர்மானித்தேன். சீனா என்னைக் கவர்ந்த போதிலும் 'சீனத் தலைவரே நம் தலைவர்' என்ற நக்சலைட் கோஷம் என்னை வெறுப்படையச் செய்தது. ஏற்றுக்கொள்ள முடியவில்லை.*

**ஹிந்து பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் அப்போது இருந்தீர்கள். இந்துவினுடைய மிதவாதக் கொள்கைக்கும் உங்களுடைய தீவிர பார்வைக்கும் ஏதாவது மோதல் இருந்ததா?**


*இந்துப் பத்திரிகையில் அப்போது நான் ஆசிரியர் கொள்கை எல்லாம் நிர்ணயிக்கக்கூடிய நிலையில் இல்லை. எனக்கு மேல் மூத்த ஆசிரியர்கள் பலர். நான் வரும் போது ஒரு இளைஞன். வியட்நாம் யுத்தம் பற்றி இந்துவிற்கே மாறுபட்ட கொள்கை இருந்தது. அவர்கள் அதற்கு ஆதரவான ஒரு நிலை எடுத்த போது நான் அதிர்ச்சியடைந்தேன். அதேபோல தஞ்சை விவசாயிகளைப்பற்றி நான் ஆய்வு செய்து எழுதிய போது பல பிரச்னைகள் இருந்தன. எடிட் செய்யப்பட்டு எனது கருத்துக்கள் பிரசுரிக்கப்பட்டன. அப்போது நான் தலையங்கங்கள் எழுதுவதில்லை. இங்கு நிர்வாகத்திற்கும் தொழிற்சங்கத்திற்கும் பெரிய அளவு பிணக்கு வந்தபோது நான் தொழிற்சங்க பக்கமாக இருந்தேன். நிர்வாகம் அதிர்ச்சியுற்றது. நெருக்கடி நிலைமை அதனால் பிரகடனம் செய்தபோது பத்திரிகைத் தணிக்கை முறை அமுலாக்கப்பட்டது. நெருக்கடி நிலையை (Emergency) இந்து எதிர்க்கவில்லை. எமர்ஜென்சிக்கு எதிரான போராட்டத்தில் முழுமையாக நான் ஈடுபட்டேன். 1977-ல் ஜனதா ஆட்சிக்கு வந்தபோது நான் தலையங்கம் எழுத ஆரம்பித்ததோடு இணையாசிரியராகவும் ஆனேன். அப்போது கஸ்தூரி ஆசிரியராக இருந்தார்.*

## பாலஸ்தீன கோரிக்கையும் தமிழீழ கோரிக்கையும் ஒன்றல்ல

**இந்தியப் பத்திரிகைத் துறையில் சரித்திர ரீதியாக இந்திய அரசை குலுக்கி எடுத்த விஷயம் போஃபோர்ஸ். இந்துப் பத்திரிகையில் இது போன்ற விஷயங்களை தோண்டி எடுத்து வெளிக்கொண்டு வந்தது எல்லோருக்கும் ஆச்சரிய மாக இருந்தது. அதன் துவக்கமும் போராட்டங்களும் என்னவாக இருந்தன?**

*போஃபோர்ஸுக்கு முன்னாலேயே ஐ.எம்.எப்.பற்றிய ஒரு பெருங் கதையை இந்துவில் முதன் முதலாக பிரசுரித்தேன். அப்போதுதான் முதன்முதலாக இந்திய அரசு சர்வதேச நிதிய அமைப்போடு (I.M.F) பிரும்மாண்டமான கடனுக்கு ஏற்பாடு செய்திருந்தது. இந்தக் கடனைப் பெற எல்லா சமரசங்களையும் எல்லா நிபந்தனைகளையும் இந்திய அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தது. ஆறு பில்லியன் டாலர் (அறுநூறு கோடி டாலர்) கடனுக்கான நிபந்தனைகளையும் கழுத்தை இறுக்கும் கட்டுப்பாடுகளையும் திருமதி இந்திராகாந்தியும் அவரது அரசும் முற்றிலும் மறைக்கப் பார்த்தன. அப்போது ஆர்.வெங்கட்ராமன் நிதி மந்திரியாகவிருந்தார். இப்போது நரசிம்மம் கமிட்டி தலைவராக இருக்கும் நரசிம்மம்தான் கடன் பெறுவதற்கான பேச்சு வார்த்தைகளை நடத்திக் கொண்டிருந்தார். மறைக்க முயன்ற அந்த ஆவணம் முழுவதையும் பொதுமக்கள் பார்வைக்காக வெளிக்கொண்டு வந்தேன்.*

*பீரங்கி விஷயத்தில் ஏதோ மர்மம் இருக்கிறது எனத் தீர்மானித்தோம். இதில் யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரம் முதலில் தெரியா விட்டாலும் ராஜீவ் காந்தி இதை துருவி ஆராயத் தயாராக இல்லை என்று தெரிய வந்தது. நாங்கள் படிப்படியாக இதில் முயன்றோம். இந்தியன் எக்ஸ்பிரசும் முயன்றது. டைம்ஸ் ஆஃப் இந்தியா போன்ற மற்ற பத்திரிகைகள் இதில் உற்சாகம் காட்டவில்லை. சுவிட்சர்லாந்தில் உள்ள சித்ரா சுப்ரமணியத்தின உதவியுடனும் ஹெல்சிங்கியில் உள்ள என் நண்பர் வி.கே.ராமச்சந்திரன் உதவியுடனும் இதில் முயன்றேன். சர்வதேச வளர்ச்சி பொருளாதார இன்ஸ்டிடியூட்டில் அவர் வேலை பார்க்கிறார். பீரங்கி ஊழலை பின் தொடர்ந்து போனதில் அவருடைய பணி மிகச் சிறப்பானது. அவர் முழு நேரப் பத்திரிகையாளராக இல்லாவிட்டாலும் அடிக்கடி ஸ்வீடன் சென்று உடனுக்குடன் பல தகவல்களைச் சேகரித்துக் கொடுத்தார். இந்தியன் எக்ஸ்பிரஸ் காரர்கள் 'இதில் அமிதாபச்சன் சம்பந்தப்பட்டிருப்பார்' என்று முன்கூட்டி அனுமானித்துக்கொண்டு புலன் விசாரணையைத் தொடங்கினர். அது தவறாகப் போய் விட்டது. இடையில் ஹிந்துஜாவும் தனக்கு தெரிந்த தகவல்களை மிகுந்த ஆர்வத்துடன் கொடுத்த போது அவர்களின் அளவு கடந்த ஆர்வம் எங்களுக்குச் சந்தேகத்தைக் கொடுத்தது. அவர்கள் கொடுத்த குறிப்புகள் மூலம் பல விஷயங்கள் ஒத்துப்போயின. பாராளுமக்ற இணைக்குழுவில் ஆலடி அருணா மிகச் சிறந்த பங்களிப்பைச் செய்தார். Pitco, சங்கம் லிமிட்டெட் என்ற பெயரில் ஹிந்துஜா பெற்ற பணம் போன்ற விவரங்கள் எல்லாம் வெளிவந்தன. மறைமலை நகரில் காங்கிரஸ் மகாநாடு நடக்கும் அன்று இந்த விஷயங்கள் இந்துவில் வந்தன. 1988 ஏப்பிரலிலும், 1988 ஜூனிலும் நூற்றுக்கணக்கான ஆவணங்கள் பிரசுரித்தோம். ஆர்ட்போ டயரிக் குறிப்புகள் அவர் கையெழுத்து தானா என தீர்மானம் செய்ய நான் இரண்டொருமுறை ஸ்வீடன் சென்றேன்.இந்து பத்திரிகை வெளிவருவதைத் தடுக்க பல முயற்சிகள் நடந்தன. என்னிடமுள்ள*



(17ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அவள் வந்து நிற்கிறாளாம்



சிறுகதை

**ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்**

**கா**லையில் பள்ளிக்கூடத்துக்குப் போகும்போது மனைவி சொன்னாள், "அவள்" வந்து நிற்பதாக.

அறுந்த செருப்பை ஒரு விதமாக "அட்ஜஸ்ட்" பண்ணிப் போட்டவன், அவசரத்தில் ஒரேயடியாகச் செருப்பை அறுத்துவிட்டான். அழும் குழந்தைக்குப் பால் கொடுத்தபடி மனைவி சொல்கிறாள், "உங்களைக் கேட்டாள் சுசீலா; எப்படி இருக்கிறது உங்கள் எழுத்து என்றும் கேட்டாள்."

இன்னும் அவளுக்கு நினைவிருக்கிறதா? தன் பரபரப்பை எக்காரணம் கொண்டும் மனைவி காணக்கூடாது என்ற தவிப்பு. அவன் சுவரில் மாட்டியிருந்த கண்ணாடியில் பார்த்துத் தலை சீவிக் கொண்டான். "ஒன்றிண்டு நாவல்கள் எழுதியிருப்பதாகச் சொன்னேன்" தன் எழுத்தாளக் கணவனில் உள்ள பெருமை மனைவியின் குரலில் தெரிகிறது.

அவன் மறுமொழியை அவள் எதிர்பார்த்துச் சொல்லாதபடியால் அவனின் மௌனம் அசாதாரணமாக அவளுக்குத் தெரியவில்லை. ஆனால் அவனுக்குத் தெரியும் தன் மௌனம் அசாதாரணம் என்பது. தன்னை இன்னும் ஞாபகம் வைத்திருக்கிறாளாம்!

அவள் வந்து நிற்பது ஆச்சரியமில்லை. லண்டனில் வாழ்பவர்கள் ஒரு சில வருடங்களுக்கொருதரம் இலங்கை வந்து தங்களின் லண்டன் சீவியத்தைப் "புழுகிப்" போட்டுப் போவது புதினமில்லை. அவனைக் கேட்டதுதான் ஆச்சரியமாக இருந்தது.

அவனும் வந்திருக்கலாம். கணவன், குழந்தை குட்டிகளுடன் நிறையக் காசுடன் வந்திருக்கலாம். லண்டனால் வரும் ஒரு சிலர் போல் தெரிந்தும் தெரியாதமாதிரிப் போகலாம். இவர்களுடன் என்ன இருக்கிறது கதைப்பதற்கு என்பது போல் எடுத்தெறிந்து நடத்தலாம்.

ஆனால், 'என்னைக் கேட்டாளாம், என் எழுத்தைப்பற்றிக் கேட்டாளாம். ஏதும் புத்தகம் எழுதியிருக்கிறேனா என்றும் கேட்டாளாம்.'

சிந்தனையில், அவன் ஐந்து நிமிடங்களுக்கு மேல் வாரிய தலைமயிரை வாரிக் கொண்டிருப்பதை மனைவி வியப்புடன் பார்ப்பது கண்ணாடிக்குள்ளால் தெரிகிறது. மெல்லமாக முடித்துப் கொள்கிறான். மனைவியைக் கேட்கலாமா? எங்கே கண்டாள் சுசீலாவை, எப்படி இருக்கிறாள் சுசீலா என்று கேட்கலாமா?

மனைவி சந்தேகப்பட ஒன்றுமில்லை. அவன், அவன் மனைவி, சுசீலா என்னும் "அவள்" எல்லோரும் ஒரு காலத்தில் ஒரு பாடசாலையில் படித்தவர்கள். சுற்றி வளைத்த சொந்தக்காரர்கள். இவன் எழுதத் தொடங்கிய காலத்தில் பாடசாலை வாசகர் வட்டத்தில் சுசீலாவும் ஒருத்தி. வாசிப்பது பொழுது போக்கு. வெறும் வாசகியா?

அவன் தன் மனைவியிடம் "அவளைப்" பற்றி ஒன்றும் கேட்காமல் சைக்கிளைத் தள்ளுகிறாள். "ஆரோடும் கதைத்துக் கொண்டிராமல் வெள்ளெண வாங்கோ" மனைவி சரோஜா கத்துகிறாள். அவன் "ஓம்" என்று சொல்லும்போது சைக்கிள் ஒழுங்கையில் இறங்கி விட்டது. கோயிலுக்குப் போகவேணுமாம் சரோஜா. மணல் நிரம்பிய ஒழுங்கையில் சைக்கிள் சில்லுகள் புதைய அவன் உருட்டிக் கொண்டு செல்கிறான்.

எப்போது வந்தாளாம்? அவள் நினைவு உருள்கிறது மனத்தில். யாரிடமும் கேட்க விருப்பமில்லை. இந்த ஒழுங்கையால் போய்க் கொண்டிருக்கிறான். ஒழுங்கை போய் ரோட்டில் முடிகிறது. தார்ரோட்டில் ஏறாமல் கிரவல் ரோட்டால் போனால் அவளின் வீட்டைத்தாண்டிப்போகலாம். எட்டு வருடங்களுக்கு முன் அடிக்கடி அப்படித்தான் போவான். "அவளுக்குத்" தெரியும் ஏன்அப்படிக் கிரவல் ரோட்டுப் பிரயாணம் செய்கிறான் என்பது.

மழைக் காலங்களில் சேறும் சகதியுமாய் கால்புதைய அவன் வேட்டியை உயர்த்திக் கொண்டு கிரவல் ரோட்டில் விஜயம் செய்வதை வாழை மர இடுக்குகளால் அவள் கண்கள் எட்டிப் பார்க்கும்.

இருவரும் நடித்துக் கொள்வார்கள் ஒருவரை ஒருவர் கவனிக்கவில்லைஎன்று. "தார் ரோட்டால் போகலாமே" ஆச்சி சொன்னாள் அவன் வேட்டியெல்லாம் கிரவல் புரண்டிருப்பதைப் பார்த்து.

"கிரவல் ரோட்டில் பார்த்து நடக்கலாம். தார் ரோட்டில் பார்த்து நடக்க முதல் வண்டிலும் காரும் தண்ணியடிச்சுப் பழுதாக்கிப் போடும் ஆக்களை" கிழவி நம்பத் தக்கதாக அவன் சாட்டுச் சொல்வான்.

மழைகாலம் வருவது அவனுக்குப் பிடிக்காது. ஏனென்றால் சிலவேளை கிரவல் ரோட்டு ஆட்களையே அமிழ்த்தி விடும் அளவு சகதியாய் இருக்கும்.

இருந்தும் அவன் போவான். அவள் காத்திருப்பது தெரியும். அடிக்கடி இல்லை என்றாலும் இருந்திருந்து ஒரு நாள் போவான். தன் எழுத்துக்களை எடுத்துக் கொண்டு அவளிடம் காட்டப் போவான். அவனின் முதலாவது வாசகி அவள். தூரத்து உறவு. பார்ப்போருக்கு அதிகம் சந்தேகம் இருக்காது என்பது அவன் நம்பிக்கை.

காரணங்கள் பல. ஏழ்மைகள், இல்லாமைகள் என்பன காரணங்கள். கதைகளில் வேண்டுமானால் ஏழை வேலைக்காரனை பணம் படைத்த ராஜகுமாரி காதலுக்காகக் கல்யாணம் செய்யலாம். இலங்கை தமிழர்களுக்கிடையில் அப்படி நடக்குமா என்பது அவனால் நம்ப முடியாதது.

அவன் சைக்கிளை தார் ரோட்டில் திருப்புகிறான். நேர் எதிரே கிரவல் ரோட்டுத் தெரிகிறது. அவன் ஒரு காலத்தில் படித்த, இப்போது படிப்பிக்கும் பாடசாலை நேரே இருக்கிறது அந்தக் கிரவல் ரோட்டின் முடிவில்.

ஆனால் அவன் தார் ரோட்டில் போகிறான். சுற்றி வளைத்த தூரம். ஏன் அவளைக் கண்டாலும் என்ற சந்தேகமா?



அவன் சைக்கிளில் ஏறியிருந்து மிதிக்கிறான். எவ்வளவு காலம் நிற்பாளாம் ஊரில்?

எங்களை எல்லாம் சொந்தம் என்று நினைத்து ஏன் வந்து பார்க்கப்போகிறாள்? நாங்கள் தான் பார்க்கப்போக வேண்டும்!

அவனுக்கு அந்த யோசனை திருப்தி தருவதாக இல்லை. அவன் சைக்கிளைக் காருக்கு வழிவிட வெட்டிய விதத்திலிருந்து மனதில் உறைக்கிறது. வசதியானவர்களுக்கு நான் ஏன் வளைந்து கொடுக்க வேண்டும்? சொந்தம் என்ற உறவிலா பழகினோம்?

மெல்லிய பெருமூச்சுடன் ரோட்டின் வளைவில் திரும்புகிறான். அவனின் முதற் கவிதையை அவள் படித்த போது அவளது கண்களில் இருந்த ஆவல், கள்ளம் கபடமற்ற முகத்தில் தோன்றிய உணர்ச்சிகள்.... விபரிக்க முடியாதவை.

"யாரைப் பாத்து எழுதினீர்கள்" அவள் குறும்பாகக் கேட்டாள். 'உன்னைப் பார்த்து' என்று சொல்லானோ என்ற சபலம்!

"கலைஞர்கள் கற்பனையில் யாரைப் படம் பிடிக்கிறார்கள் என்பது பெரிய ரகசியம்" அவன் வார்த்தைகளால் தன் சங்கடத்தை மறைத்துக் கொண்டான்.

"விடிந்தவுடன் நினைக்கின்றேன்,
விண்வெளியில் தேடுகின்றேன்
சதங்கை ஒலி தெருவில் கேட்டால் அவள் சங்கீதம் தான் கேட்கும்
மென்விழிகள் மீனாக, பொன் மொழிகள் இசையாக என் அருகில் அவள் இருந்தால் ஈடென்ன? நான் ஏழை!
அவள்,
என்னவளாய் இருப்பாளோ
இனிய கதை சொல்வாளோ"

இதுதான் அவன் முதல் கவிதை. இருவருக்கும் தெரியும் ஏன் ஏழுதப்பட்டது என்று.

"இப்படியெல்லாம் எழுதினால் உங்களுக்கு யாரோ பெட்டை இருக்கினம் எண்டு சொல்லப் போகினம்"

கவிதை வாசித்த கண்கள் நாணத்தில் நனைய அவள் அவனைப் பார்க்காமல் சொன்னாள்.

"பேப்பருக்கு அனுப்பமாட்டேன். அவர்கள் போட மாட்டார்கள்". அவன் உறுதியளித்தான் மறைமுகமாக அந்தக் கவிதை இருவருக்கும் ரகசியமாய் எழுதப்பட்டதை உணர்த்த.

இன்னும் எத்தனையோ, எத்தனையோ? கொஞ்ச காலத்துக்கு முன் ஒரு முதிர்ந்த எழுத்தாளர் கேட்டார் "வாழ்க்கையில் என்ன நிகழ்ச்சி உங்களை எழுதப் பண்ணியது?" அவனுக்கு மறுமொழி சொல்லத் தெரியவில்லை. 'வயிற்றை வாட்டும் பட்டினியில் முகட்டைப் பார்த்துக் கொண்டு படுக்கும் போது பணக்காரர்கள் அழிய வேண்டும்' என்ற வசைமாரிதான் முதலில் அவனால் உண்டாக்கப் பட்ட வசனக்கோர்வை என்று சொன்னால் அவர் விளங்கிக் கொள்வார் என்று அவன் நம்பவில்லை.

கேட்டவர் பிரசித்தி பெற்ற எழுத்தாளர். ஆகாயத்தைப் பார்த்து நிர்மலமான நீல வானத்தில் தன் அடுத்த படைப்புக்கு ஆக்கம் தேடுபவர்.

அவர் அனுபவித்திருப்பாரா இரண்டு நேரப்பசியை அவர் பத்து வயதாய் இருந்தபோது?

மூத்திரம் பேயப்போய் வீட்டுக்குப் பின் சுவரில் எழுதியிருப்பாரா? "இறைவன் என்று யாருமில்லை. ஏழைகள் தான் உலகமெல்லாம். எங்கும் "அவன்" இருப்பானேல் என் பசியைத் தெரியானோ?"

அம்மா காற்சட்டையைக் கழற்றிவிட்டு குண்டியில் இரண்டு வைத்தாள், சுவரில் கரியால் எழுதிய குற்றத்திற்கு.

அதன் பிறகு?

இளமை, அதன் தூண்டுதல்கள், உணர்ச்சிக் குவியல்கள்.

இல்லாமை! இல்லாமைகள்.

இரண்டுவிதமான இல்லாமை. வறுமை என்ற இல்லாமை. தான் விரும்பும் பெண்ணுடன் பழக முடியாத- வறுமையின் மறுபக்கம் என்ற கொடிய இல்லாமை.

அவன் எழுதத் தொடங்கியபோது யாரும் பொருட்படுத்தவில்லை பெரிதாக. விசர் அலட்டல்கள் அவர்களுக்கு.. அவர்கள் சிவாஜி கணேசனின் சிம்மக்குரல் கேட்க செக்கண்ட் ஷோவுக்குப் போவார்கள். இவனின் புலம்பல்கள் பொருளற்றவை அவர்களைப் பொறுத்த வரையில். அவள் அப்படியில்லை.

> "இறைவன் என்று யாருமில்லை. ஏழைகள் தான் உலகமெல்லாம். எங்கும் "அவன்" இருப்பானேல் என் பசியைத் தெரியானோ!"
> அம்மா காற்சட்டையைக் கழற்றிவிட்டு குண்டியில் இரண்டு வைத்தாள், சுவரில் கரியால் எழுதிய குற்றத்திற்கு.

அப்படியில்லாமல் இருந்ததற்கு அவன் எழுத்து மட்டுமல்ல

அவனின் ஏழ்மையும்தான் காரணம் என்பதை அவளின் குடும்பம் மறை முகமாகக் காட்டிக் கொண்டபொது அவனால் தாங்கமுடியாமல் இருந்தது. தங்களுக்கு ஆபத்தில்லாதவரை தங்கள் வர்க்கத்திற்கு அவன் வருகை பாதிப்பளிக்காது என்று அவர்கள் நினைத்ததை அவள் மறைமுகமாகச் சொன்னாள்.

அந்த வீட்டில் தன் வருகை என்னவிதமாகப் பொருட்படுத்தப்படுகிறது என்பதையறிய ஒருநாள் சொன்னான்.

"எழுத்தைச் சாட்டிக் கொண்டு இஞ்ச வாறதைப் பற்றி ஆக்கள் என்னவும் நினைப்பினம்" ஆட்கள் நினைக்கிறார்களோ இல்லையோ அப்படி அவன் நினைத்துக் கொள்வதில் சந்தோசப்படுகிறான் என்பதைத் தெரியாத அவள் அவனை ஏறிட்டுப்பார்த்து "ஆக்கள் அப்படிக் கதையாயினம். உங்களுக்கு ஒரு மாதிரியாய் இருந்தா

(14ம் பக்கம் பார்க்க)




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எழில் பெருகும் சீசெல்சில் அருள் பெருகும் விநாயகர்



தமிழன் என்றொரு இனமுண்டு. அவர்கட்கு தனித்தன்மையுடைய கலாச்சாரம் உண்டு.சிறந்த மானிடப் பண்பாடு உண்டு. இவற்றை பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழ் முந்தையோர் சொல்லிப் போந்தார்கள். இந்த வார்த்தைகள், அதனுள் அமைந்திருக்கும் தத்துவம் என்பன கால தேச வர்த்தமானங்களை கடந்து நிலைத்து நிற்கும் சத்தியமானவை என்பது தெளிவு.

தமிழர்தம் வரலாற்றில் மன்னர் ஆட்சி, அந்நியர் ஆட்சி,சுதந்திர போராட்ட காலங்கள், என காலங்களின் தன்மைகள் வேறுபட்டுக் கொண்டுவந்திருக்கின்றன. எவை எப்படியாக அமைந்தாலும், எம் முன்னோர்கள் தமிழ் மொழியை- கலாச்சாரம் பண்பாடு- இவைகளை தமது இதய சிம்மாசனத்தில் நிலையான உறுதியுடன் போற்றி வந்திருக்கிறார்கள். அதனால் தானன்றோ இன்றும் தமிழர் சிறப்புடன் வாழ்வது சாத்தியமாகின்றது. அந்த வகையிலே எமது எதிர்கால சந்ததியினரின் வாழ்வுக்கும் வளத்துக்கும் வழிசமைக்கும் பாரிய பொறுப்பு இன்று உலகெங்கிலும் பரந்துவாழும் தமிழ் மக்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு. இந்தக் காலப்பகுதிகளில் தாய்நாடுகளிலிருந்து, சுற்றம் சூழல் இவைகளைப் பிரிந்து பல்லாயிரம் மைல்கட்கு அப்பால் புலம்பெயர்ந்து பல கலாச்சார சங்கமங்களில் வாழ தமிழர் விழைந்திருக்கின்றார்கள். அவர்கள் தமது அடையாளங்களை உறுதிப்படுத்திக் கொள்ள முனைகிறார்கள். தம் மொழி- சமய கலாச்சார நெறிமுறை களுடன் தம் இளையதுகளை இணைத்துக் கொள்ள முயல்கிறார்கள். இப்படியான செயற்பாடுகள் தமிழர்தம் எதிர்கால வாழ்வின் பிரகாசத்துக்கு கட்டியம் கூறுகின்றன என்பது திண்ணம். இந்துமா கடலின் நடுவே இருக்கும் சீசெல்சு நாட்டில் அண்மைக் காலத்தில் அமையப் பெற்ற தமிழர்- சைவசமய நிகழ்வு ஒன்றை தமிழ் கூறும் நல்லுலகின் கவனத்துக்கு கொண்டுவர இக்கட்டுரை முனைகின்றது.

## சீரும் திருவும்

இந்து சதுத்திரத்தின் தென்மேற்கு கோடிக்கு சற்று அண்மித்து கடலின் மத்தியில் உள்ள மரகத தீவுகள் சீசெல்சு நாடாகும். "திருவோடு" காய்க்கும் கொக்கோடிமர் மரம் வளரும் நாடு. இயற்கை அன்னை இளைமைமாறாத கனிவுடனும் அழகுடனும் புதுமணப்பெண்ணின் பொலிவுடனும் நாணத்துடனும் காட்சி தருகின்றாள். இந்த தீவுக்கு புலம்பெயர்ந்த முன்னோடிகளுள் முதன்மையானவர் தமிழ்நாடு தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த வைத்தியலிங்கம் எனும் தமிழர் என்பது வாய்வழியாகச் சொல்லப் பட்டுவரும் வரலாற்றுச் செய்தியாகும்.

சீசெல்சு தீவின்- நிலமென்னும் நல்லாளின் இயற்கை மாறாத இளமையான இலக்கிய அழகை காண உலகின் பல பகுதிகளிலுமிருந்தும் மக்கள் வருவார்கள். திரை கடலோடியும் திரவியம் தேடு என்று தமிழ் மூதாட்டி ஔவை சொல்லிப் போந்ததை பல தமிழர்கள் செயலாக்க முனைந்தார்கள். அவர்களுள் ஒரு பகுதியினர் சீசெல்சு அன்

**சி.சிற்சபேசன்**

னைக்கு அமையப்பெற்ற இலட்சுமி கடாட்சத்தை கண்டார்கள். தமிழர்கள் துணிந்தார்கள். கடல் கடந்தார்கள். சீசெல்சுக்கு புலம் பெயர்ந்தார்கள். கடும் உழைப்பை உயிர் மூச்சாக்கினார்கள். இலட்சுமிதேவியும் புலம் பெயர்ந்த தமிழர் தம் பக்கம் கடைக்கண் பார்வையை அருளினாள். ஆனால் புலம் பெயர்ந்த தமிழர்கள் உள்ளூர் சமுகத்துடன் சங்கமிப்பதில் திணறினார்கள். மாறுபட்ட சமூக கலாச்சார சூழலிலே அமைந்து வந்த அரசியல் தட்ப- வெப்ப தன்மையதான மாற்றங்கள் தமிழர்கட்கு புதியவை. எதிர்காலச் சிந்தனை பொருளாதாரத்தை மையப்படுத்தியிருந்தது. தமிழ் கலாச்சார- சைவ வழிபாட்டு முறைமைகளை தமது இளம் சந்ததியினர்க்கு இலகுவாக ஏற்படுத்திக் கொண்டு விட முடியாத இறுக்கமான நிலை. சராசரிக்கு மேற்பட்ட திரவிய சிந்தனையின் ஆதிக்கம், முழுமை பெறாத கூட்டுணர்வு என்பன சீசெல்சு தமிழர்களை நத்தை போன்று "சுருட்டிக்கொள்தல்" என்ற நிலைப் பாட்டுக்கு உட்படுத்திற்று. இந்நிலைகண்டு சில பல தமிழர்கள் மிகவும் வருத்தமடைந்தார்கள். ஆதங்கம் காரிருளாக அவர்தம் உள்ளங்களை கவிந்து கொண்டது. பொது இடங்களில் கலாச்சால நிகழ்வுகளை- சைவசமய கூட்டு வழிபாடுகள் செயலாக்க நிலை.

## சிந்தனையும் செயலும்

அன்றொருகால் ஈழம்- தமிழ்நாடு பகுதிகள் அந்நியர் ஆட்சியில் சிக்கியிருந்தன. கத்தோலிக்கமதம் அரச கட்டிலில் தாலாட்டப்பட்டது. மாற்று மதங்கள் முடக்கப்பட்டன. யாழ்ப்பாணத்துச் சைவசமயத்தவர்கள் திணறினார்கள். நல்லைநகர் தந்த செல்வம் ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணத்தவர்க்கு நம்பிக்கை நட்சத்திரம். தமிழர் தம் சொந்த மண்ணிலேயே அடிமைகளாக வாழும் நிலை. சமயச் சின்னங்கள் அணிய முடிவதில்லை. விரதங்கள் அனுட்டானங்களை பின்பற்ற முடியவில்லை. வேதனைப்பட்டார்கள். ஆனாலும் மனம் தளரவில்லை. தத்தமது வீடுகட்குள்ளேயே சைவசமய நெறிமுறைகளை கடைப்பிடித்தார்கள். ஆடி அமாவாசைக்கு விரதம் நோற்றார்கள். ஆனால் சாப்பிட்ட வாழை இலைகளை வெளியே போடக் கூட முடியவில்லை, "தாவார" கிடுகுக்குள் மறைத்து வைக்க வேண்டிய நிலை. காரணம் வெளியே வாழை இலைகள் காணப்படும்போது விரதம் நோற்ற செய்தி அரசுக்கு- அரச ஏவலர்கட்கு தெரிந்து போய்விடும். அதனால் ஏற்படும் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும் என்ற அச்ச உணர்வு.

அந்தக் காலப்பகுதிகளில் ஈழத்து பகுதிகளில் இருந்த நிலையை சீசெல்சு தமிழர்களுடன் முழுமையாக ஒப்பீடு செய்ய முடியாது. இருப்பினும் சீசெல்சு அரசு சிறுபான்மை இனங்களுள் பெரும்பான்மையாக வாழும் தமிழ் இனத்தவரின் மத- கலாச்சார உணர்வுகளை உரிய விதத்தில் மதிப்பீடு செய்து கௌரவம் செய்ததாகத் தெரியவில்லை. தமிழருக்கே உரித்தான "ஒதுங்கி" வாழும் நிலைப்பாடுகளாலும் திரவிய ஆதிக்க சிந்தனைகளாலும் முழுமைபெற்ற கூட்டுணர்வு காணப்படாததாலும்- சீசெல்சில் சைவசமய- தமிழ் கலாச்சார பேணல்கள் வளர்ச்சிகள் பெருமளவில் தடைப்பட்டிருந்தன. "கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே" என்று பாடிய நாவுக்கரசர் பரம்பரையின் சொந்தக்காரர்கள் அல்லவா? சைவசமய நிலைப்பாடுகளை வெளிப்படுத்திக் கொள்ளாவிட்டாலும் சீசெல்சு தமிழர்கள் சிவசிந்தனையுடன் வாழ்ந்தார்கள்.

## விரதமும் வாழையிலையும்

இப்படியாக அமைந்து வந்தது சீசெல்சு தமிழர்களின் சமூக வாழ்க்கை. 1980களின் நடுப்பகுதிகளில் தொழில் நிமித்தம் யாழ்ப்பாணத்துச் சைவசமயத்தவர்கள் சீசெல்சில் குடியேறினார்கள். சீசெல்சு சைவ- தமிழ் இயக்கத்துக்கு உந்து சக்தியாக அமைந்தார்கள். உயிர் கொடுத்தார்கள். நாவலரின் தமிழ்- சைவ தோட்டத்தில் மலர்ந்த மலர்கள் வளர்ச்சியின் முதிர்ச்சியில் நறுமணம் பரப்ப தொடங்கினார்கள். சீசெல்சுவில் தமிழ் கலாச்சாரம் நிலைநிறுத்தப்பட வேண்டும், பேணப்படவேண்டும் என்ற சிந்தனை வேரூன்றத் தொடங்கியது. கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற ஔவைப்பிராட்டியின் அறிவுரையையும் அறிந்தார்கள், தெரிந்தார்கள். ஐக்கிய நாடுகள் உணவுதிட்ட ஆலோசகராக சீசெல்சு அரசுடன் அக்காலங்களில் பணி புரிந்த யாழ்ப்பாணத்தவர் கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன் அவர்கள் முன்னின்று முனைப்புடன் செயற்பட்டார். சீசெல்சு தமிழர்களை ஒருங்கிணைத்தார். இதுவரை முனைப்போடு செயற்படாமைக்கான காரணங்களை கற்பித்துக் கொண்டு காலம் விரயம் செய்ய மாட்டோம்; இனிவருங்காலங்களில் கூட்டாகச் செயற்படுவோம்; எமது கலாச்சாரம் பேணல்- வளர்ப்பு முயற்சிகளில் முன்னின்று முனைப்புடன் செய்வோம் என திடசங்கற்பம் பூண்டார்கள். 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப -எண்ணியார் திண்ணிய ராகப்பெறின்' என்றார் த்மிழ் மறை தந்த வள்ளுவப் பெருந்தகை.



சீசெல்சு தமிழ் சைவ அன்பர்கள் ஒன்று கூடினார்கள். திட்டங்கள் வகுத்தார்கள். பெருவர்த்தகர், தமிழ் நாட்டவர், தமிழ் ஆர்வலர் திரு.தீனுப்பிள்ளை தலைமையில் சீசெல்சு இந்து கோவில் சங்கம் அமைந்தார்கள். இளைஞர்கள் வேகம் காட்டினார்கள். அனுபவ முதிர்ச்சி பெற்ற முதியவர்கள் விவேகமான ஊக்கமுடன் செயற்பட்டார்கள். இந்து கோவில் நிர்மாண பணிகள் தொடங்கப்பட்டன. பரிணாம வளர்ச்சியடைந்து கோவில் நிர்மாண பணிகள் துரிதகதியில் செயல்படத் தொடங்கின. பிரமோதூத ஆண்டு சித்திரைத் திங்கள் இருபத்திமூன்றாம் நாள் (06.05.1990) அடிக்கல் நாட்டும் திருநாள் சிறப்புடன் நடந்தேறியது. தமிழ் நாட்டு செய்தியாளரும் இந்துசமய பணிகளில் தம்மை இணைத்துக் கொண்டுள்ளவருமான திரு. மணியன் இவ்விழாவில் சிறப்பு பங்காளராக கலந்து கொண்டார்.

சீசெல்சுவில் வாழும் தமிழர்கள் தமிழ்நாடு, ஈழம், மலேசியா என்ற வேறுபட்ட நிலப்பரப்புகளில் இருந்து புலம்பெயர்ந்தும் தொழில் நிமித்தமாகவும் வந்தவர்கள். கடல் பிரிக்கும் நிலப்பரப்புகளை தாயகமாக கொண்டவர்கள். நாட்டு எல்லைக்கோடுகளால் பிரிக்கப் பட்டவர்கள். அரசியல் மாற்றுக் கருத்துக்களை கொண்டவர்கள். இருந்த போதிலும், தமிழர் என்ற உயர்ந்த சிந்தனையும் உணர்வும் சீசெல்சு தமிழர்களை ஒன்று சேர்க்கின்றது. சீசெல்சு தமிழர்கள் தமிழ்ப் பெருங்குடும்பமாக வாழ்கின்றார்கள். அந்தந்த காலத்தின் சிறந்த பிரதிநிதிகளாக இருந்து சேர சோழ பாண்டிய மன்னர்கள்

தமிழ்- சைவ தொண்டு செய்தமை, நாயன்மார்கள், ஆழ்வார்கள் சைவ- தமிழ் மறுமலர்ச்சிக்கு தொண்டு புரிந்தமை, நாவலர், விபுலானந்தர், பாரதி, மறைமலையடிகள் தமிழ் தொண்டு செய்தமையை நினைவு கொண்டார்கள். தாமும் தம்முடைய காலத்தில் சிறந்த பிரதிநிதிகளாகச் செயற்பட விழைந்தார்கள். உறுதி ஏற்றுக் கொண்டார்கள். பொருள் தந்தவர்கள், உடல் உழைப்பை தந்தவர்கள் என எல்லோரும் ஒன்று கூடி செயற்பட்டார்கள்.

திருவள்ளுவராண்டு சித்திரைத் திங்கள் இருபத்திநான்காவது நாள் (06.05.92) சீசெல்சு அருள்மிகு நவசக்தி விநாயகர் நூதன ஆலய குடமுழுக்கு விழா மங்கள வாத்தியங்கள் முழங்க, ஆகமவிதிப்படி சிவாச்சாரியார்களால் சிறப்பாக நடாத்தி வைக்கப்பெற்றது. சீசெல்சு சைவ பெருமக்கள் சார்பில் யாழ்ப்பாணத்தவர் சிவசுப்பிரமணியம் தம்பதிகள் சங்கற்பம் செய்து சமயச்சடங்குகளை நிறைவேற்றினார்கள். குடமுழக்கு விழாவிலும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற விழாக்களிலும் சிறப்பு பங்காளர்களாக சீசெல்சு, மொரீசியஸ் தீவுகளின் அரசாங்க பிரதிநிதிகள் அமைச்சர்கள் சென்னையிலிருந்து அரசியல்- தமிழ் பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள். விக்கினங்கள் தீர்க்கும் விநாயகப் பெருமான் சீசெல்சு கோவிலில் மூலவராக எழுந்தருளியுள்ளார். சிவகாமி சமேத நடராசர், தமிழ் கடவுள் முருகன், சீனிவாசப் பெருமாள், மகாலட்சுமி, துர்க்கை, பைரவர், சண்டிகேசுவரர் விக்கிரங்களும் எழுந்தருளுவிக்கப் பட்டன. சீசெல்சு தமிழ்- சைவ வரலாற்றில் அருள்மிகு நவசக்தி விநாயகர் நூதன ஆலயம் ஓர் மைல் கல் நிகழ்வாகும் என்பதில் இரு வேறுபட்ட கருத்து நிலவ முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அவள் வந்து......

(12ம் பக்க தொடர்ச்சி)

வராதேங்கோ" என்றாள். அவனுக்குப் பகீரென்றது. அவள் பார்வை அவனின் கசங்கிய உடுப்பிலிருந்தது. அப்படித்தன் இல்லாமைகளையும் இயலாமைகளையும் பறை சாற்றிக் கொள்ள அவன் இளமனம் மறுத்தது.

அவன் போகவில்லை.

கல்கி, கலைமகள் கதைகளைப் பற்றி அவளிடம் கதைக்கப்போக வில்லை.

அவர்களிடம் புத்தகங்கள் வாங்கி "ஓசி"யில் படிக்காமல் இருந்து கொஞ்ச காலம் வாசகசாலைக்குப் போனான்.

சும்மா வாசித்தெறியாமல் சில கதைகளும் கருத்துக்களும் மனதில் உறைக்கும் போது அதுபற்றி அவளிடம் கதைக்க வேண்டும் போல் இருக்கும்.

அவளுக்கு இலக்கியத்தில் அக்கறையுண்டு என்பது அவன் அபிப்பிராயம். அப்படி நினைக்கப் பண்ணியிருந்தாள் அவள். ஆனாலும் சில மாதங்கள் போகவில்லை.

ஒரு நாள் கிரவல் ரோட்டில் போகும்போது அவள் தட்டு வேலிக்கு மேலால் எட்டிப் பார்த்தாள்.

மெல்லிய சிரிப்பு அவள் முகத்தில் படர்ந்திருந்தது.

"என்ன வழி மறந்து போச்சா" என்றாள்.

அவன் தயங்கினான்.

"ஆச்சி கேட்டாள் உங்களைக் காணயில்ல எண்டு." அவள் நெளிந்து கொண்டு சொன்னாள்.

கிழவி கடைசி வரைக்கும் அவன் பெயரைச் சொல்லியிருக்க மாட்டாள். செருக் குப் பிடித்த கிழவி. கிழவியின் தாயின் வழிதான் இவனின் தாயும். எக்காரணம் கொண்டும் அந்த உறவை ஞாபகப் படுத்தவில்லை. படுத்தவும் மாட்டாள் என்று தெரியும் அவனுக்கு.

ஆனாலும் போனான்.

எலும்பின் பின்னால் நாய் போவது போலவா?

இளமையின் எரியும் நெருப்பென்ற உணர்ச்சிக்கு அவளின் சிரிப்பும், நெளிப்பும், எண்ணெய் வார்த்தன.

தனிமையில் தன் சுய உணர்வோடு நினைத்தபோது தன்னைத் தானே வெறுத்துக் கொண்டான்.

தன் ஏழ்மையின் போர்வையில் அவள் இவனுடன் பழகுவது தெரியும். அவள் பயப்படத் தேவையில்லை. "இவனிடம்", ஏழையின் உணர்ச்சியைத் தட்டி விட்டுத்தான் மகிழ்வது அவளுக்குப் பொழுது போக்காக இருக்குமா என்று நினைத்த போது பெண் வர்க்கத்தில் கோபம் வந்தது.

அவன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குப் போய்விட்டான். இளம்மலர்க் கொத்துக்கள் குலுங்குவது போல் சக மாணவிகள் சிரிக்கும்போது சுசீலாவின் ஞாபகம் அடிமனத்தின் இடைவெளியால் எட்டிப் பார்ப்பதுண்டு.

விடுமுறைகளில் சாட்டுக்கு ஒன்றிரண்டு தரம் எட்டிப் பார்த்தான். தன் பிரிவு அவள் மனதைப் பாதித்திருக்கிறதா என்று பார்க்கத் துடித்தான்.

அவள் காட்டிக் கொள்ளவேயில்லை.

ஒன்றிரண்டு கதைகள் பத்திரிகைகளில் வெளிவந்தபோது தான் படித்ததாகச் சொல்லுவாள்.

ஓசியில் பேப்பர் படிக்காமல் ஒரு காலத்தில் தான் நினைத்த புத்தகங்களைத் தானே வாங்கும் வசதி கிடைத்த போதும் அவன் ஏதோ சாட்டுக்கு அவள் வீட்டுக்குப் போவான். அவளுக்கு வேலைக்குப் போகும் அத்தியாவசியம் இல்லை. வீட்டிலிருப்பாள். சமயற்கலை, தையற்கலை பழகிக் கொண்டிருந்தாள்.

புருஷனை எதிர்பார்க்கும் மத்திய வர்க்கத்து எதிர்பார்ப்புக்கள். அவளுக்கு மாப்பிள்ளை பேசுவதாக வீட்டில் கதைத்துக் கொண்டார்கள்.

ஏதோ சுண்டியிழுத்தது போல் இருந்தது மனத்தை.

லண்டன் மாப்பிள்ளை என்று சொல்லிக் கொண்டார்கள். தன் கதைகள் வந்த பத்திரிகைகளை அனுப்பினால் படிப்பாளா லண்டனில் என்று யோசித்துப் பார்த்தான்.

கொட்டும் பனியையும் கொடிய குளிரையும் பற்றித் தனக்கு எழுதுவாளா என்று நினைத்துப் பார்த்தான்.

அந்த அளவுக்குத் தங்கள் உறவு நெருக்கமில்லை என்று மனம் சொல்லியது. அப்படி அவள் காட்டிக் கொண்டதாகவுமில்லை. நேரம் கிடைத்தபோது ஒரு நாள் போனான் அவளைப் பார்க்க.

ஆங்கிலம் படித்துக் கொண்டிருந்தாள். திருமணப் பதிவு நடந்து விட்டது. கெதியில் லண்டன் போகிறாளாம்.

வீட்டில் யாருமில்லை.

வெள்ளிக்கிழமை எல்லோரும் கோவிலுக்குப் போய் விட்டார்கள் போலும்.

கிழவி கூட இல்லை.

நாய்க்குக் கயிறு போட்டாற் போல் அவள் கையில் மோதிரம் ஏறிவிட்டபின் "காவல்" காக்கத் தேவையில்லை என்ற நினைப்போ அவர்களுக்கு. யாரும் இல்லை வீட்டில்.

அவள் ஸ்கேட்டும் பிளவுசும் போட்டிருந்தாள்.

லண்டன் உடுப்புகள்! இப்பொழுதே மாறத் தொடங்கிவிட்டாள். பெண் வேட்டையாட வந்த லண்டன் மாப்பிள்ளை வாங்கி வந்திருக்கலாம். என்ன விலை கொடுத்து வாங்கியிருப்பார்கள்? சட்டப்படி அவள் யாரோ ஒருவனின் மனைவி! அவனுக்குத் தர்ம சங்கடமாக இருந்தது அவனையறியாமல். திருமணத்திற்குத் தன் வாழ்த்துக்களை சொல்லிக்கொண்டான். எத்தனையோ "சாட்டுக்களை" வைத்துக் கொண்டு அவளைப் பார்க்க வந்ததும் பழக வந்ததும் குழந்தைத்தனமாகவும் அவலத்தனமாகவும் பட்டது. நிராசையான உணர்வுகளுக்கு நினைவுத்தீன் போட்ட மாதிரி இருந்தது.

"என்னை ஞாபகம் இருக்குமா உங்களுக்கு" அவள் கேட்டாள். அவனுக்கு அவளின் முகத்தை ஏறிட்டுப் பார்க்க விருப்பமில்லை.

ஏனென்று அவனுக்குத் தெரியவில்லை. அவளுடைய குரலும் பார்வையும் நடத்தையும் வித்தியாசமாக இருப்பதாகப்பட்டது.

அசட்டுத் தனமாகச் சிரித்தான் அவள் கேள்விக்கு. அப்படி நடக்க வேண்டிய சந்தர்ப்பத்துக்குத் தன்னை ஆளாக்கிய குற்றத்திற்காகத் தன்னையே கோபித்துக் கொண்டான் மனத்தில். "தமிழ்ப் பேப்பர்கள், புத்தகங்கள் கிடைக்குமோ தெரியாது லண்டனில்" அவள் பேச்சைத் தொடர்ந்து கொண்டிருந்தாள். தமிழ்ப் புத்தகம் தேடிப்பார்க்கும் அளவுக்கு இருப்பாளா?

ஒரு கொஞ்ச நாளில் கொண்டையையும் வெட்டி, குரலையும் மாற்றிக் கொள்வீர்கள் என்று சொல்ல நினைத்தான்.

அப்படிச் சொல்வதை அவள் வேடிக்கையாக நினைத்துச் சிரிப்பாள். வேறு என்னென்று எதிர் பார்ப்பது?

"தமிழ்ப் புத்தகங்கள் கிடைக்க வழி செய்துவிட்டால் கிடைக்கும்" அவன் சொன்னான்.

"நீங்கள் எழுத மாட்டீர்களா? அனுப்ப மாட்டீர்களா?"

அவள் குரல் கலங்கியதாக இருந்தது.

அவன் திடுக்கிட்டான்.

நிமிர்ந்து பார்த்தான். அவள் கண்கள் கலங்கியிருந்தன.

விருப்பமில்லாமல் கல்யாணம் செய்தார்களா? லண்டன் மாப்பிள்ளைக்கு தவம் கிடக்கிறார்கள் பெண்கள். இவள் என்னடா என்றால்?

"மாப்பிள்ளை எப்படி" என்றான் பேச்சை மாற்ற. அவள் நிமிர்ந்து பார்த்துச் சொன்னாள் "நீங்கள் ஏன் பணக்காரனாக இருக்கவில்லை. இருந்திருந்தால்...

அவள் கண்ணீர் வழிவதை அவன் பரிதாபத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

"அடிக்கடி எழுதுங்கள்" அவள் எதிர்பாராத விதத்தில் அவன் கைகளைப் பற்றிக்கொண்டாள். அவனுக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன.

"நீங்கள் வசதியான ஆளாய் இருந்தால்..." ஏன் இப்படிச் சொல்கிறாள்?

அவள் அழுகை அவனுக்கு ஏனோ பரிதாபமாக இருக்கவில்லை. அவள் விரும்பியிருந்தால்...? அவளுடைய அழுகை, துடிப்பு எல்லாம் ஏதோ நிறை கூடாத ஒன்றை நிலைப்படுத்த துடிக்கும் போது உண்டாகும் நடவடிக்கையின் அறிகுறிகளாக இருந்தன.

அவள் விரும்பியிருந்தால்...? அவன் திருப்பித் திருப்பி யோசித்தான்.

அவன் அவ்வளவு ஏழையில்லை! ஒரு மனைவியை சில குழந்தைகளை வைத்துக் காப்பாற்ற அவனின் ஆசிரியர் சம்பளம் போதாமல் இருக்கப்போவதில்லை. காரும் வீடும் வாங்க முடியாது தான். இலங்கையில் எத்தனையோ ஆயிரம் ஆசிரியர்கள் வாழவில்லையா? ஒரு சில நூறு ரூபாயில்? இவளுக்கு அதெல்லாம் வசதியற்ற தன்மையா? அவனுக்கு அவள் அவனின் "வசதியின்மை" பற்றிக் கதைத்தது கோபம் வந்தது.

ஏழ்மையைக் காட்டி என்னைத் தாழ்த்துகிறாள்.

ஏழ்மையாம் ஏழ்மை? இவளுக்கு சந்தோஷம் உண்டாக்கவா என் எழுத்து?

யாருக்கு ஏழ்மையும் இல்லாமையும்?

அவளுக்கா? எனக்கா? மன உணர்வுகளுக்குத் தீனி கேட்டுத் திரியும் அவள் போன்ற ஆட்களும் அவள் வர்க்கமும்... என்னையும் என் இல்லாமையையும் அவலமாகக் காட்டி... என் எழுத்தைச் சாட்டாக வைத்து...

அவனுக்கு கோபம் வந்தது.

அவனை, அவன் எழுத்தை, அவன் தொடர்பை அவள் இழந்து கொண்டிருக்கும் "சுகங்களுக்கு"ப் பாவிக்கப்படுவதை அவன் வெறுத்தான். ஏன் பழகினேன் என்று திட்டிக்கொண்டு வந்தான். அவளுக்காக கவிதை எழுதியது விசர்த்தனமாகவும் தெரிந்தது.

அவன் மனைவி கோயிலுக்கு வெளிக்கிட்டுக் கொண்டிருந்தாள். அவன் எழுதிக் கொண்டிருந்தான். "சுசீலா ஏதும் புத்தகம் தரலாமோ என்று கேட்டாள்". மனைவிக்கு என்ன விசரா இப்படி அவளுக்கு விழுந்தடித்து உபசாரம் செய்ய? அல்லது லண்டன்காரர் தன் கணவனை ஒரு எழுத்தாளன் என்று மதித்து அவன் எழுத்துக்களைக் கேட்கிறார்கள் என்ற கிளுகிளுப்பா!

அவனுக்குக் கோபம் வருகிறது அவளின் அறியாமையும் பரபரப்பையும் கண்டு. மறுமொழி சொல்லாமல் எழுதிக் கொண்டிருக்கிறான்.

மனைவிக்குத் தெரியும் அவனின் மௌனத்தின் காரணம் எழுத்தென்று. பேசாமல் நிற்கிறாள் கொஞ்ச நேரம்.

அவள் போய்விட்டாள் என்று தலை நிமிர அவள் நிற்பது தெரிகிறது. சரோஜாவின் பார்வை அப்பாவித்தனமாக இருக்கிறது.

"கேட்டுதா, போற வழியில் குடுத்திட்டுப் போறன் சுசீலாக்கு. உங்கட புத்தகம் ஒன்றிரண்டைத் தாங்கோ"

அவன் பேதமை தவழும் மனைவியின் முகத்தைப் பார்க்கின்றான். ஒன்றிரண்டு சொற்கள் அவன் வாயிலிருந்து வருகின்றன.

"அவர்கள் விரும்பத்தக்கதாக நான் ஒன்றும் எழுதவில்லை".

-1980

## பத்மநாபா..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குற்றம்சாட்டப்பட்டுள்ளவர்கள் குற்றப்பத்திரிகை பெற்றுக் கொள்வதற்காக வியாழன்று சிறப்புநீதிமன்ற நீதிபதி சௌந்திரபாண்டியன் முன் ஆஜர் படுத்தப்பட்டனர்.

செங்கல்பட்டுச் சிறையில் இருக்கும் சாந்தன், இரும்பொறை, விக்கி (இவர்கள் ராஜீவ் கொலை வழக்கிலும் எதிரிகளாக உள்ளவர்கள்) சென்னை மத்தியச் சிறையில் உள்ள மற்றும் 9 பேர் போலீஸ் வேன் மூலம் சிறப்பு நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டனர். ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டுள்ள 6 பேரும் குற்றப் பத்திரிகை நகலை பெற்றுக்கொள்ள வந்திருந்தனர். அனைவருக்கும் குற்றப்பத்திரிகை நகல் தரப்பட்டது.

சிறப்பு நீதிமன்ற கூடுதல் நீதிபதி அனைவரையும் செப்டம்பர் 9-ம் தேதி மீண்டும் ஆஜாராகுமாறு உத்தரவிட்டுள்ளார். சிறையில் உள்ளவர்களின் காவல் அது வரை நீடிக்கப்பட்டுள்ளது. குற்றப் பத்திரிகை தாக்கலுக்கு பின் சிறையில் உள்ள எதிரிகளின் காவல் 15 நாள்களுக்கு ஒரு முறை நீடிக்கப்படும்.

சிறப்பு நீதிமன்றத்தில் பத்மநாபா கொலை வழக்கில் கடந்த 17-ம் தேதி குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் பகிரங்க விசாரணை நடைபெற்றது. ஆனால் இந்த முறை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தைச் சுற்றி கையில் துப்பாக்கியுடன் கூடிய போலீசார் பெருமளவில் நிறுத்தப்பட்டிருந்தனர். சிறப்பு நீதிமன்ற கூடுதல் நீதிபதி முன்குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஆஜர் படுத்தப்பட்டபோது அவர்களது வழக்கறிஞர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். நிருபர்களும் உள்ளே அனுமதிக்கப்படவில்லை.

### வெடிமருந்துகள் விற்றதாக மூவர் கைது

ஈழப் போராளிகளுக்கு வெடிமருந்துகள் விற்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ராமேஸ்வரத்தைச் சேர்ந்த மூவரை சிறப்புப் புலனாய்வுப் போலீசார் புதனன்று கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து 135 ஜெலட்டின் குச்சிகள், 135 வெடிகுண்டுகள், 60 மீட்டர் வெடிகுண்டுத் திரி என்பன கைப்பற்றப்பட்டன.

Lowest Ever Prices! Best Ever!!

... FOR INDIAN MUSICAL INSTRUMENTS AT THE BHAVAN BOOK SHOP

BHAVANS BOOKSHOP

TEL : 071-610 1575
071-381 3086

OPEN 7 DAYS A WEEK!

VEENA / SITAR - BEST QUALITY FROM £ 180.00 (GURANTEE AVAILABLE)

MRIDANGAM / TABLA - BEST QUALITY FROM £ 95.00 (GURANTEE AVAILABLE)

Also learn Dance / Music / Languages at the

BHARATIYA VIDYA BHAVAN

* வயலின் மிருதங்க வகுப்புக்கள் அநுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் நடாத்தப்படுகின்றன.

4a Castletown Road, London W14 9HQ U.K.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சொற்சதுரங்கம் 3

செப்டம்பர் 8ந் திகதிக்கு முன் கிடைக்கும் விடைகளில் முதலாவதாக எடுக்கப்படும் சரியான விடைக்கு பரிசு 60 பவுண்கள்.

**(சொற்சதுரங்கம்–2 க்கும் எந்த ஒரு வாசகரும் சரியான விடை அளிக்காததால் சொற்சதுரங்கம்–3 க்கான பரிசு அதிகரிக்கப் பட்டுள்ளது.)**




| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | | 3 | | | 4 | | |
| | | | | | | | | | | | |
| 5 | | | | | | 6 | | | | | |
| | | | | 7 | | | | | | | |
| | 8 | | | | 9 | | | | | | 10 |
| 11 | | | | 12 | | | 13 | | | | |
| | | | 14 | | | | | 15 | | 16 | |
| 17 | | 18 | | | | 19 | | | 20 | | |
| | | 21 | | | | | | | | | |
| | 22 | | | | 23 | 24 | 25 | | 26 | | |
| 27 | | | | | | | | | | | 28 |
| | | 29 | | 30 | | | | 31 | | | |

**உங்கள் முகவரி**

பெயர் :..........................................................

முகவரி :..........................................................

..........................................................

..........................................................

..........................................................

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி

சொற்சதுரங்கம்–3
THAMIZHOSAI
253 WESTERN AVENUE
LONDON W3 0PP

**இடமிருந்து வலம்**

1. சங்கத் தமிழ் மூன்றும் ஈந்த பிரணவப் பொருளாம் பெருந்தகை.
3. அலைகடல் அங்கையில் அடக்கம் செய்த குறுமுனி.
5. பெண்ணுக்கும் கைவேலைக்கும் சம்பந்தம் உண்டு.
6. இது கைம் மண்ணளவு- கல்லாதது உலகளவு என்றாள் தமிழ் மூதாட்டி.
7. தாயிடமிருந்து பிரிந்தால் உயிர் வாழுமோ?(தலைகீழ்).
9. உடையவர் என்பும் உரியர் பிறர்க்கு.
10. ரதம் வருவது வீதியிலே இதன் உதவியால் (தலைகீழ்).
11. இதன் கூடும் வல்லரக்கு தொல்கரையான் தேன்சிலம்பி யாவர்க்கு செய்ய அரிது என்பது ஔவை வாக்கு.
13. தாயும் ஆவும் தொன்று தொட்டு அருளுவது.
14. தென்மதுரை நாயகியை சொக்கனுக்கு தாரை வார்த்தவன்.
15. இதுபட உழைத்தால் கிடைக்காதது கிடைக்குமோ?
17. பெண்களின் விழிக்கு ஒப்பிடுவர்.
19. வண்டி உருண்டோட அச்சாணியும் தேவை- இதுவும் தேவை.
20. கிடைத்தற்கு அரிது.
21. நன்றிக்கு மூலம் நல்லொழுக்கம்- அதாவது இது.
23. கம்பனை எட்டே கால் அழகே என்று சாடினார் ஔவையார்.
27. கூற்றத்தின் பரி.
28. இவருக்கும் நங்கைக்கும் திருநாளாம் என்றார் கவிஞர் கண்ணதாசன் நேரமின்மையால் (தலைகீழ்).
29. ஐராவதத்தை பெற்ற தேவலோகத் தலைவன்.
31. திட்டாவிட்டால்- கையோடு ஒரு நதியாகும்.

**மேலிருந்து கீழ்**

1. கம்பன் வீட்டுக்கட்டுத்தறி பேர் போனது.
2. சந்திரனுக்கும் வராகத்துக்கும் பெயர்பெற்ற விலங்கு.
3. ஔவையின் ஆறு சகோதரங்களில் ஒருவர்.
4. திரைகடல் தாண்டியவர்க்கு தேடினால் கிடைக்கும்.
7. பொன்வண்ணத்தந்தாதியும் ஆதியுலாவையும் பாடியவர் (தலைகீழ்).
8. பாலையும் நீரையும் பிரிக்கும் இந்த இதிகாசப்பறவை.
10. பெண்களை இப்படியும் அழகாக அழைப்பர்.
12. மருந்தும் இதுவும் இவளின் கண்ணில் உண்டு என்றார் வள்ளுவர்.
13. ஆணின் பெயர் (தலைகீழ்).
14. பேசினால் மலர்ந்து அருளுவது (தலைகீழ்).
15. நெல்லுக்கிறைத்த நீர் பொசிவது (தலைகீழ்).
16. அவிட்டத்துக்கு முதல்.
18. இதை ஆளும் ஸ்ரீராமன் பாதங்கள் கழுவி என்றார் புலவர் பஞ்சு அருணாசலம்.
19. மருகோனின் மாமன் திருவுக்கும் சொந்தம் (தலைகீழ்).
20. புலம்பு (தலைகீழ்).
22. முத்தெய்வங்களில் ஒன்று ஒன்பதிலும் ஒன்று.
24. பெண்களுக்கு கிடைக்காவிட்டால் காலமெல்லாம் கன்னியாக வேண்டும்.
25. திருப்பதிப் பட்சணம் இனிப்பானது (தலைகீழ்).
26. பிடி சாபம் என்பார்கள் முனிவர்.
27. கண்ணுக்கு ஒப்பிடுவர் எழுத்தும்.
28. எமக்கு எம்முடைய என்ற வார்த்தைகள் எதற்கு? (தலைகீழ்).
29. இவை மூடாதர் தேவர்கள் (தலைகீழ்).
30. இலக்குமிக்கும் ஆண்களுக்கும் இதுபொது (தலைகீழ்).

## சொற்சதுரங்கம்–2 விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நா | ரா | ய | ண | ன் | | | க | ண் | ணி | | ந |
| ய | | ம | | ட | | அ | ணை | | ப | ள் | ளி |
| க | ட | ன் | | னி | | | யா | னை | | | ன |
| ன் | | | | மா | ர் | க | ழி | | மை | ய | ம் |
| | வி | ழி | | | கா | லை | | | ண் | | |
| | ர | | டி | ம | | ம | ன் | ம | த | ன் | |
| க | ல் | வி | | ஞ் | | க | | யி | | | |
| ரு | | | | ச | | ள் | க | ல் | ய | ளை | வ |
| ம் | | தா | க | ம் | | | ற் | | மு | | ஞ் |
| பு | க | ழ் | | | னி | ன் | க | | னை | | ச |
| வி | | | லை | க | மே | | ண் | | | க | னை |
| ல் | டி | ட் | க | | | க | டு | கு | | ண் | |

# திருகோணமலைக் கவிராயர் தா. சீ வில்வராசா

## என்ன கவிதை வேண்டும்?

திருக்கோணமலைக் கவிராயரைத் தெரியாதார் யாருமே இல்லை. என்ன கவிதை வேண்டும். இசை பாட வேண்டுமா? வசை பாட வேண்டுமா? நையாண்டி வேண்டுமா? மெய்யாண்டியைப் பாட வேண்டுமா? நாலடியா? அறுசீரா? எண்சீரா? இல்லைப் பெண்சீரா? சிலேடையா? திருக்கோணமலைக் கவிராசன் பாடல்கள் ஒவ்வொன்றும் தனித்தனித் தனித்துவம் வாய்ந்தவை.

அவர் கவிதையால் புத்துணர்ச்சி பெற்றோர் எத்தனை? ஏற்றம் கொண்டோர் எத்தனை? போற்றப்பட்டோர் எத்தனை? ஆனால் இன்று:

தன் கவியால், கருத்தாழ உரையால், சிரிப்பூட்டும் நாடகத்தால், சிந்தனையைத் தூண்டும் விமர்சனத்தால் ஆயிரம் ஆயிரம் உள்ளங்களை சிரிக்க சிந்திக்க வைத்துக் கொள்ளை கொண்டே திருக்கோணமலைக் கவிராயர் சொந்த மண்ணைவிட்டு, சுற்றம் சூழல் அற்று எங்கோ யாரும் அறியாவண்ணம் காலன் கையில் போனது காலத்தின் கொடுமை தானன்றோ!

## மண்வாசனை

வேறுபட்ட மண்வாசனை வீசும் வகையில் கவிபுனையும் ஆற்றல் படைத்த திருக்கோணமலைக் கவிராயர் 1936ம் ஆண்டு பங்குனித் திங்கள் 10ம் நாள் பிறந்தார்.

இவரது பெற்றோர் சீனித்தம்பி, மாரிமுத்து இருவரும் வேறுபட்ட சாதியாக இருந்த போதும், மனிதனுடைய வறட்டுக் கௌரவம் சாதிசமயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தாலும், 'காதல்' என்ற உணர்வு அர்த்தமற்ற உணர்வுகளைத் தாண்டி ஆத்மார்த்தமான பிணைப்பை உண்டாக்கி இவர்களைத் தம்பதிகளாக்கி மனிதவாழ்வின் மேம்பாட்டை உலகறியவைத்தது.

புதிய சிந்தனையும் புரட்சிகர நோக்கமும் சீர்திருத்த எண்ணமும் கொண்ட வில்வராசா தன்னை எப்போதுமே அடிமட்ட மக்களின் மேம்பாட்டின் வளர்ச்சிக்காகவே அர்ப்பணித்தார்.


சீதனக் கொடுமை கண்டு சீற்றங் கொண்டார். கவிதையில் சினத்தைக் கக்கினார். இவரை ஒரு நாஸ்திகன் என்பார்கள். "திருக்கோணமலைத் தலைவர்" என்ற பாடல்மூலம் தன்னை இனம் காட்டினார்.

"துணிவாய் வளர்க" என்ற அமரன் ஸ்கிறீன் குத்துவிளக்கு நாடக மலரில் நாடகத்தைப்பற்றி கிண்டலாக அவர் எழுதிய கவிதையின் கருத்தின் ஆழத்தை இங்கு குறிப்பிடுவது அவசியம்.

கூத்துக் கலையின் மதிப்புக் குறைந்து
'குஸ்தி' கள் நிறைந்த சினிமா மலிந்து
நேத்துப் பொறந்த பொடியர்கள் கூட
நெத்தலிப் பயில்வான் ஆவது பாராய்

நாட்டின் அகத்தை நாடகமாக்கி
நல்லதோர் கலையில் வல்லமை ஏற்றி
ஏட்டிலும் இனிய சரித்திரம் சாற்றி
கேட்டினை ஓட்டும் பாட்டாய் வளர்க
சிவனும் கூத்தன் இவனும் கூத்தன்
சிரிப்பவன் சிரிப்பான் யாவரும் கூத்தன்
அவனும் கூத்தன் அகிலமும் கூத்தடா
தானமும் தர்மமும் சகலதும் கூத்தே
புனிதக் கலையை புவனம் வளர்க்கின்
மனிதரும் புனிதர் ஆவது திண்ணம்
மனிதா! நாடகம் மக்களைத் திருத்தும்
பணிதான் மேடையில் காண்பது பொருத்தம்

நையாண்டிக் கவிதைக்கு திருக்கோணமலைக் கவிராசர் என்றால்



மிகையாகாது. வீரகேசரி, தினகரன், சுதந்திரன், உமா, குங்குமம், தினபதி, சிந்தாமணி போன்ற சகல பத்திரிகைகளிலும், கவிதைமட்டுமன்றி விமர்சனங்களும் எழுதியுள்ளார். செங்குட்டுவன் என்ற புனைப்பெயரிலும் இந்தியப்பத்திரிகைகளுக்கு கவிதைகள் நிறைய எழுதியுள்ளார். தான்தோன்றிக் கவிராயர் என்ற பெயரை ஆரம்பத்தில் வைத்துக்கொண்டபோதும், பிறிதொறிவரும் இப்பெயரைப் பயன்படுத்தவே காலப்போக்கில் அதைக் கைவிட்டார்.

திருக்கோணமலைக் கவிராயரின் கவிதைகள் பாமரமக்களை மட்டுமன்றி அவர்போன்ற பல கவிஞர்களையும் பெரிதும் கவர்ந்தது. திருக்கோணமலைக் கவிராயர் மதிக்கும் கவிஞர்களுள் கழகப் புலவர் பெ.பொ.சிவசேகரனார் முதன்மையானவர்.

## வாராத வெண்பா

தான் என்ன எழுதினாலும் வெண்பா எழுதவராது, அதை விளக்கி, அதற்கு இலக்கணம் கூறி எழுதவைத்தவர் கழகப்புலவர்தான் என்று என்னிடம் பலமுறை கூறியுள்ளார்.

நகைச்சுவை-நையாண்டிக் கவிதைகள் போன்றே நகைச்சுவையாகவும்-நையாண்டித்தனமாகவும் நாடகங்கள்

## கலாவிநோதன் த. அமரசிங்கம்

எழுதுவதில் கைதேர்ந்தவர்மட்டுமல்ல தான் எழுதிய பாத்திரத்திற்கு தன் நடிப்பால் உயிர் ஊட்டி மக்களை மகிழ்வித்து அவர்கள் மனம் குளிரச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்து அவர்களது உள்ளங்களைக் கொள்ளைகொண்ட ஓர் உயர்ந்த நடிகனும்

(18ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சரிவுப்பாதையில் ஜெயலலிதா

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் அவமானப்படுத்தி பதவியிலிருந்து நீக்கினார்.

மூன்றாவதாக ஒருவர்- எஸ்.மாதவன். முன்னாள் திமுக அமைச்சர்; இப்போது ராஜ்யசபை எம்பி. அந்தப்பதவியைப் பிடுங்கும் அதிகாரம் ஜெ.யிடம் இல்லாததனால் தப்பிப் பிழைத்திருக்கிறார். பிறகு திருநாவுக்கரசு, பண்ருட்டி ராமச்சந்திரன், சாத்தூர் ராமச்சந்திரன், தாமரைக்கனி போன்றவர்கள். குமுறிக்கொண்டே காலம் கழிக்கும் முன்னாள் ஜானகி அணியைச் சேர்ந்தவர்கள். அஇஅதிமுக ஒரு அழுகிய ஆப்பிள்; ஆனால் தோல் பளப்பாக இருக்கிறது, காரணம் ஜெ. ஆட்சிப்பொறுப்பில் இருப்பதனால்.

தன் கட்சிக்காரர்களை அடிமைகளாக நடத்தும் ஜே. பிறகட்சித் தலைவர்களையும் அப்படியே நடத்த விரும்புகிறார். அதிகார போதை தலையில் அதிகமாக ஏறிவிட்டதனால் பிரதமர் நரசிம்மராவையும், ஜனாதிபதி சர்மாவையும் எப்படிப் பதவிநீக்கம் செய்வது என்று யோசித்து வருகிறார். தன் கட்சியிலும் தோழமைக்கட்சிகளிலும் ஆத்மார்த்த ஆதரவு அவருக்கு இல்லை. ஆயினும் அவர் கருணாநிதியைச் சீண்டுகிறார். அரசு நிலத்தைத் தனக்காக வாங்கிக்கொண்ட இந்த அதி உத்தம முதல்வர் முன்னாள் முதல்வர் கருணாநிதி மீது ஊழல் விசாரணைக்கமிஷன் நியமித்திருக்கிறார். காரணம் அரசு முன்பு எடுத்துக்கொண்ட தனியார் மருத்துவக் கல்லூரியை ஜெ. மீண்டும் தனியாருக்கே கொடுத்து விட்டதை எதிர்த்து, தனியாருக்கே கருணாநிதி போராட்டம் நடத்தி வருகிறார். ராஜீவ்காந்தி கொலையில் திமுகவுக்குப் பங்கு இல்லை என்ற காரணத்தினால் கருணாநிதி தைரியமாக வெளியே வருகிறார். கமிஷன் மூலம் அவரைக்கட்டிப்போட்டு விடலாம் என்று நினைக்கிறார்; பாவம், திமுகவுக்கும் அஇஅதிமுக வுக்கும் அமைப்பு ரீதியில் பெரிய வித்தியாசம் இருக்கிறது என்பதை அவர் உணர்ந்து கொள்ளவில்லை. ஜெ. கட்சியில் அவர்மட்டுமே பேசுவார். அமைச்சர்கள் அவரைக் கேட்டுக் கொண்டுதான் ஏதாவது பேசமுடியும். திமுகவில் அப்படியல்ல. கருணாநிதியைச் சிறையில் அடைத்தாலும் இரண்டாம் நிலை, மூன்றாம் நிலைத் தலைவர்கள் துடிப்புடன் செயல்பட்டு, பேசியும் எழுதியும் போராட்டத்தைத் தொடர்வார்கள். ஏதோ பூனை கண்ணை மூடிக்கொண்டால் உலகமே அஸ்தமித்து விட்டமாதிரி.

இந்திரா காங்கிரஸ் தலைவர் கருப்பையா மூப்பனாரும் களத்தில் இறங்கி இருக்கிறார். காங்கிரஸ் கட்சி மானம் மரியாதையுடன் வாழ வேண்டாமா என்று பொது மேடைகளில் பேசி வருகிறார். அவரது கோபம் சாது மிரண்டால் என்ற கதைதான். கட்சி மேலிட ஆதரவு தனக்கு இருக்கிறது என்று சொல்கிறார். உட்கட்சி விவகாரங்களில் அவரது எதிரியாகிய வாழப்பாடி ராமமூர்த்தி தீவிர அஇஅதிமுக ஆதரவாளர். ஜெ.பக்தர் என்று கூட அவரை சிலர் கிண்டல் செய்கிறார்கள். அவரும் ஒரு கட்டத்தில் ஜெ.க்கு எதிராகத் திரும்பாவிட்டாலும் ஆதரவின் தீவிர வாதத்தைக் குறைத்துக் கொள்ளலாம். எல்லாவற்றிற்கும் மேலாக ஜெ.க்கு பத்திரிகை உலக ஆதரவும் இல்லை.



அண்மையில் முரசொலி பொன்விழாவில் பேசிய இந்து ஆசிரியர் என்.ராம் ஜே.அரசு சகிப்புத்தன்மை இல்லாத அரசு னைடெலிரினடஎன்றார். முன்னாள் ஐ.ஏ.எஸ் அதிகாரி எஸ் குகன் அது சகித்துக்கொள்ளப்பட முடியாத அரசு என்றார். அதுதான் உண்மை. ஜேக்கு ஒரு காலத்தில் நெருக்கமானவர்கள், அவரை உருவாக்கியவர்களே ஜெ யை சகித்துக் கொள்ள முடியாத பொழுது, மக்கள், அதிகாரிகள், கட்சிக்காரர்கள் எத்தனை நாளைக்கு சகித்துக்கொள்ள முடியும்? எனவே ஜெயின் நாட்கள் எண்ணப்படுகின்றன என்பதே உண்மை.

---

# தமிழோசை விளையாட்டுப் போட்டி
## விண்ணப்பப் படிவம்

முழுப்பெயர் ......................................................................

முகவரி ......................................................................
......................................................................
......................................................................

பாடசாலை / கழகம் / தனிப்பட்டோர் ......................................................

பிறந்த திகதி .............................................. வயது ..............................
(01-09-1991 ல் உள்ளபடி)

பங்கு பற்றும் போட்டிகள்

தனி
1. ......................................................................
2. ......................................................................
3. ......................................................................

குழு
1. ......................................................................
2. ......................................................................
3. ......................................................................

எனது அறிவுக்கெட்டிய வரையில் மேலே குறிப்பிட்டவையெல்லாம் உண்மையென உறுதிப்படுத்துகிறேன்.

கையொப்பம்

குறிப்பு:-

1. பாதுகாப்புக்காகவும் நிகழ்ச்சிகளை சுமுகமாக நடத்துவதற்காகவும் நிகழ்ச்சிகளை மாற்றுவதற்கோ ரத்துச் செய்வதற்கோ நிர்வாகிகளுக்கு தனி உரிமை உண்டு.

2. வயதை உறுதிப்படுத்த தேவைப்படும் பட்சத்தில் அதனை நிரூபிக்க அத்தாட்சிப் பத்திரம் கொண்டு வரல் வேண்டும்.

3. கட்டணம்:
தனி விண்ணப்பம்: £ 5.00 (ஒருவர் மூன்று தனி நிகழ்ச்சிகளில் மட்டுமே பங்கு பறறலாம்.)
குழு விண்ணப்பம்: £ 10.00 ( கயிறிழுத்தல், அஞ்சல் ஓட்டம்)

4. ஒவ்வொரு வயதுக் குழுக்களிலும் கூடிய புள்ளிகள் பெறும் வீரர்/வீராங்கனை களுக்கு வெற்றிக் கிண்ணம் வழங்கப்படும்.

5. அதிக புள்ளிகள் பெறும் பாடசாலை/கழகத்திற்கு வெற்றிக்கேடயம் வழங்கப்படும்.

6. எல்லா நிகழ்ச்சிகளுக்கும் மத்தியஸ்தர்களின் தீர்ப்பே முடிவானது.

7. புள்ளிகள்:-
முதலாம் இடம் - 10 புள்ளிகள்
இரண்டாம் இடம் - 7 புள்ளிகள்
மூன்றாம் இடம் - 4 புள்ளிகள்

8. விண்ணப்ப முடிவுத் திகதி : 25-09-1992

### போட்டி வயதெல்லைகளும், நிகழ்ச்சிகளும்:

**8 வயதிற்கு உட்பட்டோர்:**
*50 மீற்றர்,* நீளம் பாய்தல், கயிறடித்தல் (50 மீற்றர்)

**8 முதல் 11 வயதிற்குட்பட்டோர்:**
**ஆண்கள்/பெண்கள்**
100மீற்றர், 200மீற்றர், நீளம் பாய்தல், கயிறடித்தல் (50மீற்றர்), தடை ஓட்டம், அஞ்சலோட்டம் 4*100 மீற்றர் (பாடசாலை/கழகம்)

**11 முதல் 14 வயதிற்குட்பட்டோர்:**
**ஆண்கள்/பெண்கள்**
100மீற்றர், 200மீற்றர், நீளம் பாய்தல், கயிறடித்தல், தடை ஓட்டம், பந்தெறிதல் (CRICKET), அஞ்சலோட்டம் 4*100மீற்றர் (பாடசாலை/கழகம்)

**14 முதல் 17 வயதிற்குட்பட்டோர்:**
**ஆண்கள்/பெண்கள்**
100மீற்றர், 200மீற்றர், 400மீற்றர், நீளம் பாய்தல், தடை ஓட்டம்,
அஞ்சலோட்டம் 4*100மீற்றர்,
4*400மீற்றர் (பாடசாலை/கழகம்)

**17 முதல் 20 வயதிற்குட்பட்டோர்:**
**ஆண்கள்/பெண்கள்**
100மீற்றர், 200மீற்றர், 400மீற்றர், நீளம் பாய்தல்
அஞ்சலோட்டம் 4*100மீற்றர்
4*400மீற்றர் (பாடசாலை/கழகம்)

**20 வயதிற்கு மேற்பட்டோர்:**
**ஆண்கள்/பெண்கள்**
100மீற்றர், 200மீற்றர், 400மீற்றர்,நீளம் பாய்தல்
அஞ்சலோட்டம் 4*100மீற்றர்
4*400மீற்றர் (பாடசாலை/கழகம்)

**20 முதல் 35 வயதிற்குட்பட்டோர்:**
குண்டெறிதல்

**35 வயதிற்று மேற்பட்டோர்:**
குண்டெறிதல்

**17 வயதும் - அதற்கு மேற்பட்டோரும்:**
800மீற்றர், 1500மீற்றர்

**கராட்டி**

**KUMITE**
11-14 YEARS
14-16 YEARS
OVER 16 YEARS

**KATA**

CHILDREN (7th to 4th KYU)
CHILDREN UNDER 16 (3rd KYU & Above)
MEN OVER 16 (7th to 4th KYU)
MEN OVER 16 (3rd KYU & Above)
MIXED WHITE BELT

**கயிறு இழுத்தல் போட்டி**
விண்ணப்பக் கட்டணம் £10.00

**பொது நிகழ்ச்சிகள்:**
(போட்டியிலன்று மைதானத்தில் விண்ணப்பங்களை கையளிக்கலாம்.)
தலையணைச் சண்டை, மிதிவண்டி மெதுவாக செலுத்தும் போட்டி. (மிதிவண்டிகள் கொண்டு வரல் வேண்டும்), விநோதஉடைப்போட்டி,மூன்று கால் ஓட்டப்போட்டி (தம்பதிகளுக்கு மட்டும்), சமனிலை ஓட்டம் (பெண்கள்) ,சங்கீதக் கதிரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்தியா ஓரிடத்திலிருந்து

(11ம் பக்கத் தொடர்ச்சி)

ஆவணங் களை எல்லாம் கொடுத்து விடும்படி சி.பி.ஐ.என் வீட்டுக் கதவைத் தட்டின. கோர்ட்டில் வழக்கு பதிவு செய்தேன். அதன் பின்னர் சில பகுதிகளை இந்து பிரசுரிக்க மறுத்ததும் ஆசிரியருக்கும் எனக்கும் ஏற்பட்ட மோதல்களும் எல்லாரும் அறிந்ததே.இத்தனை முயற்சி செய்து நீங்கள் இந்த பீரங்கி ஊழலை வெளிக்கொணர்ந்தாலும் இது எந்த அளவுக்கு பாமர மக்களால் உணரப்பட்டிருக்கிறது என்ற ஒரு கணிப்பு உங்களுக்கு இருக்கிறதா? மக்கள் பலர் விரைவில் இதை மறந்து விட்டவர்களாக இருக்கிறார்களே?

மக்கள் உணர்வில் ஒரு பாதிப்பு ஏற்படுத்துவது என்பது எளிமையான காரியம் இல்லை. ஒரு பத்திரிகை மக்களிடம் எந்த அளவுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பது பற்றி அதீதமாகவோ, குறைவாகவோ மதிப்பிடக்கூடாது. நாம் எழுதுவதை வைத்துக்கொண்டு 'அது மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருக்கிறது' என நாம் உரிமை கொண்டாட முடியாது. ஆனால் இந்த பத்திரிகை விஷயங்களிலிருந்து வேறு பல அமைப்புகள் இந்த விஷயங்களை எடுத்துக் கொண்டு மக்களிடம் செல்கின்றன. அது உடனடியாக இல்லாவிட்டாலும் நாள் சென்று பலனைக் கொடுக்கும். ஆனால், எழுதும் விஷயத்தில் நம்பகத்தன்மை என்பது நிச்சயம் இருக்க வேண்டும்.

**பத்திரிகைகள் சில சமயம் உண்மைகளை எழுதுகின்றன. பல சமயங்களில் பரபரப்புத் தன்மையை (Sensationalism) ஏற்படுத்தி விடுகிறார்கள். உண்மையாக இருந்தாலும் இந்த பரபரப்புத்தன் மை தேவையா?**

மக்களிடம் சென்று அடைய வேண்டும் என்பதற்காகவும், வியாபாரத்தை முன்னிட்டும் சில பத்திரிகைகள் பரபரப்புடன் விஷயத்தைக் கொடுக்கலாம். ஆனால் உண்மையாக இல்லாமல் வெறும் பரபரப்பு மட்டும் இருந்தால் அந்தப் பத்திரிகை விரைவில் மக்களால் நிராகரிக்கப் பட்டு விடும்.

நக்கீரன், தராசு போன்ற பத்திரிகைகள் சில விஷயங்களை சில சமயம் பரபரப்புடன் எழுதியிருக்கலாம். ஆனால் அதில் உண்மை யில்லை என்றால் கோர்ட்டை நாடுவதுதான் முறை. அதை விட்டு விட்டு அந்த பத்திரிகைகளை பயமுறுத்தி நசுக்க முற்படுவதெல்லாம் நியாயமற்ற செயலாகும்.

**தமிழ் தினசரிப் பத்திரிகைகள் பற்றி உங்கள் கணிப்பு என்ன?**

எனக்கு ஏமாற்றமே மிஞ்சுகிறது! அவை விரிவாக இன்னும் பல தளங்களில் தனது பங்கினை செலுத்தவில்லை என்று அறிகிறேன். ஆந்திரப் பிரதேசத்திலிருந்து வெளிவரும் ஈநாடு போன்றோ, கன்னடத்திலிருந்து வரும் தினப்பத்திரிகைள் போன்றோ கூட நம் தமிழ் பத்திரிகைகள் இல்லை. தினமணி ரொம்பவும் கன்சர்வேடிவ் வாகப் போய்விட்டது. மற்ற பத்திரிகைகளை அவ்வப்போது படிக்கிறேன். எதுவும் எனக்கு திருப்தி அளிக்கவில்லை.

**பத்திரிகைகள் எப்படி இருக்க வேண்டும்?**

மூன்று விஷயங்கள் ஒரு பத்திரிகைக்குத் தேவை என நினைக்கிறேன்.
1. நம்பகத் தன்மை.
2. செய்திகளின் பின்புலத்தில் உள்ள விஷயங்களை அலசுவதும் அந்த செய்தி பற்றி அந்த பத்திரிகையின் கணிப்பும்.
3.அதை அமைப்பதில் (Lay-out) உள்ள அழகுத்தன்மை.

**இந்துப் பத்திரிகையிடம் எங்களைப் போன்றவர்களுக்கு ஒரு குறை உண்டு. தமிழ் கலை கலாச்சாரம் பற்றியோ தமிழ் எழுத்தாளர்களைப் பற்றியோ தாங்கள்முக்கியத்துவம் கொடுப்பதில்லை. மாறாக மராட்டியத்திலோ பிற மாநிலங்களிலோ ஒரு கலை செயற்பாடு நடந்தால் முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள். தமிழர்களைப் பற்றி எழுதுவதால் பத்திரிகைகள் தரம் இறங்கிவிடும் என்று நினைக்கிறீர்களா?**

இந்தக் குற்றச்சாட்டில் உண்மை இருக்கலாம். தமிழைப் பற்றி எழுதினால் தரக்குறைவு என்ற எண்ணம் எல்லாம் இல்லை. இது ஏதேச்சையாக நிகழ்ந்து விட்ட ஒன்று என்றுதான் நினைக்கிறேன். தேசியப்பத்திரிகை என்பதால் பிராந்திய மொழியை ஒதுக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை. இந்தக் குறைகளை கூடிய விரைவில் நீக்க முயற்சிக்கிறோம். இன்னொன்று தமிழில் நடைபெறும் கலை இலக்கிய விஷயங்களை ஆங்கிலத்தில் எழுதிக் கொடுக்க சரியான நபர் எங்களுக்குக் கிடைப்பதில்லை.

**சரியான நபர்கள் கிடைக்கவில்லை என்று எப்படிச் சொல்கிறீர்கள்? சரியான நபர்களைத் தேடிக் கண்டு பிடிக்கக் கஷ்டப்பட் டீர்களா?**

அந்த சிரமத்தை நாங்கள் எடுத்துக்கொள்ளவில்லை. வங்காளத்திலிருந்தும் மராத்தியிலிருந்தும் தானாக வருவதுபோல இங்கு விஷயங்கள் வருவதில்லை. சில எழுத்தாளர்கள் இவைகளைப் பற்றி எல்லாம் எழுதினால் அந்த முயற்சியைத் தொடருவோம்.

**மற்ற மாநில தினசரிப் பத்திரிகைகள் கடுமையாக ஜெயலலிதா ஆட்சியை விமரிசிக்கும் போது அந்த அளவுக்குத் தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் (இந்து உட்பட) விமரிசிக்காததற்குக் காரணம் என்ன?**

ஒரிசாவில் பிஜு பட்நாயக் ஆட்சியை விமரிசிப்போம். பீகாரில் லாலு ஆட்சியை விமரிசிப்போம். இங்கே கண்டுகொள்ள மாட்டோம். இது ரொம்ப நாட்களாக நடந்து வருகிறது. ஆனால் இப்போது பத்திரிகைகளைக் கண்டு கொஞ்சம் கூட பொறுத்துக் கொள்ள முடியாத சகிப்புத் தன்மையில்லாத ஒரு முதல் மந்திரியை ஒரு வருடமாகப் பார்த்து வருகிறோம். இதுபோல கெடுபிடியும் ஒடுக்குமுறையும் எந்தக் காலத்திலும் இல்லை. பத்திரிகைகளைக் கண்டு பேசவே முதல்வர் பயப்படுகிறார்.

**ஏராளமான மக்கள் பெருவாரியாக ஓட்டுப்போட்டு வெற்றி பெற்ற ஒரு முதல்வர் பத்திரிகைகளைக்கண்டு ஏன் பயப்பட வேண்டும்?**

ஜெயலலிதா தான் தனிக்கட்சியாக நின்று ஜெயிக்கவில்லை. கூட்டணிகளோடு ஜெயித்திருக்கிறார் என்பதை நாம் மறக்கக் கூடாது. வங்காளத்தின் காங்கிரஸ் கட்சியை விட தமிழகத்தின் அ.தி.மு.க. பலவீனமானது. வங்காளத்தில் தனியாக காங்கிரஸ் 46 சதவிகிதம் ஓட்டு வாங்க முடியும். அ.தி.மு.க. 28 சதம் தான் ஓட்டு வாங்க முடியும். இந்த நிலையில் பத்திரிகைகளைப் பகைத்துக் கொள்வது என்பது வீழ்ச்சிக்கு ஆரம்பமாகிவிடும்.

**ஜெயலலிதாவின் ஓராண்டு கால ஆட்சியின் சாதனை எதுவுமில்லை என்கிறீர்களா?**


எல்.டி.டி.யினரின் நடவடிக்கையை தமிழ்நாட்டில் ஒடுக்கியதில் அவர் சாதனை புரிந்திருக்கிறார் என்பதை ஒப்புக்கொள்கிறேன். மற்றபடி எதிலும் சாதனை இல்லை. ஊழலும் லஞ்சமும் முனனையை விடப் பெருகிவிட்டது என்பது உண்மை.

**சோவியத் ருஷ்யா சிதறுண்ட விட்ட பிறகு சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் எதிர்காலம் என்னவாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்.**

ஆரம்பத்தில், சோவியத் ரஷ்யா சிதறுண்டு போது கம்யூனிசத்திற்கு எதிர்காலமே இல்லை என்ற இருண்ட எண்ணமே இருந்தது. மனவேதனையும் இருந்தது. ஆனால் பின்னர் இந்தத் தோல்வி சோவியத்தின் தோல்வியே தவிர கம்யூனிசத்தின் தோல்வி இல்லை என்று முடிவுக்கு வர முடிந்தது. தோற்றது என்பது ஐரோப்பாவில் கையாளப்பட்ட கம்யூனிசமே. ஆனால் கியூபாவிலும் சீனாவிலும் இது மிக நம்பிக்கையூட்டும் வகையில் முன்னேறிக்கொண்டிருக்கிறது. சீனாவுக்கும் ஏராளமான பிரச்னை இருக்கிறது. அண்டை நாடுகளான தைவான், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் உள்ளதைப் போல வாழ்க்கைத்தரம் இல்லையே என்ற குறை சீன மக்களுக்கு இருக்கிறது. ஆனாலும் ஆண்டுக்கு பத்து சதவிகிதம் வளர்ச்சி விகிதத்தை அவர்களால் காட்ட முடிகிறது. உலக கம்யூனிச இயக்கத்தின் வளர்ச்சியில் நான் நம்பிக்கையும் உற்சாகமும் கொண்டு இருக்கிறேன்.

**உங்கள் ஓட்டை எந்த அரசியல் கட்சிக்கு அளிப்பீர்கள்?**

நிச்சயமாக C.P.I-க்கு அளிப்பேன்.



**இந்தியா ஒரு பல தேசிய இனங்களின் கூட்டமைப்பு என்ற கொள்கையில் உங்களுக்கு உடன்பாடு இல்லையா?**

இந்தியாவைப் பொறுத்தவரை அடிப்படையான சாத்தியக்கூறுகளை நோக்கி நாம் க்வனம் செலுத்த வேண்டும். இந்தியா என்பது என்ன என்பதில் தெளிவு ஏற்பட வேண்டும். இந்தியா ஒரே தேசியமா? இந்தியா நிச்சயமாக ஓர் இடத்திலிருந்து மட்டும் ஆளக்கூடிய தேசமல்ல. ஒற்றுமை என்பது வேறு, ஒரே விதமாக இருக்க வேண்டும் என்பது வேறு; இந்தியா முழுவதும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்று இரும்புக் கரங்கள் கொண்டு ஆட்சி செய்தால் இந்தியா சிதறுண்டுவிடும். இந்தியா பன்முகப்பட்ட, பலமொழி கொண்ட, பல கலாச்சாரம் கொண்ட, பல இனம் கொண்ட பல தேசியங்களின் அமைப்பு. பல தேசியங்கள் என்று கூறும்போது உடனடியாகத் தனியாக பிரிந்து போய் விடவேண்டும் என்ற பொருள் இல்லை. ஆனால் மாநிலங்களுக்கு சுதந்திரமாக ஆட்சி செய்ய அதிகாரங்கள் நிறைய வழங்கப் படவேண்டும்.

**இம்மாதிரி ஒரு Federal (தேசிய இனங்களின் கூட்டமைப்பு) அமைப்பில் இந்தியா சிதறிப் போக வாய்ப்பு இருக்கிறது அல்லவா?**

இல்லை. அமெரிக்காவிலும் கனடாவிலும் அப்படி ஏற்படவில்லை. இந்திக்கு நான் விரோதி இல்லை. ஆனால் இந்தி மொழியை நான் கற்றுக்கொள்ள வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் போது நான் வேறுவிதமாக யோசிக்கிறேன். நான் இந்துவாகத்தான் இருக்க வேண்டும் என்று கட்டாயப் படுத்தப்படும் போது நான் விரக்தியடைகிறேன். தேசம் சிதறிப் போக Federal அமைப்பு காரணமாகாது. வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், மத அடிப்படை வாதம், ஜாதிக் கொடுமைகள் இவைகள்தான் வலுவான காரணங்களாக அமையும்.

**சீனா போன்ற ஒரு பெரிய தேசத்தில் மத்தியிலிருந்து ஆட்சி செய்வது சாத்தியமாகிற போது இந்தியாவில் அது சாத்தியமில்லையா?**

சீனாவில் இப்போது இந்த அமைப்பு முறையை மாற்றி வருகிறார்கள். முன்னால் அந்தத் தவறை அவர்கள் செய்தார்கள். இப்போது திபேத் தனியாக ஆட்சி செய்யப்படுகிறது. ஷாங்காய் தனியாக ஆட்சி செய்யப்படுகிறது. மாநில சுயாட்சி என்பது படிப்படியாக அமுலுக்கும் கொண்டு வரப்படுகிறது. அதோடு சீனாவில் மொழிப் பிரச்னை இல்லை. 95 சதவீதம் மாண்டரின் சீன மொழி பேசும் மக்கள்தான்.

**மாநிலங்களில் உரிமைகளுக் கெல்லாம் விரோதமாக செக்ஷன் 356 இருக்கிறதே!**

இது ஒரு மோசடி. அரசியல் சட்டம் தொடுக்கும்போது விதிவிலக்காக எப்போதாவது பயன்படுத்தலாம் என்ற உரிமையை மத்திய அரசு துஷ்பிரயோகம் செய்துவிட்டது. இதுவரை 96 முறை இது பயன்படுத்தப்பட்டு மாநில சட்டசபைகள் கலைக்கப்பட்டன. இது அரசியல் சட்டத்திலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று நான் கூறுவேன்.

**இனக்குழுக்களின் உரிமைகள் பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

இனக்குழு என்று கூறுவது Ethnicஎன்ற வார்த்தையின் தமிழ் வடிவம் என நினைக்கிறேன். இனக்குழு என்பது ஒரு தந்திரமான வார்த்தையாக இருக்கிறது. அது ஒரு ஆதிவாசிக் குழுவாக இருக்கலாம்- ஒரே மொழி பேசும் குழுவாக இருக்கலாம். காலிஸ்தான் கோரிக்கையாளர்களைப் போல அடிப்படை மதவாதக் குழுக்களாக இருக்கலாம். இனக்குழுத் தன்மை (Ethnicity)என்பது ஒரு குழப்பமான கருத்து. கூர்க்காலண்ட் Ethnicஅடிப்படையில் கோரப்படுகிறது. ஆனால் சிக்கிமில் 75 சதம் நேபாளியர்கள் இருக்கிறார்கள். இவர்கள் இந்தக் கோரிக்கையை ஆதரிக்கவில்லை. காஷ்மீர் ஒரு இனமா, லடாக் ஒரு இனமா, ஜம்மு ஒரு இனமா..இது ஒரு Hold all மாதிரி. இதற்குள் எதையும் அடைக்கலாம். ஒன்று மட்டும் உறுதி. நாம் மிகப் பெரிய பாரம்பரியமிக்க மக்கள். ஒரு புதிய தேசியத்தை உருவாக்க முயன்று கொண்டிருக்கிறோம் என்பது மட்டும் உறுதி.

**ஈழப்பிரச்னை பற்றி!**

தனி ஈழம் கோரிக்கையை நான் முற்றிலுமாக ஆதரிக்கவில்லை. தமிழர்களுக்கு சிங்கள ஆட்சியால் கொடுமைகள் எல்லாம் நடந்தன என்பது உண்மைதான். தமிழ் பிரதேசங்களில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டார்கள் என்பது உண்மைதான். ஆனால், இவைகளெல்லாம் தனி ஈழம் கோரிக்கையை நியாயப்படுத்தாது. இப்போது நடந்த போராட்டங்களுக்குப் பிறகு ஸ்ரீலங்கா அரசும் பல உண்மைகளைப் புரிந்து கொண்டிருக்கிறது. ஆகவே ஸ்ரீலங்காவின் ஒரு பகுதியாகத்தான் ஈழத்தமிழர்கள் வாழவேண்டும்.

**பி.எல்.ஓ.பாலஸ்தீனக் கோரிக்கையும் எல்.டி.டி.இ.யின் தமிழ் ஈழம் கோரிக்கையும் ஒன்று என்று நினைக்கிறீர்களா?**

நிச்சயமாக ஒன்று இல்லை. இஸ்ரேல் என்ற ஒரு நாடு வலுக்கட்டாயமாக ஸ்தாபிக்கப்பட்டு பாலஸ்தீனியர்கள் தங்கள் தாயகத்தை இழந்தனர். அவர்கள் சரித்திரத்தால் ஏமாற்றப்பட்டவர்கள். ஏகாதிபத்தியத்தால் ஏமாற்றப்பட்டவர்கள். இஸ்ரேல் அவர்கள் பூமியைக் கவர்ந்து கொண்டதோடு பாலஸ்தீனியர்களைக் கொடுமைப்படுத்தினார்கள். ஆனால் ஈழம் அப்படியல்ல. இங்கு ஜார்க்கண்ட், உல்ஃபா போன்றவர்கள் தனிநாடு கேட்பதை ஒத்தது அது. அதோடு மட்டுமல்ல எல்.டி.டி.இ.இயக்கம் ஒரு பயங்கர இயக்கமாக மாறிவிட்டது. அமிர்தலிங்கம், பத்மனாபா, யோகேஸ்வரன், சபாரத்தினம், ராஜீவ்காந்தி போன்றவர்களை கொன்று குவித்தார்கள். கம்போடிய பால்போட் இயக்கம் போலவும் பெருவிலுள்ள ஷைனிங்பாத் போலவும் அவர்கள் இருக்கிறார்கள். ஜனநாயக முறைகளுக்கு விரோதமான அரைப்பாசிச அணுகுமுறையைக் கைக்கொள்கிறார்கள்.

ஸ்ரீலங்கா அரசை பேச்சுவார்த்தைக்கு கொண்டுவர ஒரு நிர்பந்தம் ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் இவர்களுக்கு பணஉதவி செய்வது, ஆயுதப் பயிற்சி அளிப்பது போன்ற தவறுகளை நாமும் செய்தோம் என்பதை மறந்துவிடக்கூடாது.

**ஏகாதிபத்தியம் என்பது இந்தக்கால கட்டங்களில் எந்த அளவுக்கு செயல்படுகிறது என்று நினைக்கிறீர்கள்?**

நாம் கடனைத் திருப்பித்கொடுப்பதில் பின்தங்கி இருக்கிறோம். அதனால் நம்மீது பொருளாதார நெருக்கடிகள் உருவாக்கப்படுகின்றன. இது ஒரு பக்கம். உலகச் சந்தையில் வேண்டுமென்றே அவர்கள் விலையைக் குறைத்து வைத்திருக்கிறார்கள். நாம் நலிந்திருக்கும் போது பலவிதமான நிறுவனங்கள், ஐ.எம்.எப், உலக வங்கி போன்றவை நம் உதவிக்கு வருகின்றன. ஆனால் அவைகளைப் பெறும் போது நாம் பல சமரசங்களைச் செய்து கொண்டு வருகிறோம். எல்ஸ்டின் மீது எனக்கு பெரிய மரியாதை இல்லை என்றாலும் அவர்கூட IMF நிபந்தனையை மறுத்துக் குரல் கொடுக்கிறார்.

நம்மால் முடியவில்லை. நமது நாட்டு Patent சட்டத்தை திருத்தி அமைக்கச் சொல்லி Dunkal Draft வற்புறுத்துகிறது. இந்தியா மலிவான விலையில் மருந்துகள் தயார் செய்ய முடியுமென்றாலும் ஏகாதிபத்தியங்கள் நம்மை விடுவதில்லை.

Patent-களுக்கு உரிமைப்பணம் கேட்கிறது. மருந்து விலையும் கூடுகிறது. அணுஆயுத முயற்சிகளுக்கு தடை விதிக்கிறது. செயற்கைக்கோள் விடுவதில் நாம் முன்னேற்றம் கண்டிருக்கிறோம். இந்த முன்னேற்றத்தை தடை செய்ய விரும்புகிறது அமெரிக்க ஏகாதிபத்தியம். ரஷ்யாவிடமிருந்து ஆலோசனைகள், சாதனங்களைப் பெற தடை விதிக்கிறது. இன்னும் பல வகைகளில் ஏகாதிபத்தியத்தின் கோரப்பிடியில் நாம் சிக்கிக் கொண்டுள்ளோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்கள் ராசிபலன் எப்படி?

சோமசன்மா

இங்கு தரப்படும் பலன்கள் சந்திரலக்கின கோசார பலன்கள். கோசாரபலன் என்பது ஒருவர் பிறந்த சமயத்தில் சந்திரன் எந்த ராசியில் இருந்தாரோ அந்த ராசியை முதலாக வைத்து, இப்பொழுது மற்றைய கிரகங்கள் எங்தெந்த வீட்டில் இருக்கிறார்கள் என்பதை வைத்துக் கணித்துப் பலன் சொல்வதாகும். உதாரணமாக, நீங்கள் பிறக்கும்போது அசுவினி நட்சத்திரம் என்று வைத்துக்கொள்வோம். அப்படியானால் சந்திரன் மேட ராசியில் இருக்கவேண்டும்.

ஒவ்வொரு கிரகமும் எத்தனையாவது வீட்டில் இருக்கிறார் என்பதை அறிந்து, அதன்படி பலன் சொல்ல வேண்டும்.

உங்களில் சிலருக்கு சந்திர லக்கினம் தெரியாமலிருக்கலாம். நட்சத்திரம் மாத்திரம் தெரியலாம். அப்படியானால், உங்கள் நட்சத்திரத்துக்குரிய ராசியைப் பின்வரும் அட்டவணை மூலம் தெரிந்துகொள்ளலாம்.

அசுவினி, பரணி,
கார்த்திகை முதல் கால்..........................................................**மேடம்**
கார்த்திகை பின் முக்கால், ரோகிணி,
மிருகசீரிடம் முன்னரை..........................................................**இடபம்**
மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை,
புனர்பூசம்
முன்முக்கால்..........................................................**மிதுனம்**
புனர்பூசத்து நாலாங்கால்,பூசம்,
ஆயிலியம்..........................................................**கர்க்கடகம்**
மகம், பூரம், உத்தரத்து
முதற்கால்..........................................................**சிங்கம்**
உத்தரத்து பின்முக்கால், அத்தம்,
சித்திரை
முன்னரை..........................................................**கன்னி**
சித்திரையின் பின்னரை, சுவாதி,
விசாகத்து முன்முக்கால்..........................................................**துலாம்**
விசாகம் நாலாங்கால்,
அனுஷம்,
கேட்டை..........................................................**விருச்சிகம்**
மூலம், பூராடம்,
உத்தராடத்து முதல்
கால்..........................................................**தனு**
உத்தராடத்து பின்முக்கால், திருவோணம்,
அவிட்டத்து முன்னரை..........................................................**மகரம்**
அவிட்டத்துப் பின்னரை, சதயம்,
பூரட்டாதி
முன்முக்கால்..........................................................**கும்பம்**
பூரட்டாதி நாலாங்கால், உத்தரட்டாதி,
ரேவதி..........................................................**மீனம்**

## மேடம்

சகுனம் பார்த்துத் தொழில் செய்யவேண்டியதுதான், அதற்காக எதிர்வரும் தொழிலுக்கு ஆகவேண்டிய முதலீடுகளைத் தாமதப்படுத்த வேண்டாம். தாரபலன் உபயோகமாயிருக்கும். உங்கள் நண்பர்கள் நல்லவர்கள்தானே, அதில் ஒருவர் ஏறுமாறாக இருந்துவிட்டால் என்ன செய்ய முடியும்? மாப்பிள்ளைமார் காத்திருக்க வேண்டும் என்று அசரீரி சொல்கிறது. கன்னிகைகளின் காலம் இது.

அதிஷ்ட எண்.3

## மிதுனம்

சகோதர வழியில் புதிய தொடர்பு ஏற்படப்போவது நல்ல காரியம்தானே. புதிய தொழிலை ஆரம்பிக்க ஏற்ற சந்தர்ப்பம் என்ற ஆலோசனைகள் ஏராளமாக வந்து கொண்டிருக்கும். லாப நட்டங்களைப்பற்றி ஆராய்வது நல்லது. கணக்குப் பரிசோதகர்கள் உங்களுக்குள்தானே இருக்கலாம். திடீரென ஏற்படும் உடல்நலக் குறைவு சகஜம்தான். பிரயாணத்தைப்பற்றி இப்போது என்ன அவசரம்?

அதிஷ்ட எண்.7

## இடபம்

வீட்டின் மதிப்புக் குறைகிறதென்றாலும் விற்பதில் அவசரப்பட வேண்டாம். சகோதரர் வழியில் சில லாபம் கிடைக்கலாம். புதிய நட்பு ஒன்றுக்கு இடமிருக்கிறது. இதில் பொருள் வருவாய் இருக்கும் என்ற எண்ணத்தைக் கைவிடுவது நல்லது. ஏற்கனவே இருந்த நிலையில் மாற்றம் வேண்டும் என்று அவசரப்பட வேண்டுமா? நாளும் பொழுதும் நாம் எதிர்பார்த்தபடி வந்துவிடா. தந்தை வழியில் புதிய செய்தி வருவது ஆறுதலைத் தரும்.

அதிஷ்ட எண்.4

## கர்க்கடகம்

எவ்வளவுதான் முன் எச்சரிக்கையாயிருந்தாலும் சில இடையூறுகள் வந்துதான் தீரும். ஆயினும் எதுவும் நிரந்தரமல்ல என்ற சித்தாந்தத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. கடன் தொல்லை விரைவில் நீங்கக் கூடிய அறிகுறிகள் இருப்பதால் செலவினங்களைக் கட்டுப்படுத்தச் சொல்கிறார்கள் பெரியவர்கள். போக்குவரத்தில் வாகன வசதி விரைவில் ஏற்படலாம்.புதிய தொழில் மாற்றம் உடனே ஏற்படாதாகையால் உள்ளதைக் கொண்டு சமாளிக்கச் சொல்கிறார்கள்.

அதிஷ்ட எண்.6

## சிங்கம்

சஞ்சலம் நீங்கி மகிழ்ச்சி பொங்கினால் யார்தான் குதூகலிக்க மாட்டார்கள்? புதிய மனை, புதிய தேட்டம் எல்லாம்தான் வரலாம். அத்துடன் சொல்ல வேண்டாம் தேக மெலிவும் சேர்ந்த வரவுதானே. நண்பர்களில் சிலர் ஏன் அப்படி ஒதுங்கிப் போகிறார்கள் என்ற கேள்வி எழலாம். உடன் பிறந்தாரும் அப்படியா? பிரயாணத்தைத் தள்ளிப் போடலாம்.

அதிஷ்ட எண்.1

## கன்னி

திடீரென வியாதியிலிருந்து எழுந்தவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்வது எதிர் பார்க்கப்பட வேண்டியதுதான். உடனே பிரயாணத்துக்குத் திட்டம் போடலாமா? குடும்பத்தில் ஒருவர் விலகிப் போவது தவறல்ல, புதிய வாழ்வைத்தேடித்தான் போகலாமல்லவா? தலைமைப்பீடம் ஆட்டம் காணலாம். எல்லாம் நன்மைக்கே என்பார்கள் பெரியவர்கள். உலகம் பலவிதம்.

அதிஷ்ட எண்.4

## துலாம்

வரவும் செலவும் சம நிலையில் இருப்பது எல்லாருக்கும் ஏற்படும் வாய்ப்பல்ல. பாவமும் புண்ணியமும் சம நிலையில் வரும்போதுதான் இறைவன் அருள் பாலிப்பான் என்று சைவ சித்தாந்திகள் சொல்வார்கள். இன்பமும் துன்பமுந்தான் சமநிலை கொள்ளலாம். அதிஷ்டக்காரர்தான். ஆனால் எத்தனை நாட்களுக்கு என்று கேட்கலாம். கிடைப்பதை அனுபவித்துக் கொள்ள வேண்டியதுதானே. புதிய நண்பர் வரும்போது புதிய செய்தி கொண்டு வரலாம்.

அதிஷ்ட எண்.9

## விருச்சிகம்

துலா ராசிக்காரரைப்போல அதிஷ்டம் பெறாவிட்டாலும் புதிய மகிழ்ச்சிக்கு சில காரியங்கள் நடைபெறுவது வரவேற்கப்பட வேண்டியதே. புதிய உறவும் புதிய செலவும் சேர்ந்துவிடலாம். எடுத்த காரியம் பலிப்பது எல்லாருக்கும் வாய்க்குமா? பிரயாணத்துக்கு உடனேயே திட்டம் போட இடமிருக்கிறது. வெளிநாடு என்றால் பக்கத்தில்தான் காணப்படும். தயார் படுத்துவதில் சில பல தாமதங்கள் ஏற்படலாம்.

அதிஷ்ட எண்.6

## தனு

நண்பர்கள் கவனிக்குமளவு சொந்தக்காரர் கவனிக்கவில்லை என்று கவலைப்படுவதில் அர்த்தமில்லை. சுற்றமும் துணையும் ஒன்றுதானே. எடுத்த காரியம் உடனே நிறைவேறுவது எப்போதும் சாத்தியமா? தாமதமானாலும் சித்தியடைந்தால் போதாதா? குடும்பத்தில் தேகநலக் குறைவு ஒரு பெரிய முட்டுக் கட்டையல்ல. எதற்கும் தைரியம் வேண்டும்.

அதிஷ்ட எண்.2

## மகரம்

பிரயாணத்தைப்பற்றிப் பேச்சு வந்தால் குடும்பத்தில் சில சிக்கல்கள் ஏற்படுவது எதிர்பார்க்கப்படவேண்டியதுதான். "ஆவீன மழை பொழிய அகமுடையாள் மெய் நோவ" என்ற பாடல் ஞாபகமிருக்கிறதா? அந்த நிலைமை சிலருக்கு ஏற்படலாம். எல்லாம் அனுபவித்துத் தீர வேண்டும்தானே. மழை நிற்க வேண்டிய காலமும் வரும். அப்புறம் வெளிச்சம் கிடைக்கும். எல்லாம் மனத்தைப் பொறுத்தது.

அதிஷ்ட எண்.4

## கும்பம்

எதிர்பார்த்த காரியம் சித்தியடையவில்லை என்று ஏமாந்து போகக்கூடுமானாலும் மனத்தைச் சோரவேண்டாம் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். புதிய வீடு வாங்கும் யோசனையைத் தள்ளி வைக்கச் சொல்கிறார்கள். மனத்தில் ஏற்பட்டிருக்கும் யோசனையை மறக்க ஏதாவது உபாயத்தைத் தேடிக்கொள்ளவும். எதிர்பாராத சிக்கல்களை வளர்த்துக் கொள்ள இடம் கொடுக்க வேண்டாம் என்றும் நண்பர்கள் சொல்வார்கள்.

அதிஷ்ட எண்.7

## மீனம்

புதிதாக ஏதோ வரவு என்று சொல்லப்படுகிறது. அதுபொருளா, பண்டமா, உறவா என்று சொல்லத் தெரியவில்லை என்றும் சொல்கிறார்கள். எதுவானாலும் லாபகரமான வரவுதான். எதற்கும் தலையைக் கொஞ்சம் தாழ்த்தி வைத்திருப்பது நல்லதென்பார்கள். பின்னால் வருத்தப்படத் தேவையா என்ன? சுற்றத்தவர்களும் நண்பர்களும் தேடி வருகிறார்கள், விரைவில்.

அதிஷ்ட எண்.9

## திருகோணமலை

15ம் பக்கத் தொடர்ச்சி

கூட அவர்.

இலக்கியத்துறையில் ஒரு சகலகலாவல்லவன் என்பதை நிரூபிக்கும் வகையில் 1962- ஆவணிமுதல் நாள் "திருக்கோணமலைக் குரல்" என்ற பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டிருந்தார். போள் யோசப், அசனார் ஆகியோரை உதவி ஆசிரியராகப் பணிபுரிய வைத்தார்.

1965 வைகாசித் திங்களில் 'மனிதம்' என்ற மாதாந்த சஞ்சிகை, தா.பி.சுவின் அட்டைப்படத்தோடு திருக்கோணமலைக் கவிராயரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது.

கலை இலக்கிய வாழ்க்கையில் எத்தகைய போராட்டங்களைச் சந்தித்து எதிர்த்து நின்றாரோ அதைவிட கூடுதலான கஷ்டங்களையும் சோதனைகளையும் எதிர்கொண்டு நின்று பல சாதனைகள் புரிந்த செயல்வீரர். கர்மவீரர். கவிராயரைப் பற்றி அவர் மனைவி மகேஸ்வரி கூறுகையில், "என் கணவருக்கு அரிச்சுவடி சொல்லிக் கொடுத்த மீனாட்சி ரீச்சர்தான் எனக்கும் பாடம் சொல்லிக் கொடுத்தார். எந்தக் கவிஅரங்கமாக இருந்தாலும் தன் முதல் குருவிற்குத்தான் அவர் வணக்கம் செலுத்தினார்.

"ஆனா என்னும் எழுத்தை அரிவரியில் சொல்லிவைத்த மீனாட்சி அக்காவின் மெய்யடிக்கு என் வணக்கம்" என்று கூறியே கவிதையைத் தொடங்குவார்.

என் கணவர் இன்றைய சமுதாயத்தின் ஒரு புரட்சிவாதி. தனக்குச் சரி என்று பட்டதைச் செய்யச் சிறிதும் தயங்காதவர். வெறும் பேச்சளவில் நிற்பவரல்ல. என்னை அவர் விரும்பிய போது நான் ஒரு சலவைத் தொழிலாளியின் மகள் என்பதை அவர் நன்கு அறிந்திருந்த போதும் அவர் என்னை ஏமாற்றவில்லை.

### பூதானம்

வினோபாஜி, காந்திஜி போன்று, அவரும் கீழ்மட்டமக்களின் மேம்பாட்டிற்கே அயராது பாடுபட்டார். அனைவராலும் ஒதுக்கப்பட்ட மக்களாகக் கருதப்பட்ட நகரசுத்தித் தொழிலாளர்களின் நலனுக்காகவும் கல்வி வளர்சிக்காகவும் பெரிதும் பாடுபட்டார்.

நகரசுத்தி தொழிலாளர்களில் பெண்கள் மது அருந்துவதை எதிர்த்து 1967ம் ஆண்டு கள்ளுக் கடைக்கு முன்பாக 3 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து சத்தியாக்கிரகம் செய்து வெற்றியும் பெற்றார்

அதுமட்டுமன்றி நகரசுத்தித் தொழிலாளர்களின் இருப்பிடத்திற்குச் சென்று பிள்ளைகளுக்கு மட்டுமன்றி முதியோருக்கும் பள்ளிக் கூடம் நடாத்திக் கல்வி கற்றுக் கொடுத்தார்.

நகரசுத்தித் தொழிலாளர்கள் வாழும் பகுதியை U.C லயின் என்றே அழைத்துவந்தார்கள். ஆனால் இன்று அது அண்ணாநகர் என்ற பெயருடன் புதுப் பொலிவு பெற்றிருக்கிறது என்றால் அவர் அந்த மக்களுக்கு அளித்த விழிப் புணர்ச்சியின் பிரதிபலிப்பென்றால் மிகையாகாது.

என் கணவர் சாதியை இழிவுபடுத்தி வெறுப்பவரல்ல. எந்தத் தொழிலையும் எந்த நேரத்திலும் செய்யத் தயங்கியதே கிடையாது. செய்யும் தொழிலே தெய்வம் என்ற கொள்கை கொண்டவர். மட்டக்களப்பில் கொல்லன் பட்டறையில் வேலை பார்த்திருக்கின்றார். சலவைத் தொழில் செய்திருக்கின்றார். திருக்கோணமலையில் கடல்தொழில் செய்திருக்கின்றார். சவரத் தொழிலும் செய்திருக்கின்றார் என்றார்.

### தன்மானம்

திருக்கோணமல்லக் கவிராயர், திருகோணமலை கடற்படையில் மப்பிளசில் சேர்ந்தார். 1959 தை 14ல் அவருக்கு யூனிபோம் வழங்கப்பட்டது. அதன் பின் கடற்படையிலேயே சிங்கப்பூருக்கு அனுப்பி வைக்கப்பட்டார். கடமையில் இருந்தபோதும் சிங்கப்பூரில் நடக்கும் கூட்டங்களிலும் கலந்து பேசியுள்ளார். ஒரு கூட்டத்தில் இவர் பேசிய பேச்சு சிங்கப்பூர் நாட்டின் கொள்கைக்கு ஒத்ததாக இல்லாமல் போகவே ஒரு மாத கால எல்லைக்குள் சிங்கப்பூரைவிட்டு வெளியேற வேண்டும் என்று அரசாங்கம் கட்டளைபிறப்பித்தது. தந்தையின் பொருள் உதவியால் இலங்கை வந்து சேர்ந்தார்.

1961ம் ஆண்டு ஆரம்பகாலத்தில் திருக்கோணமலை துறைமுகக் கூட்டுத்தாபனத்தில் லிகிதராகக் கடமை புரிந்தபோது, பண்டகசாலைக் காப்பாளராகப் பதவி உயர்வுபெற்று அதற்குரிய நியமனக் கடிதம் சிங்களத்தில் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அக்கடிதம் கிடைத்த மறுகணமே "நான் ஒரு சுத்த தமிழனுக்குப் பிறந்தவன், எனவே எனக்கு அனுப்பும் கடிதங்களை எனது மொழியில் பெறுவதையே நான் பெருமையாகவும் நீங்கள் எனக்குத் தரும் கௌரவமாகக் கருதுகின்றேன்" எனப் பதில் எழுதித் திருப்பி அனுப்பிவிட்டார். இதனால் ஒன்றரைமாதம் வேலையின்றி வீட்டில் இருந்தார்.

1990 செப்டம்பர் 25ல் காலன் அவரைத் சூழ்ந்து கொண்டான்.

தகவல்: தமிழ் தகவல் நடுவம் (UK)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நூல் மதிப்பீடு

நூல்: உலகமெல்லாம் வியாபாரிகள்.
எழுதியவர்: திருமதி ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்.
வெளியிட்டோர்: நீலமலர் வெளியீடு,
5, கச்சேரி லேன்,
மயிலாப்பூர், சென்னை 4.

பக்கங்கள் : 200.
விலை: ரூபா 20.

1970க்களில் இலங்கையில் நிகழ்ந்த இனக்கலவரங்களின் விளைவாக சொந்த நாட்டை விட்டு லண்டனில் வந்து குடியேறிய தமிழ்க் குடும்பங்களின் வாழ்க்கை மாறுதல்களை, முக்கியமாக தாம்பத்திய உறவில் ஏற்பட்ட கொள்கை மோதல்களை, "உலகமெல்லாம் வியாபாரிகள்" என்ற இந்த நாவல் படம் பிடித்துக் காட்ட முயன்றிருக்கிறது. கார்த்திகேயன் என்ற வாலிபனுக்கும் சகுந்தலா என்ற பெண்ணுக்குமிடையில் வளர்ந்த காதலை, வாலிபன் தகுந்த உத்தியோகத்தில் இல்லாமல் "கோப்பை கழுவுகிறான்" என்று உதாசீனம் செய்த பேரின்பநாயகம் தன் மகள் சகுந்தலாவை அமெரிக்காவில் உத்தியோகம் பார்த்த சிவநேசன் என்ற வாலிபனுக்கு திருமணம் செய்து வைக்கிறார்.

ஐந்து வருடங்களுக்குப் பிறகு முதல் தடவையாக சகுந்தலா தனது குழந்தையுடன் லண்டனுக்கு வந்த சமயத்தில் கார்த்திகேயனைச் சந்திக்க நேருகிறது. பழைய நெருக்கம் அரும்புகிறது. இந்த நெருக்கம் ஒரு புறம், அவளின் தங்கை மீனா ஒரு வெள்ளைக் காரனைக் காதலிக்கும் காட்சி இன்னொரு புறம், சிநேகிதி உஷா ஒரு வெள்ளைக் காரனை மணந்து விவாகரத்துச் செய்துவிட்ட காட்சி மற்றொரு புறம், அமெரிக்காவில் தன் கணவன் மற்றொரு பெண்ணுடன் சல்லாபம் செய்வது வேறொரு புறம் சகுந்தலாவைத் திண்டாடச் செய்கிறது. சகுந்தலாவின் காதலுக்கு இடையூறு செய்து மற்றொருவனுக்குக் கட்டிக் கொடுத்ததுபோல தந்தை பேரின்பநாயகம், இளையமகள் மீனாவின் காதலை உடைத்து மற்றொரு தமிழனுக்குக் கட்டிக்கொடுக்க முற்படும் சமயத்தில், எதிர்பார்த்ததுபோல, மீனா ஒரு கார் விபத்தில் இறந்து போகிறாள். விரைவில் கதை முடிய அமெரிக்காவிலிருந்து வந்த சிவநேசன் "நல்ல கணவன்" வேஷத்தில் சகுந்தலாவையும் குழந்தையையும் அழைத்துக் கொண்டு பாரிசுக்கு உல்லாச யாத்திரை போகிறான். திரும்பி கப்பலில் வரும் சமயத்தில் கார்த்திகேயன் தூரத்தேயிருந்து நோக்குகிறான்.

இந்தக் கதைக்கு "உலகமெல்லாம் வியாபாரிகள்" என்று கொடுத்த தலைப்பை நியாயப்படுத்த, பேரின்பநாயகத்தின் டாம்பிகமான வாழ்வு, முறையாகக் காதலித்தவர்களைத் தம் மக்கள் மணம் செய்ய விடாமல், டாம்பிகமான மாப்பிள்ளைகளையே அவர் முடித்துவைக்க கட்டாயப் படுத்துவது, கடைசியில் பேரின்பர் தமது சொத்தை ஒரே வாரிசான சகுந்தலாவுக்கு எழுதியதைக் கேட்ட சிவநேசன் பெரிய "வியாபாரத்துக்கு" திட்டம் போடுவது என்ற மாதிரி கதையை முடித்திருக்கிறார் ஆசிரியை.

ராஜேஸ்வரி இன்றைய தலைமுறை ஈழத்துப் பெண் எழுத்தாளர்களில் மிகவும் பிரபல்யம் பெற்றவர் என்பதை மறுப்பதற்கில்லை. இவருடைய இந்த நாவல் முன்பு 1978ல் எழுதப்பட்டது என்றும், "லண்டன் முரசு" இதழ்களில் தொடர்கதையாக வெளிவந்தது என்றும் ஆசிரியை தெரிவிக்கிறார். இதற்கு முன்னுரை எழுதப்பட்டது 1991ல். புதியதாக எழுதப்பட்ட முன்னுரைக்கும் நாவலில் சொல்லப்பட்ட கதைக்கும் சம்பந்தமில்லாமல் காணப்படுகிறது. 1978க்கும் 1991க்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட மாறுதல்கள், கட்சிகள், கொலைகள், இந்திய பாதுகாப்புப்படை என்பன போன்ற செய்திகள்மீது விமர்சனம்தான் இந்த நீண்ட முன்னுரையில் விவரிக்கப்படுகிறது. முன்பு கதை எழுதப்பட்ட 1978லேயே முன்னுரை எழுதியிருந்தால் நாவலின் காலவேறுபாட்டுணர்வைத் தவிர்த்திருக்கலாம். இந்த விமர்சகர் கணிப்பில் ராஜேஸ்வரியின் நாவல்களைவிட அவலது சிறுகதைப் படைப்புக்கள் சிறந்தவை.

–நாவலன்

# விநாயக சதுர்த்தி

விநாயக விரதங்களுள் மிக விஷேசமானது விநாயக சதுர்த்தி. இந்துக்கள் யாவரும் இதனை அனுஷ்டிப்பது வழக்கம். விநாயகப் பெருமான் உற்பவ தினம் இது என்பர்.

ஆவணி மாத வளர்பிறைச் சதுர்த்தியில் இவ்விரதம் அநுஷ்டிக்கப்படவேண்டும். கந்த புராணத்தில் கூட இவ்விரதம் சிறப்பித்து கூறப்பட்டுள்ளது. இந்த விரதம் ஆதமுனிவரால் பஞ்ச பாண்டவருக்கு உபதேசிக்கப்பட்டது. பாண்டவர்கள் இவ்விரதம் மூலமாக இழந்த நாட்டையும் அதிகாரத்தையும பெற்றனர்.

விரதமுறை அதிகால துயில் எழுந்து நீராடி நித்ய அனுஷ்டினங்களை முடித்து ஆலய தரிசனம் செய்ய வேண்டும். பகல் ஒரு நேரம் உணவு உட்கொள்ளலாம். நல்லெண்ணெய் சேர்க்கக்கூடாது என்பது விதி. இரவு பலகாரம் உண்ணலாம்.


சிவஸ்ரீ நாகேந்திர விக்னேஸ்வர குருக்கள்

# புதிய கட்சி

(சென்னை)

இந்திய பிரதான எதிர்க் கட்சிகளில் ஒன்றான திரு வி.பி.சிங் தலைமையிலான ஜனதா தள் கட்சியில் இருந்து 20 பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரிந்து சென்று புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்துள்ளனர். இது ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு, ஒரு படி பலத்தை அதிகரிக்க வாய்ப்டை உண்டு பண்ணியுள்ளது.

பணம் செய்யும் வேலை இது என– பிரதமர் நரசிம்மராவை வி.பி.சிங் சாடியுள்ளார்.



பிரபல மிருதங்க மேதை காரைக்குடி திரு கிருஷ்ணமூர்த்தியின் மாணவரான செல்வன் சொருபனின் மிருதங்க அரங்கேற்றம் இம்மாதம் 22ஆம் தேதி றைஸ்லிப் வின்ஸ்ரன் சேர்ச்சில் மண்டபத்தில் நடைபெற்றது. இந்தியாவிலிருந்து வந்த சங்கீதவித்வான் குற்றாலம் திரு வி நாகராஜனின் பாட்டுக்கு சொருபன் மிருதங்கம் வாசித்தார். திருமதி கலைவாணி இந்திரகுமார் வயலினும், திரு பாஸ்கரன் சிறீகரம் கடமும் வாசித்தனர்.

சொருபன் வற்போட்டைச் சேர்ந்த திரு திருமதி சர்வானந்தர் தம்பதியரின் புதல்வராவார்.


EXCEL TRAVELS

SPECIAL DISCOUNT AIRFARES

| | RTN | | RTN | | RTN | | RTN |
|---|---|---|---|---|---|---|---|
| COLOMBO | £ 440 | PARIS | £ 69 | BRUSSELS | £ 69 | SINGAPORE | £ 490 |
| MADRAS | £ 480 | AMSTERDAM | £ 69 | ROTTERDAM | £ 81 | KULALAMPUR | £ 490 |
| BOMBAY | £ 440 | MADRID | £ 84 | GENEVA | £ 129 | DHAKA | £ 510 |
| DELHI | £ 440 | FRANKFURT | £ 99 | OSLO | £ 129 | NEWYORK | £ 330 |
| KARACHI | £ 378 | DUBLIN | £ 75 | STOCKHOLM | £ 129 | TORONTO | £ 330 |
| GOA | £ 567 | MILAN | £ 118 | BILLUND | £ 143 | BANGKOK | £ 460 |
| MAURITIUS | £ 725 | BARCELONA | £ 99 | BIARRITZ | £ 144 | NAIROBI | £ 440 |
| | | BERLIN | £ 136 | COPENHAGEN | £ 132 | | |




39 LONDON ROAD
MITCHAM
SURREY
CR4 3AH




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழோசையின்

# மாபெரும் விளையாட்டுப் போட்டி

இடம்:

வில்ஸ்டன் ஸ்போர்ட்ஸ் சென்ரர்

WILLESDEN SPORTS CENTRE, DONNINGTON ROAD, WILLESDEN, LONDON NW10

**காலம்: அக்டோபர் 4ம் திகதி காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை**

**5 வயது முதல் 80 வயது வரை அனைவரும் பங்கு பற்றலாம்**



* ஓட்டப் போட்டிகள்
  100 M, 200M, 400M, 800M, 1500M
* தடை ஓட்டம்
* அஞ்சல் ஓட்டம்
  4 x 100 M / 4 x 400M
* கயிறடித்தோடல்
* நீளம் பாய்தல்
* பந்தெறிதல்
* கராத்தே
* குண்டெறிதல்
* சங்கீதக் கதிரை
* மூன்று கால் ஓட்டம்
  (தம்பதிகளுக்கு மட்டும்)
* சமநிலை ஓட்டம்
  (பெண்களுக்கு மட்டும்)
* விநோத உடை
* கயிறிழுத்தல் போட்டி
  (11 பேர் கொண்ட குழுகளுக்கு மட்டும்)
* மிதிவண்டி மெதுவாக ஓட்டும் போட்டி
* தலையணைச்சண்டை

மாலை 6 மணி முதல் 8 மணி வரை, பரிசளிப்பு விழாவும் திறந்த வெளியரங்கில் **DISCO DANCE**ம் நடைபெறும்

மதிய உணவு, சிற்றுண்டிகள், குளிர்பானங்கள், மதுபானம் ஆகியன பெற்றுக்கொள்ள வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது

பார்வையாளர் பிரவேசக் கட்டணம்
**£3**

விண்ணப்பப் பத்திரம் 16ம் பக்கத்தில் உள்ளது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்